நவம்பர் 2019

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

Rotary

Vol.2, Issue 6 | Annual Subscription ` 420





*இவான்ஸ்டனில், RI தலைமையகத்தில் RIPN சேகர் மேத்தா மற்றும் அவர் மனைவி ராஷி அவர்களை வரவேற்கும் RI தலைவர் மார்க் மேலோனி மற்றும் அவர் மனைவி கேய், RIPE ஹோல்கர் நாக் மற்றும் அவர் மனைவி சுசேன்.*



*கொல்கத்தா ராஜ் பவனில் மேற்கு வங்காள ஆளுநர் ஜக்தீப் தன்கர் அவர்களை சந்திக்கும் மேஜர் டோனர் தினேஷ் கோயல், RID 3110 DG கிஷோர் கட்ரூ, RIPN சேகர் மேத்தா, PDGs ஷரத் சந்திரா மற்றும் ராஜேந்திர அகர்வால்.*

# உள்ளே


**12** **நல்ல தலைவராக இருக்கவேண்டுமென்றால், பெரிய கனவுகளைக் காணுங்கள்: RIPN சேகர் மேத்தா**
ரோட்டரி நியூஸ் உடனான ஒரு உரையாடலில், சேகர் மேத்தா, ரோட்டரியின் வளர்ச்சி குறித்த அவரின் கனவுகளையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்கிறார்.

**23** **ரோட்டரிக்கு நோபல் பரிசு**
RIPN சேகர் மேத்தாவுக்கு, அவரின் சொந்த ஊரான கொல்கத்தாவில் ஒரு பாராட்டு விழா.

**28** **நூற்றாண்டு கொண்டாடும் RC கல்கத்தா**
கொல்கத்தா ரோட்டரி க்ளப்பின் நூற்றாண்டு விழாவை ரோட்டரியினர் கொண்டாடுகின்றனர்.

**40** **அறங்காவலர் தலைவர் RID 3201ல் சேவைத் திட்டங்களைப் பார்வையிட்டார்**
TRF தலைவர் கேரி ஹுவாங்க் அவர்களின் இந்திய பயணத்தைப் பற்றிய ஒரு செய்தி தொகுப்பு.

**48** **சங்கங்கள் மத்தியில் வரவேற்பைப் பெறும் நேர்வித நலன் திட்டம்**
பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட NCD தடுப்பு பிரச்சாரத்தின் முக்கிய அம்சங்கள்.

**50** **ஆனெட்களின் ப்ளாக்கிங் ஓட்டம்**
சென்னை ரோட்டேரியன்களின் பிள்ளைகள், பிளாஸ்டிக் பயன்பாட்டுக்கு எதிராகவும் ஒரு சுத்தமான நகரமாக்கவும் பிரச்சாரம்.

**52** **பெண்கள் சுகாதாரம் பற்றி ஆண்களுக்கும் விழிப்புணர்வு**
RC வாபி ரிவர்சைடின், மாதவிலக்கு கால சுகாதாரம் குறித்து ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சி.

**74** **வாழ்வுமுறை மருந்து: மருத்துவ கவனிப்பின் அடிப்படை மாற்றம்**
நோயாளிகள் ஆரோக்கியம் குறித்து அவர்களே பொறுப்பு எடுத்துக் கொண்டு அதன் முடிவுகளை அமைத்துக் கொள்ள வழிவகை செய்யும் லைஃப்ஸ்டைல் மெடிசின் கோட்பாடு பற்றிய ஒரு பார்வை.




















**அட்டைப்படத்தில்:** RIPN சேகர் மேத்தா, அவரது மனைவி ராஷி.

**படங்கள்:** ரஷீதா பகத்.

## காது கேளாத சிறுவர்களுக்கான சிறப்பான சேவை

*மைசூர் வெஸ்ட் ரோட்டரி கிளப்பின் காது கேளாத சிறுவர்களுக்கான முன்னோடிப் பணி குறித்த கட்டுரை, தரத்தில் சிறந்ததாக இருந்தது, அருமையான புகைப்படங்களுடன் அத்தனை அம்சங்களையும் உள்ளிட்டிருந்தது.*


*ஏ. என். ஐயண்ணா*
RC *மைசூர் மிட்டவுன்* — RID 3181

*மைசூர் வெஸ்ட் ரோட்டரி கிளப்பின் ஊக்கம் தரும் திட்டத்தை ரோட்டரி உலகத்துக்கு அறிமுகப்படுத்தியதற்கு ரஷீதா பகத் அவர்களுக்கு நன்றி. ரோட்டரி என்பதன் உண்மையான பொருளுக்கு அக்டோபர் இதழின் அட்டைப் பக்கத்தை பார்க்கலாம்- ஒமெர்கா ரோட்டரி கிளப், நீர் சேமிப்பில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது, இதன் மூலம் வறட்சியினால் பாதிக்கப் பட்டுள்ள சுமார் இரண்டு லட்ச மராத்வாடா குடி மக்களுக்கு பலன் கிடைத்து வருகிறது.*

*நவீன் ரமேஷ் கார்க்*
RC *சுனாம்* — RID 3090

*பார்வையிழந்தவர்களை பொருள்களிலிருந்தும் காது கேளாத மக்களை மக்களிடமிருந்தும் பிரிக்கிறது என்பது ஒரு உண்மையே. காது கேளாத சிறுவர்களுக்கு மைசூர் வெஸ்ட் ரோட்டரி கிளப் ஆற்றும் சேவை பாராட்டுக்குரியது. அத்தகைய சிறுவர்களுக்கு துரித காலத்தில் பயிற்சி கொடுத்து அவர்களை முக்கிய கல்வி திட்டத்தில் சேரச் செய்வது என்பது வசதியின்மை காரணமாக இது ஒரு சவாலான நடவடிக் கையாகும். ஒரு பிரம் மாண்டமான சாதனைக்காக கிளப் தலைவரையும் அதன் உறுப்பினர்களையும் நான் வணங்குகிறேன்.*

*சின்மயா மஹாபத்ரா*
RC *புவனேஸ்வர் ஹெரிட்டேஜ்* — RID 3262




*காது கேளாத சிறுவர் களுக்காக டமைசூர் வெஸ்ட் ரோட்டரி கிளப்பின் முன்னோடி சேவை குறித்த கட்டுரை படிக்கக்கூடியதும் பாராட்டக் கூடியதுமாகவும் இருந்தது. உலகத்திலிருந்து போலியோவை ஒட்டு மொத்தமாக ஒழிக்க,* RI *தலைவர் மார்க் மெலோனி, கிளப்புகள் கைக்கொள்ளக் கூடிய புதிய ஆலோசனை களை தெரிவித்துள்ளார். ஆசிரியர் குறிப்பு, குறைந்த வருமான குடும்பங்களின் பிள்ளைகள் மீது கவனம் செலுத்தியுள்ளது சரியானதே. இரண்டு* RI *டைரக்டர்கள்-பரத் பான்ட்யாவும் கமல் சாங்க்வியும் பின்பற்றக் கூடிய வகையிலான அறிவுரை தந்துள்ளனர். இந்த ஆண்டில் 30 மில்லியன் வசூலிப்பது என்ற* DG*க்களின் இலக்கு அடையப்படும் என நம்பப்படுகிறது. பயனுள்ள தகவலான ரோட்டேரியன் நடத்தைக் குறிப்பை வெளியிட்டதற்கு நன்றி. ஆதரவு புத்தகங்கள் பயணத்தை மகிழ்ச்சியாக்கு கின்றன* (Comfort books make travelling a pleasure) *என்ற கட்டுரை வாசகர் களுக்கு நல்ல ஒரு அறிவுரை. மக்களின் அவதிகளை குறைக்க மேற்கொள்ளப்படும் ரோட்டேரியன்களின் சேவைகள் குறித்து விவரமாக ஒவ்வொரு இதழிலும் தரப்படும் தொகுப்பை நான் படித்து மகிழ்கிறேன்.*

*பிலிப் முலப்போன்* M T
RC *திருவனந்தபுரம் சபர்பன்* — RID 3211

### கல்வியறிவு சவால்

2025 ஆண்டளவில் இந்தியாவை கல்வியறிவு கொண்ட நாடாக மாற்ற, பெரிய அளவு பங்கேற்பும் அர்ப்பணிப்பும் தேவைப்படுகிறது என்ற RIPN சேகர் மேத்தாவின் கனவை நனவாக்க, மத்திய மற்றும் மாநில அரசுகள், சமூக அமைப்புகள், மாணவர் சமூகம் ஆகியோரின் ஆதரவு மற்றும் ஒட்டு மொத்த தேசத்தின் ஆதரவு நமக்கு தேவை. 7 மாநிலங்கள் மட்டுமே 60 மற்றும் 70 சதவீத கல்வியறிவு உடையதாக விளங்குகின்றன. மற்ற மாநிலங்களில் 70 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ளது. புதிய தரவு, கணக்கெடுப்பு போல, 100 சதவீத அடிப்படையில் அமையவேண்டும். இதனை ஆவணப்படுத்துதல் உரிய நேரத்தில் புதுப்பிக்கப்பட வேண்டும். TEACH அமைப்பின் வெளியீடுகளிலிருந்து பிரச்ச னைப் பகுதிகளை கண்டறியலாம். கேரளாவின் PDGக்களிலிருந்து தன்னார்வலர்களை தேடி பயன்படுத்துவது ஆக்கபூர்வ முடிவு தரும்.

Dr NRUK கர்த்தா, RC திருவனந்தபுரம்
சபர்பன் — RID 3211

கல்வி, படிப்பறிவு பெறவேண்டும் என்றாலும் இலட்சக்கணக்கான இந்தியர்களுக்கு எட்டாத கனவாக உள்ளது என்று ஆசிரியர் கூறுவதை நான் ஏற்கிறேன். இதற்கு காரணமாக உள்ளது ஆதார வளங்களின் பற்றாக்குறையே. ஆனாலும் ஏழை மக்கள் தமது பிள்ளைகளுக்கு தரமான கல்வி வசதி தருவதற்கு தீவிரமாக உள்ளனர். போலியோ ஒழிப்பு போல, 2025ஆம் ஆண்டளவில், இந்தியாவை முழுக்க கல்வியறிவு பெற்ற நாடாக்கும் பிரம்மாண்டமான சவாலை ஏற்றுக்கொண்டுள்ள ரோட்டரிக்கு தலை வணங்க வேண்டும். RI தலைவர் மார்க் மெலோனி, உறுதியான மனதுடன், வலுவான ஆர்வத்துடன் போலியோவை ஆட்கொள்ள வலியுறுத்தியிருந்தார். RIDக்கள் பரத் பான்ட்யா, கமல் சங்வி ஆகியோர் அவர்களின் செய்திகளில் இந்த பயங்கர நோய்களில் தீவிர கவனம் செலுத்தியிருந்தனர். அனைத்து ரொட்டேரியன்களின் உதவியுடன்

இந்த நோய் ஒழிக்கப்பட்டுவிடும்.

ராஜ் குமார் கபூர்
RC ரூப்நகர் — RID 3080

## அருமையான பயணக் குறிப்பு

அந்தமான் தீவுகள் பற்றிய கிரன் ஜெஹராவின் விவரங்கள் அங்கு செல்லும் ஆர்வத்தை அதிகப்படுத்தியது. ஹேவ்லாக், நீல் மற்றும் ரோஸ் தீவுகள், நாம் இப்பொழுது அங்கு இருப்பதுபோல சித்தரிக்கப்பட்டிருந்தது. இக்கட்டுரையை படித்ததும், அந்தமான் குறித்த வேறு வழிகாட்டியேடு வேண்டாம் என்றே எவரும் நினைப்பார்!

O P காடியா, RC ஜெய்ப்பூர் கோஹினூர் — RID 3054

## அன்னபூர்ணா, ஒரு பெரிய திட்டம்

சோலாப்பூர் ரோட்டரி கிளப்பின் அன்னபூர்ணா திட்டம் வெற்றிகரமாக செயல்படுவதின் பின்னணியில், நேர்மை, பிடிப்பு மற்றும் துல்லியமான திட்டமிடல் காரணமாக இருந்தன. ஒரு 12 வருட திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த தற்போதைய நிர்வாகிகள் காட்டி வரும் வேகமும் ஆர்வமும் என்னை ஆச்சரியப்படுத்தின. வழக்கமாக இத்தகைய திட்டங்கள் மறக்கப்பட்டு வரும் நிலையில், ஆசிரியர் இத்தகைய ஒரு அற்புதமான சேவைக் கதையை வெளிக்கொணர்ந்ததற்கு எனது பாராட்டுக்கள். முன்னாள் தலைவர்களின் கொள்கைகளையும் முடிவுகளையும் ஒதுக்கிவிடாத கிளப்புக்கு பாராட்டுக்கள்.

அருண் குமார் டாஷ்
RC பாரிபதா — RID 3262

சோலாப்பூர் ரோட்டரி கிளப்பின் சிற்றுண்டி-உணவு முயற்சி போன்ற முன்னோடி கட்டுரைகள், இது போன்ற கூடுதல் மனிதத்துவ திட்டங்களை ஏழைமக்களுக்கு தீட்ட ஊக்கமாக அமையும். வயது முதிர்ந்தோர் கைகளில் ரோட்டரி சிற்றுண்டிப் பெட்டிகளை வைத்திருக்கும் புகைப்படம் ஊக்கம் தருவதாக உள்ளது. இத்தகைய படங்கள், கம்பளி ஆடைகள், காலணிகள், காகிதப் பொருள்கள், நோட்டு புத்தகங்கள், பள்ளிப் பைகள் ஆகியவற்றை ஏழைமக்களுக்கு வழங்கும் திட்டங் களை அமைக்க ஊக்கப்படுத்துவதாய் அமைகின்றன. மேலும், கை கழுவும் மையங்கள், கழிப்பிடங்கள், மழை நீர் சேகரிப்பு மற்றும் துணிப்பை வினியோகம் தொடர்பான திட்டங்கள், பூமியை பசுமையாகவும் பரிசுத்த மாகவும் வைக்கச் செய்யும்.

அசோக் ஜின்டால், RC நாபா கிரேட்டர் நாபா — RID 3090

செப்டம்பர் இதழில், வயது முதிர்ந்தோர் சிற்றுண்டிப் பெட்டிகளை வைத்திருக்கும் அட்டைப் படம் மிகவும் கவரும் வகையில் உள்ளது. (Little England of British India) லிட்டில் இங்க்லான்ட் ஆஃப் பிரிட்டிஷ் இன்டியா கட்டுரை சுவாரசியமாக இருந்தது. தனது பதவிக் காலத்தில் உறுப்பினர் சேர்க்கைக்கு அதிக கவனம் தரும் சேகர் மேத்தா அவர்கள் நான்காவது RI தலைவராக (2021–22) கிடைத்தது எங்களுக்கு பெருமை. உறுப்பினரை நீட்டிக்கச் செய்வது முக்கியமானது; பொது மக்கள் கருத்து மற்றும் கல்வியறிவு குறித்த RID 3291 ன் நிகழ்வில், மேத்தா அவர்கள் இது குறித்து தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஆகஸ்ட் இதழில் வெளியான கொல்கத்தாவில் ரோட்டரியின் நூற்றாண்டு பற்றிய கட்டுரை படித்து மகிழ்ச்சியடைந்தோம். Memories from Hamburg சிறப்பாகவும் சென்னையின் எலும்பு வங்கி குறித்த கட்டுரையும் சுவாரசியமாக இருந்தன.

சௌமித்ரா சக்ரபர்த்தி
RC டாலிகஞ்ஜ் — RID 3291

## பெண் குழந்தைக் கல்வி மீது சரியான கவனம்

பெண் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும் என்று RI டைரக்டர்கள் இருவரும் கல்வி குறித்து அதிக கவனம் தரும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்.

12 வருட சிற்றுண்டி-உணவு திட்டத்தை உத்வேகத்துடன் தொடர்ந்து செயல்படுத்தி வரும் சோலாப்பூர் ரோட்டரி கிளப்புக்கு மனமுவந்த பாராட்டுக்கள். வரும் ஆண்டுகளில் மேலும் இது போன்ற திட்டங்களை அவர்கள் கைக்கொள்வார்கள் என நாம் நம்புகிறோம்.

இன்னொரு மகா திட்டமான கோலார் தங்க வயலின் சயனைட் குவிப்பை பசுமையாக்குவதை செயல்படுத்தும் பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி கிளப்பை பாராட்டவேண்டும்.

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — RID 3000

ஒரு அமைப்பின் கௌரவம் என்பது அதன் உறுப்பினர்களின் நடத்தை பொறுத்து அமையும். அவர்கள்தான் அதன் தத்துவம் மற்றும் நம்பிக்கை களை நிலைநாட்டுபவர்கள். உயர் பதவிகளுக்கு கூடுதல் சரிபார்ப்பு தேவை. பல ஆண்டுகளாக, நான்கு-வழி-சோதனையின் குறிக்கோள் பற்றிய விழிப்புணர்வு பெரும்பாலான உறுப்பினர்களுக்கு இல்லாமல், பல ரோட்டரி கிளப்புகள் அமைப்பின் அடிப்படை கொள்கை களை ஒதுக்கி வைத்து விட்டுள்ளன.

இதனை தொடர விடாமல், வரைமுறைகள் தாழ்ந்து போவதை நிறுத்தும் வகையில் நாம் இது குறித்து சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

சுபாஷ் பன்ஸால்
RC அம்பாலா – RID 3080

தற்கொலையை தடுக்கும் பொருட்டு ஒரு பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ள ரோட்டராக்டர் துருவ் பாரிக், தலைவர், ISME ரோட்டராக்ட் கிளப், RID 3141 அவர்களை நான் பாராட்டுகிறேன். ரோட்டரியின் முதுகெலும்பும் ரோட்டேரியன்களின் எதிர்காலமும் ரோட்டராக்டர்கள்தான்.

ஜெய் மேத்தா
RC சுரேந்திரநகர் — RID 3060

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com*

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org.*



# ரோட்டரியும், ஐ.நா.வும் வரலாற்று உணர்வைப் பகிர்ந்து கொள்கின்றன

*பாசமிகு ரோட்டரி குடும்பத்தினர்களே...*

ஒவ்வொரு நவம்பர் மாதமும் ஐக்கிய நாடுகள் சபையில் நாம் கொண்டாடும் ரோட்டரி தினம், நமது அமைப்புகளுக்கிடையே உள்ள உறவுச் சரித்திரத்தின் ஒரு முக்கிய நினைவாகும். ஆனால் இந்த ஆண்டின் நிகழ்ச்சி, வழக்கமானதை விட அதிமுக்கியமானது ஏனெனில் 2020 ஜூன் மாதத்தில் கையெழுத்திடப்பட்ட ஐநா சார்ட்டரின் 75வது ஆண்டு அனுசரிப்புக்கு நாம் தயார்படுத்திக் கொண்டு வருகிறோம்.

நீங்கள் கேட்கலாம், ஏன் இந்த தினத்தை நாம் கொண்டாட வேண்டும் என்று. ரோட்டரிக்கு இது மிகவும் தொடர்புடையதாக இருக்கிறது, ஏனெனில், 1945ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பை துவக்க நடத்தப்பட்ட சான்ஃபிரான்சிஸ்கோ மாநாட்டுக்காக நாம் மிகவும் முக்கியத்துவம் கருதி பங்களித்தோம். இரண்டாம் உலகப் போர் காலம் முழுதும், உலக சமாதானத்தை நிறுவ வேண்டி இத்தகைய ஒரு அமைப்பை ஏற்படுத்தும் முக்கியத்துவத்தை பல வகைகளில் ரோட்டரி வெளியிட்டது.

ஐநா துவக்கத்துக்கு ரோட்டரி கிளப் ஊக்கப் படுத்தியது மட்டுமல்லாமல், அதன் கோட்பாடுகளை பரவலாக்கவும் இந்த இதழ் முக்கிய பங்கு வகித்தது. “தி ரோட்டரியன்” மற்றும் “ஃப்ரம் ஹியர் ஆன்” என்ற புத்தகத்தின் பல கட்டுரைகள் மூலம் ஐநா உருவாக்கத்துக் கான திட்டங்களை ரோட்டரி, உறுப்பினர்களுக்கு வழங்கியது. ஐநா சார்ட்டர் வரையும் கட்டம் வந்தபோது, சான்ஃபிரான்சிஸ்கோ மாநாட்டில் அமெரிக்க குழுவுக்கு ஆலோசகர்களாக நிறுவனம் செய்யப்பட்ட 42 அமைப்புகளில் ரோட்டரியும் ஒன்று.

ஒவ்வொரு அமைப்பும் மூன்று பிரதிநிதிகளுக்கான இருக்கைகள் தரப்பட்டன. எனவே RIன் 11 பிரதிநிதிகள் சுழற்சி முறையில் கலந்து கொண்டனர். ரோட்டரியின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள், பொது செயலாளர், தற்போதைய மற்றும் பல முன்னாள் தலைவர்கள் மற்றும் ரோட்டரியன் ஆசிரியர் ஆகியோர் அடங்குவர். கூடுதலாக, ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா, வடக்கு மற்றும் தெற்கமெரிக்கா ஆகிய நாடுகளின் ரோட்டரியினர், உறுப்பினர்களாக அல்லது அவர்கள் நாட்டின் குழுக்களுக்கு ஆலோசகர்களாக கலந்து கொண்டனர்.

ஐநாவுடன் நாம் வைத்திருக்கும் ஆழமான மற்றும் நீடித்த உறவு, கொண்டாடப்படக்கூடியதும் பாராட்டப் படக் கூடியதுமாகும். இப்போதிலிருந்து ஜூன் வரைக்கும் ரோட்டரி ஐந்து சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தும்: இந்த மாதம் 9ம் தேதி நியூயார்க் ஐநாவில் ரோட்டரி தினம்; சான்டியாகொ, சிலி, பாரிஸில், அடுத்த ஆண்டு மூன்று தலைவர்கள் மாநாடுகள்; ஹோனொலுலுவில் ரோட்டரி சர்வதேச மாநாட்டுக்கு முன்னதாக ஒரு இறுதி கொண்டாட்டம்.

நாம் கவனம் வைத்துள்ள பகுதிகள் (Areas of focus) குறித்த நமது செயல்பாடுகளுக்கும் ஐநாவின் லாபகர மேம்பாட்டு குறிக்கோள்கள் இடையே பல தொடர்புகள் உள்ளன. ரோட்டரி நன்கு புரிந்து கொண்டுள்ள நீண்ட கால அர்ப்பணிப்புடன் காலவரையறையுடன் செயல்பட்டால் மட்டுமே, குறிக்கோள்களை எட்டலாம். மேலும் நாம் அனைவருக்கும் சுத்தமான குடிநீரை தரமுடியாது, பசியை ஒழிக்க முடியாது, போலியாவை ஒழிக்க முடியாது. ஆனால் ஐக்கிய நாடுகள் போன்ற கூட்டாளிகளுடன் இணைந்தால் நம்மால் முடியும்.

தயவு செய்து நமது ஐந்து ஐநா கொண்டாட்டங்களில் ஒன்றிலாவது பங்கேற்க திட்டமிடுங்கள். இச்சிறப்பு நிகழ்வுகளின் செய்திகளை ஆண்டு முழுதும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆவலுடன் காத்திருக்கிறேன்.

**மார்க் டேனியல் மலோனி**
RI தலைவர்



# குறையைக் கண்டு அஞ்சாதவர்கள்

பிர்மிங்காமைச் சேர்ந்த 9 வயது டெய்ஸி-மே டெமெட்ரெ என்ற மாற்றுத்திறனாளிப் பெண் பாரிஸில் ஒரு ஃபேஷன் நிகழ்ச்சியில் அழகாக நடந்ததைப்பற்றிய ஒரு செய்தியை வாசித்தேன். தன்னுடைய இரண்டு செயற்கைக் கால்களைத் துணிவுடன் காட்சிப்படுத்தினார். அவர் வெறும் 18 மாதக் குழந்தையாக இருந்தபோது, அவருடைய கால்களை அறுவைச்சிகிச்சை செய்து அகற்றவேண்டியிருந்தது. அவர் செயற்கைக் கால்களுடன் நடக்கக் கற்றுக்கொண்டார். இது அவருடைய மூன்றாவது ஃபேஷன் நடையாகும். இதற்கு முன் நியூயார்க், லண்டனில் நடைபெற்ற இரண்டு ஃபேஷன் காட்சிகளில் அவர் நடந்துள்ளார்.

இதே சமயம், ஒரு கொடுமையான செய்தி உள்ளூரிலிருந்து வந்தது. மாற்றுத்திறனாளிகளுடைய உரிமைகளுக்காகப் போராடுகிறவர், போலியோவால் பாதிக்கப்பட்ட குஹு தாஸ் கொல்கத்தா விமான நிலையத்தில் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார். அவர் தன்னுடைய கேலிப்பர்களை அகற்றவேண்டும் என்று ஒரு பாதுகாப்பு அலுவலர் கேட்டுக்கொண்டிருக்கிறார்; தன்னுடைய கால் சட்டையை நீக்காமல் அவற்றை நீக்க இயலாது என்று அவர் சொன்னபோது, "அப்படியானால் உங்கள் கால் சட்டையை நீக்குங்கள்" என்று சொல்லியிருக்கிறார் அந்த அலுவலர். உலகம்முழுக்கப் பரவலாகப் பயணம் செய்துள்ள அந்தப் போராளி, அப்போது ஓர் ஐநா கருத்தரங்கில் பங்கேற்பதற்காகத் தில்லிக்குச் சென்றுகொண்டிருந்தார். அப்போது நிகழ்ந்த இந்த அவமானத்தை எதிர்த்து அவர் போராடியதால், கிடுக்கிமானியை நீக்காமல் செல்வதற்கு அவருக்கு அனுமதி கிடைத்தது.

இந்தக் கொடுமையை இன்னும் மோசமாக்குவது போல், அவருடைய சக ஊழியர் ஜீஜா கோஷும் ஒரு பிரச்னையைச் சந்தித்தார். செரிப்ரல் பால்ஸியைக் கொண்ட இவர், சக்கர நாற்காலியில் இருந்தார். இவரைக் கவனித்துக்கொள்ள இன்னொருவர் இல்லாவிட்டால், இவரை விமானத்தில் அனுமதிக்க இயலாது என்று விமானச்சேவை நிறுவனம் முதலில் மறுத்துவிட்டது. நகை முரணான விஷயம், இந்த இரு பெண்களும், மாற்றுத்திறனாளிப் பெண்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு கருத்தரங்கில் கலந்துகொள்ளச் சென்றுகொண்டிருந்தார்கள்.

இதனால், ஊடகங்களில், பரபரப்பு உண்டானது. கொல்கத்தா விமானநிலைய அலுவலர்கள் இந்த இரு பெண்களிடமும் மன்னிப்புக் கேட்டார்கள். இந்த நிகழ்ச்சியைப்பற்றி ஒரு நண்பர் சமூக ஊடகத்தில் பதிவுசெய்தபோது, இது மிகவும் நுண்ணுணர்வற்ற, மனிதத்தன்மையற்ற, அதிர்ச்சியளிக்கிற நிகழ்ச்சி என்று நான் பதிலளித்தேன். நம்முடைய பாதுகாப்பு அலுவலர்கள் நம்முடைய மாற்றுத்திறனாளி மக்களுடைய உரிமைகள், நுண்ணுணர்வுகளைச் சிறிதும் அறியாமலிருப்பது சரியில்லை என்றேன். உடனே, அதற்கு ஒரு பதில் வந்தது: தீவிரவாதத் தாக்குதல்களைத் தவிர்க்கவேண்டுமென்றால், இது அவசியம். பாதுகாப்பு உறுதியாக இருக்கவேண்டும்தான்; விமானத்தில் பயணம் செய்யும் எல்லாருடைய பாதுகாப்பும் உறுதிசெய்யப்படவேண்டும்தான்; ஆனால், மாற்றுத்திறனாளி மக்களை அவமானப்படுத்தாமல் இதைச் செய்ய ஒரு வழி கண்டிப்பாக இருக்கிறது.

இந்தப் பெண்கள் எவ்வளவு துணிச்சலானவர்கள், தங்களுடைய ஊனம் வழங்கிய சவால்களை இவர்கள் எவ்வளவு சிறப்பாக எதிர்கொண்டிருக்கிறார்கள் என்பவற்றை உறுதிப்படுத்தும் ஓர் உண்மை, UKவிலுள்ள லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் இயலாமைபற்றிப் படித்து முதுகலைப் பட்டம் பெற்றிருக்கும் ஜீஜா, குழந்தையொன்றைத் தத்தெடுத்திருக்கும் முதல் இந்தியச் செரிப்ரல் பால்ஸிப் பெண் ஆவார். மூன்று வயதில் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட குஹு, மாற்றுத் திறனாளிப் போராளிகள் அமைப்பின் செயலாளர். இந்தப் பெண்கள் இருவரும், பல்லாயிரக்கணக்கான மற்றவர்களும், தங்களுடைய ஊனத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, மாற்றுத்திறனாளிகளுடைய உரிமைகளுக்காகப் போராடும் சவாலைக் கையிலெடுத்துக்கொண்டுள்ளார்கள். கல்வி உரிமை, பணிக்குச் செல்லும் உரிமை, அணுகல், வீடுகளில் வசித்தல், எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு கண்ணியமான வாழ்க்கையை வாழும் மாற்றுத்திறனாளிகளுடைய உரிமைகளுக்காகப் போராடும் இவர்களை நாம் வணங்கினால் போதாது, தொடர்ந்து ஆதரிக்கவேண்டும். ரோட்டரியன்களுக்கு இளம்பிள்ளைவாதத்தின் கொடுமையான தாக்கங்களைப்பற்றிச் சொல்வது, மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுத் தருவது போன்றது தான். ஆனால், இதுபோன்ற நிகழ்ச்சிகள், மாற்றுத்திறனாளிகளுடைய உரிமைகளுக்காகவும் கண்ணியத்துக்காகவும் இன்னும் தீவிரமாகப் போராடவேண்டும் என்கிற பொறுப்புணர்ச்சியை நமக்கு வழங்குகின்றன.■



ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG N Manimaran |
| RI Dist 2982 | DG Natesan A K |
| RI Dist 3000 | DG Dr A Zameer Pasha |
| RI Dist 3011 | DG Suresh Bhasin |
| RI Dist 3012 | DG Deepak Gupta |
| RI Dist 3020 | DG M Veerabhadra Reddy |
| RI Dist 3030 | DG Rajendra Madhukar Bhamre |
| RI Dist 3040 | DG Dhiran Datta |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Bina Ashish Desai |
| RI Dist 3060 | DG Anish Shah |
| RI Dist 3070 | DG Sunil Nagpal |
| RI Dist 3080 | DG Jitendra Dhingra |
| RI Dist 3090 | DG Rajeev Garg |
| RI Dist 3100 | DG Hari Gupta |
| RI Dist 3110 | DG Kishor Katru |
| RI Dist 3120 | DG Sanjay Agrawal |
| RI Dist 3131 | DG Ravee Dhotre |
| RI Dist 3132 | DG Suhas Laxmanrao Vaidya |
| RI Dist 3141 | DG Harjit Singh Talwar |
| RI Dist 3142 | DG Dr Mohan Chandavarkar |
| RI Dist 3150 | DG Pandi Sivannarayana Rao |
| RI Dist 3160 | DG Nayan S Patil |
| RI Dist 3170 | DG Dr Girish R Masurkar |
| RI Dist 3181 | DG Joseph Mathew |
| RI Dist 3182 | DG Ramesh B N |
| RI Dist 3190 | DG Dr Sameer Hariani |
| RI Dist 3201 | DG R Madhav Chandran |
| RI Dist 3202 | DG A Karthikeyan |
| RI Dist 3211 | DG Shirish Kesavan |
| RI Dist 3212 | DG S Sheik Saleem |
| RI Dist 3231 | DG Sridar Balaraman |
| RI Dist 3232 | DG G Chandramohan |
| RI Dist 3240 | DG Dr Debasish Das |
| RI Dist 3250 | DG Gopal Khemka |
| RI Dist 3261 | DG Ranjeet S Saini |
| RI Dist 3262 | DG Debasish Mishra |
| RI Dist 3291 | DG Ajay Agarwal |

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

# RI இயக்குனர்



## ஒருவருக்கு ஒருவர்

தனிப்பட்டமுறையில், நம்முடைய உலகை இன்னும் சிறப்பாக்குவதற்கு நம்மால் அதிகம் செய்ய இயலாமலிருக்கலாம். ஆனால், நம்முடைய ரோட்டரி அறக்கட்டளையின்வழியாக நாம் நிறையச் செய்யலாம். அமைதிக்காகப் பணிபுரிவதற்கு ரோட்டரியினருக்குக் கிடைக்கும் மிகச்சிறந்த வாய்ப்புகளில் ஒன்று, ரோட்டரி அறக்கட்டளையின் நிகழ்வுகளின்வழியாகச் செயல்படுவது. அமைதி என்பது, போர் இல்லாத நிலைமட்டுமில்லை, அது ஒரு வாழ்க்கைத்தரமும் ஆகும். அமைதிக்கு உணவு, படுக்கை மற்றும் அடிப்படைக் கல்வி தேவை என்று நம்புகிறேன். நம்முடைய ரோட்டரி அறக்கட்டளை அந்த அமைதிக்காகப் பணியாற்றுகிறது.

நவம்பர் மாதம், ரோட்டரி அறக்கட்டளை மாதமாகும்; அறக்கட்டளையைப் பற்றியும் அதன் பல மதிப்புமிக்க நிகழ்சிச்களைப் பற்றியும் மீண்டும் கற்றுக்கொள்ள, மீண்டும் நம்மை அர்ப்பணித்துக் கொள்ள ஏற்ற நேரம் இது. ரோட்டரிக்கு உண்மையான பன்னாட்டுத்தன்மையை வழங்கும் தூணாகிய ரோட்டரி அறக்கட்டளையின்மீது நம்முடைய கவனத்தைச் செலுத்தவேண்டிய நேரம் இது.

ஆர்ச் க்ளம்ஃபின் மனத்தில், இதயத்தில் இந்தத் திட்டம் சிறிதாக உருப்பெற்ற போது, அது உலகத்தில் நல்லவற்றைச் செய்வதற்கான ஓர் அறக்கட்டளை நிதியாக இருந்தது. இன்று அது மனிதாபிமானச் சேவையின் மிக முக்கிய அமைப்புகளில் ஒன்றாக வளர்ந்துள்ளது; மதிக்கப்படுகிற, வெளிப்படையான, சமீபகாலமாக அதிக விரைவாகச் செயல்பட்டுவருகிற, உலகில் மிக நன்கு கையாளப்படும் தொண்டு நிறுவனங்களில் ஒன்றாக இது உள்ளது.

ரோட்டரியினர் ரோட்டரியின் இதயம் என்றால், TRFதான் அதன் முதுகெலும்பு. நாம் செய்யும் பெரும்பாலான பணிகள், TRF இருப்பதால் தான் சாத்தியமாகின்றன. நம் முன்னே இருக்கும் வாய்ப்புகள் பல சூழ்நிலைகளில் வெற்றிக் கதைகளாக மாறும், TRFக்கு நன்றி!

அதனால்தான், TRFன் முயற்சியான EREY (ஒவ்வொரு ரோட்டரியனும் ஒவ்வோர் ஆண்டும்) பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு ரோட்டரியினரும் ஒவ்வோராண்டும் TRFக்குப் பங்களித்தால்தான், TRFன் நிலைத்தன்மையையும் நீண்டநாள் நலனையும் உறுதிசெய்ய இயலும்.

TRFக்கு வழங்குவதில் இருக்கும் மகிழ்ச்சியை அனுபவியுங்கள். பசி, நலன், எழுத்தறிவு, நீர் மற்றும் இளம்பிள்ளைவாத ஒழிப்பு ஆகிய முக்கியப் பகுதிகளில் உங்கள் பரிசு ஒரு மாறுபாட்டைக் கொண்டுவரப்போகிறது என்பதை அறியுங்கள்.



**Dr பரத் பாண்ட்யா**
RI இயக்குனர், 2019–21

# களின் செய்திகள்

## நம்முடைய அறக்கட்டளையின் சிறந்த பணி



நம்முடைய பிராந்தியங்களில் உள்ள ரோட்டரியினர், ஒட்டுமொத்த ரோட்டரி உலகமும் பெருமைப்படவேண்டிய ஒரு தருணம் இது. உங்களுடைய பங்களிப்புகளால் உண்டாக்கப்பட்ட ரோட்டரி அறக்கட்டளை, உலகெங்குமுள்ள சமூகங்களில் ஆயிரக்கணக்கானவர்களுடைய வாழ்க்கைகளை மேம்படுத்த உதவிக்கொண்டிருக்கிறது. பொதுநலப் பணிகளை அளவிடும் “சாரிட்டி நாவிகேட்டர்” அமைப்பு, இந்த அறக்கட்டளைக்குத் தொடர்ந்து உயர்ந்த மதிப்பெண்களை வழங்கி வந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில், நம்முடைய அறக்கட்டளைக்கு வழங்குவதில் நாம் இரண்டாவது நிலைக்கு உயர்ந்துள்ளோம் என்பதை எண்ணி நம் பிராந்தியம் பெருமைகொள்ளவேண்டும். பல ஆண்டுகளாகப் பெற்றபின்னர், இப்போது இந்தியா அறக்கட்டளைக்கு வழங்கும் ஒரு நாடாக உள்ளது; சென்ற ஆண்டு, நாம் பெற்றதைவிட அதிகம் வழங்கினோம்!

இது நமக்கு மகிழ்ச்சி தரும் ஒரு விஷயமாக இருக்கவேண்டும்; ஏனெனில், இப்போது இந்திய ரோட்டரியன்கள் இந்தியாவுக்கு வெளியிலுள்ள சங்கங்களுடன் இணைந்து, அவர்களுடைய நாடுகளில் பன்னாட்டு நல்கைகளை நிகழ்த்துகிறார்கள் என்பது உண்மை. இயற்கைப் பேரழிவுகளின்போது, பாதிக்கப்பட்டவர்களுக்குத் தங்களுடைய உடனடி மற்றும் தாராளமான பங்களிப்பின்மூலம் அவசர கால உதவிகளைக் கிடைக்கச்செய்வதில், அல்லது, குறைந்த செலவில் பாதுகாப்புத் தங்குமிட வீடுகளைக் கட்டுவதில் ரோட்டரியன்கள் சிறந்து விளங்குகிறார்கள். இதற்குச் சில எடுத்துக்காட்டுகள், 2001ல் குஜராத்தில் அழிவுண்டாக்கிய நிலநடுக்கத்துக்குப்பின்னும், சமீபத்தில் கேரளத்திலும் கர்நாடகத்திலும் இன்னும் பல இடங்களிலும் அவர்கள் ஆற்றிய சேவைகள்.

உங்களுடைய தாராள மனப்பான்மையாலும், கடந்த பல ஆண்டுகளில் நீங்கள் வழங்கியுள்ள பல்லாயிரக்கணக்கான மணிநேரத் தன்னார்வலர் பணியாலும், நம்முடைய சின்னமாகிய ரோட்டரி சக்கரம் குஜராத், மகாராஷ்டிரா (லாட்டூர் நிலநடுக்கத்துக்குப்பிறகு) போன்ற இடங்களில் நாம் கட்டியுள்ள ஒட்டுமொத்தக் குடியிருப்புகளில் பெருமையுடன் பதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவை இளம்பிள்ளைவாதமற்ற நாடாக்கவும் நாம் உதவியுள்ளோம்!

உங்களுடைய தாராளமனப்பான்மைக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். தொடர்ந்து TRFக்கு வழங்கும்படி உங்களைக் கோருகிறேன். அக்கறை காட்டுவதும், நம்மிடம் உள்ளது எதுவானாலும் அதைப் பகிர்ந்துகொள்வதுமதானே இந்தியப் பண்பாடு! நம்முடைய பெற்றோர் இதைச் செய்ததை நாம் பார்த்துள்ளோம்; அவர்களுடைய சிறந்த எடுத்துக்காட்டை நாம் பின்பற்றுவோம்.

**கமல் சங்வி**
RI இயக்குனர், 2019–21


### Board of Permanent Trustees & Executive Committee

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPN Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID Yash Pal Das | RI Dist 3080 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |

**Executive Committee Members (2019–20)**

| | |
|---|---|
| DG Deepak Gupta<br>Chair – Governors Council | RI Dist 3012 |
| DG Nayan Patil<br>Secretary – Governors Council | RI Dist 3160 |
| DG Dhiran Datta<br>Secretary – Executive Committee | RI Dist 3040 |
| DG Ajay Agarwal<br>Treasurer – Executive Committee | RI Dist 3291 |
| DG Rajendra Madhukar Bhamre<br>Member – Advisory Committee | RI Dist 3030 |



### ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

### ROTARY NEWS / ROTARY SAMACHAR

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website :www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

## District Wise TRF Contributions as on September 2019

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions |
|---|---|---|---|---|---|
| | | | India | | |
| 2981 | 7,923 | 101 | 0 | 29 | 8,054 |
| 2982 | 11,648 | 4,953 | 161,362 | 0 | 177,963 |
| 3000 | 15,259 | 0 | 3,703 | 0 | 18,962 |
| 3011 | 9,427 | 104 | 21,657 | 0 | 31,189 |
| 3012 | 155,397 | 600 | 32,000 | 0 | 187,997 |
| 3020 | 8,144 | 9,756 | 0 | 12,029 | 29,928 |
| 3030 | 2,326 | 0 | 1,423 | 0 | 3,749 |
| 3040 | 4,488 | 0 | 5,471 | 0 | 9,959 |
| 3053 | 23,903 | 32 | 331 | 0 | 24,266 |
| 3054 | 1,420 | 1 | 35,809 | 0 | 37,230 |
| 3060 | 8,032 | 1,436 | 5,229 | 1,014 | 15,712 |
| 3070 | 12,702 | 25 | 6,733 | 0 | 19,460 |
| 3080 | 25,907 | 3,544 | 12,875 | 1,013 | 43,340 |
| 3090 | 3,858 | 0 | 0 | 0 | 3,858 |
| 3100 | 21,110 | 0 | 0 | 0 | 21,110 |
| 3110 | 2,379 | 1,410 | 0 | 0 | 3,789 |
| 3120 | 19,578 | 0 | 0 | 0 | 19,578 |
| 3131 | 48,244 | 258 | 74,317 | 38,000 | 160,819 |
| 3132 | 2,062 | 0 | 5,355 | 15,000 | 22,417 |
| 3141 | 150,788 | 3,608 | 154,643 | 41,392 | 350,431 |
| 3142 | 43,961 | 168 | 0 | 0 | 44,130 |
| 3150 | 29,645 | 5,192 | 11,667 | 87,829 | 134,333 |
| 3160 | 1,578 | 29 | 0 | 0 | 1,607 |
| 3170 | 16,295 | 286 | 4,006 | 0 | 12,574 |
| 3181 | 78,133 | 347 | 0 | 0 | 78,480 |
| 3182 | 7,689 | 0 | 1,777 | 0 | 9,466 |
| 3190 | 54,899 | 3,309 | 3,171 | 0 | 61,380 |
| 3201 | 22,178 | 104 | 16,998 | 0 | 39,280 |
| 3202 | 31,659 | 7,589 | 2,035 | 1,000 | 42,283 |
| 3211 | 719 | 42 | 46,879 | 290 | 47,930 |
| 3212 | 11,663 | 1,720 | 1,050 | 0 | 14,432 |
| 3231 | 898 | 56 | 2,170 | 0 | 3,124 |
| 3232 | 4,709 | 14,468 | 43,309 | 7,500 | 69,986 |
| 3240 | 13,423 | 0 | 32,511 | 0 | 45,933 |
| 3250 | 11,841 | 0 | 85 | 0 | 11,756 |
| 3261 | 205 | 0 | 26,727 | 0 | 26,932 |
| 3262 | 8,331 | 1,514 | 5,507 | 0 | 15,353 |
| 3291 | 23,597 | 0 | 22,646 | 0 | 46,243 |
| **India Total** | **896,020** | **60,654** | **733,265** | **205,097** | **1,895,036** |
| 3220 Sri Lanka | 20,430 | 3,000 | 1,150 | 0 | 24,580 |
| 3271 Pakistan | 0 | 0 | 20 | 0 | 20 |
| 3272 Pakistan | 1,392 | 225 | 300 | 0 | 1,917 |
| 3281 Bangladesh | 17,904 | 0 | 32,000 | 2,000 | 51,904 |
| 3282 Bangladesh | 16,113 | 149 | 0 | 1,000 | 17,262 |
| 3292 Nepal | 68,446 | 12,093 | 189,280 | 0 | 269,819 |
| **South Asia Total** | **1,020,305** | **76,121** | **956,015** | **208,097** | **2,260,538** |
| **World Total** | **22,268,027** | **5,024,932** | **4,094,427** | **6,677,448** | **38,064,834** |

Source: RI South Asia Office

WHERE WILL ROTARY GLOBAL REWARDS TAKE YOU?



THE MEMBER BENEFIT PROGRAMME THAT OPENS UP A WORLD OF OPPORTUNITIES.

Rotary

SEE MORE AT ROTARY.ORG/GLOBALREWARDS

NiveshGuru™
SAMPATTI KI UNATTI

# GROW YOUR WEALTH

NiveshGuru, a one-stop solution for all your investment needs.




**Nivesh Guru Advisors Private Limited**
**68-B, Nariman Bhavan, Nariman Point, Mumbai - 400021**

+91 22 2288 0808 info@niveshguru.in www.niveshguru.in


# நல்ல தலைவராக இருக்கவேண்டுமென்றால், பெரிய கனவுகளைக் காணுங்கள்: RIPN சேகர் மேத்தா

ரஷீதா பகத்



ரோட்டரி பன்னாட்டுத் தலைவர் வேட்பாளர் (RIPN) சேகர் மேத்தா ரோட்டரியில் சேர்ந்து ஆறு ஆண்டுகளுக்குள், 1991–92ல் சங்கத் தலைவரானார், 1999–2000ல் DG ஆனார், 2011–12ல் RI இயக்குநர் ஆனார். அவர் DGயாக ஆனபோது அவருடைய வயது 38தான். அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால், இந்தத் தலைமைப் பொறுப்புகளைப் பெறுவது கடினமாகவே இருக்கவில்லை. நீங்கள் தலைமை தாங்கவேண்டும் என்று பிறர் விரும்பும்போதுதான் நீங்கள் தன்னார்வலர் நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவேண்டும், நீங்கள் அதை விரும்பும்போது இல்லை. RI தலைவர் பொறுப்புக்கான நேர்காணலின்போது, நான் இந்தப் பொறுப்புக்குத் தகுதியுள்ளவன் என்று நினைப்பது ஏன் என்று கேட்கப் பட்டபோது நான் இதைத்தான் சொன்னேன். அவர் ரோட்டரியில் சேர்ந்தபோது இந்தக் கேள்விக்கு இவ்வாறு பதிலளித்தார்; அவர் சங்கத்தின் தலைவராகவோ, பின்னர் DG அல்லது RI இயக்குநராகவோ ஆக விரும்பக்கூட இல்லை. நீங்கள் ஏன் உங்களுடைய பெயரை DGக்கு அல்லது இயக்குநருக்கு அல்லது RI தலைவருக்குச் சமர்ப்பிக்கக்கூடாது என்று மக்கள் என்னிடம் கேட்டபோதுதான் நான் அவ்வாறு செய்தேன். நீங்கள் அந்தப் பொறுப்புக்குத் தகுதியுள்ளவர் அல்லது பொருத்தமானவர் என்று, உங்களைச்



# ஒரு பார்வையில்



**உடற்பயிற்சி:** *தற்போது நான் உடற்பயிற்சி நடத்தல், யோகாசனத்தில் ஈடுபடுகிறேன். ஆனால், நீடித்துநிற்கும் அடிப்படையில் இதைச் செய்வதில்லை. இயல்புக்கு மாறான என்னுடைய பயணத்திட்டங்கள் உடற்பயிற்சி செய்தலைக் கடினமாக்குகின்றன; நான் என்னுடைய நாளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அதிகாலை விமானங்களில் செல்கிறேன்; இரவு நெடுநேரம் கழித்துத் திரும்பிவருகிறேன்.*

**உணவு:** *நான் சைவ உணவு உண்கிறவன். குறிப்பாக, கொல்கத்தாவில் சாலையோர உணவுகளை ரசிக்கிறவன். பயணங்களின்போது நான் எப்போதும் தென்னிந்தியக் காலை உணவை உண்பேன்.*

**இசை:** *எனக்கு இசை மிகவும் பிடிக்கும்; பெரும்பாலும் பாலிவுட் இசை கேட்பேன். ஆனால், எனக்குப் பிடித்தவை பழைய பாடல்கள்தான். நான் இளைஞனாக இருந்தபோது, மேற்கத்திய இசையையும் ரசித்தேன்.*

**வாசித்தல்:** *எனக்குப் பிடித்த எழுத்தாளர் ஜெஃப்ரே ஆர்ச்சர். அவருடைய விவரிப்பு மிகச்சிறப்பானது.*

**மதம்:** *நான் கடவுளை நம்புகிறேன்; நான் இளைஞராக இருந்தபோது நான் கடவுளை நம்பவில்லை, ஒருநாள் என்னுடைய தந்தை என்னிடம் சொன்னார், "சேகர், ஒரு நாளைக்கு ஐந்து நிமிடங்களாவது நீ கடவுளை எண்ணுவதில் செலவிடாவிட்டால், இந்த அமைப்பு நம்முடைய குடும்பத்திலிருந்து சென்றுவிடும்." நான் அதைச் செய்யத் தொடங்கினேன். என்னுடைய ஒவ்வொரு காலையும், ஓர் 5-நிமிட வழிபாட்டுடன் தொடங்குகிறேன்.*

**பெண் உறுப்பினர்கள்**

*நான் பெண்களின் திறமையில் உறுதியான நம்பிக்கை கொண்டவன். ஒரு பெண்ணிடம் ஒரு பணியைக் கொடுத்தால், அது மிகச் சிறந்த நேர்மையுடனும் வேகமாகவும் இன்னும் சிறப்பாகவும் செய்யப்படும். அதை நான் இங்கு என் வீட்டிலேயே பார்க்கிறேன். எங்கள் குடும்பத்தில் எல்லாருக்கும் இது தெரியும் எங்கள் வீட்டுக்குள் நுழைந்தவுடன் உங்களுக்குத் தோன்றும் முதல் எண்ணம், "அட!" என்பதாகதான் இருக்கும். இந்த வீட்டைக் கட்டியது நான்தான். ஆனால், இதைப் பராமரிப்பது ராஷி. இந்த வீடு 20 ஆண்டுகள் பழையது என்று உங்களால் நம்ப இயலுமா? பெண்கள் எதை எடுத்துக்கொண்டாலும் சிறப்பாகச் செய்கிறார்கள். இன்னர் வீல் உறுப்பினர்கள் எங்களை விட அதிக எண்ணிக்கையிலான மகிழ்ச்சிப் பள்ளிகளைச் செயல்படுத்துகிறார்கள். இது அதிகம் பயன்படுத்தப்படாத ஒரு பகுதியாகும்.*

**RI தலைவர் பொறுப்பு உங்களுடைய கனவாக இருந்ததா?**

*இல்லை, இவை எனக்குக் கனவுகளாக இல்லை. நான் இதற்காக ஏங்கவில்லை; அது என்னுடைய மனத்தின் பின்பக்கத்தில் இருந்தது, இல்லாவிட்டால் நான் ஏன் இதற்கு என்னுடைய பெயரைத் தரவேண்டும்? என்னுடைய கனவுகள், முழு எழுத்தறிவு பெற்ற இந்தியா, நோபல் அமைதிப் பரிசை வெல்லும் RI. உலக அளவில் எப்போது நாம் சேவையைப்பற்றிப் பேசினாலும், நாம் ரோட்டரியை நினைக்கவேண்டும். ஆப்பிரிக்காவில் தூய நீர் கிடைக்கவேண்டும், அங்குள்ள குழந்தைகளுக்குச் சிறந்த நலப் பராமரிப்பு கிடைக்கவேண்டும்; அவர்கள் தொடர்ந்து பள்ளிகளுக்குச் செல்லவேண்டும். இவையெல்லாம் தான் என்னுடைய கனவுகள்.*

**அவருடைய பயணத்தில் ராஷியின் பங்கு**

*நான் முன்வாசலில் உள்ள கடை என்றால், அவர்தான் பின்பக்கம் இயங்கும் தொழிற்சாலை. கடையின் வெற்றிக்குத் தொழிற்சாலை மிகவும்*

*முக்கியமானது! தொழிற்சாலையின் பின் பலம் இல்லாவிட்டால், முன்னாலுள்ள கடை நொறுங்கிப்போகும். அவர் முன்னணிக்கு வருவதை விரும்புவதில்லை.*

**ரோட்டரிப் பயணம்:** *மிகச்சிறப்பான பயணம் இது, என்னை முற்றிலும் மாற்றிவிட்டது. 2010–11ல் நான் RIDE ஆகச் சேர்ந்தபோது, பிற மக்களுடைய சேவைக்காக நான் என்னுடைய நேரத்தில், ஆற்றலில், பணத்தில் இவ்வளவைத் தருகிறேன் என்றால், என்னுடைய வாழ்க்கையின் மீதமுள்ள பகுதி, இந்த உலகத்தில் நன்மையைச் செய்வதற்காகமட்டும் அர்ப்பணிக்கப்படும் என்று நான் தீர்மானித்தேன், ராஷி அதை ஏற்றுக் கொண்டார். வாழ்க்கையில் நான் வசதியாக இருக்கிறேன், நான் பிறருக்காக வாழ விரும்புகிறேன். வருங்காலத்தில் நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்று யாராவது கேட்டால், இன்னும் பெரிய ஒரு பொறுப்பில் நாட்டுக்குச் சேவை செய்ய விரும்புவேன், ஒருவேளை, அது அரசியல் பணியாக இருக்கலாம். இந்தியாவின் ஒவ்வொரு மூத்த தலைவரும் ஏதோ ஒரு நேரத்தில் அரசியலில் இணையும்படி அரசாங்கத் தால் கேட்கப்படவேண்டும் என்று நான் விரும்புகிறேன்; ஏனெனில், அவர்களுக்கு மிகுந்த அனுபவம் இருக்கிறது, அவர்களால் பிறருக்கு உதவ இயலும். ஒரு ரொட்டேரியன் வாழ்நாளில் ஒருமுறை ஒரு $1 மில்லியன் திட்டத்தை நிறைவேற்றலாம்; ஆனால், ஓர் அமைச்சருக்கு, அது அநேகமாக இரண்டு நாள் செலவாக இருக்கும். ஆகவே, நாட்டை மாற்றுவதில் ரோட்டரியினர் சிறந்த நன்மைகளைச் செய்யலாம்.*

**தலைமை:** *ஒரு தன்னார்வலர் நிறுவனத்தில், ஒரு நல்ல தலைவர் பெரிய கனவுகளைக் காணவேண்டும், நேர்விதமான மனப்போக்குடன் இருக்கவேண்டும். இது நடக்காது என்று ஒரு தலைவரால் சொல்ல இயலாது. நல்ல யோசனை இருக்கிறது என்றால், அதைச் செய்ய இயலாது என்று என்னிடம் சொல்லாதீர்கள். ஏனெனில், அதை ஏன் செய்ய இயலாது என்பதற்கு நீங்கள் 10 காரணங்களைத் தந்தால், அதை ஏன் செய்ய இயலும் என்பதற்கு நான் 100 காரணங்களைத் தருவேன்! இந்தக் கடினமான விஷயத்தை எப்படிச் செய்யலாம் என்பதற்கு இரண்டு யோசனைகளைத் தாருங்கள். நம்முடைய இளம்பிள்ளைவாதக் கதையிலிருந்து நான் பெரும் ஊக்கம் பெறுகிறேன். அன்றைக்கு, நம்மால் இளம்பிள்ளைவாதத்தை அழிக்க இயலாது என்று யாராவது சொல்லியிருந்தால், நாம் அதை ஏற்றுக்கொண்டிருந்தால், இன்று நாம் இளம்பிள்ளைவாதத்தை அழிக்கும் நிலையில் இருக்கமாட்டோம். ஆகவே, பெரிய கனவுகளைக் காணுங்கள்.*

**ரோட்டரியில் லட்சிய பிம்பம்**
*என்னுடைய ரோட்டரி லட்சிய பிம்பம், நிச்சயம் கல்யாண் பேனர்ஜிதான். நான் அவரை முதன்முறை சந்தித்தபோது, அவர் RI இயக்குநராக இருந்தார். அவர் இயல்பான முறையிலும் அமைதியாகவும் பணிபுரிவதை, அவருடைய எளிமையை நான் பார்த்துள் ளேன். அவரைப் பார்ப்பதன்மூலம், புரிந்துகொள்வதன்மூலம், நான் நிறையக் கற்றுக்கொண்டேன். அதேசமயம், நான் அவரைவிட மாறுபட்டவன், மிகவும் மாறுபட்டவன். அவர் பணிபுரியும் விதம் எனக்குப் பிடிக்கும்: பிறரைக் குறிக்கிடமாட்டார், அரசியல் செய்யமாட்டார், ஒரு பெரிய தொலைநோக்கை உடையவர். அத்துடன், அவருடைய பணிவு மிக முக்கியமானது என்று நான் நினைக்கிறேன்.*

**ரோட்டரியின் பொதுத் தோற்றம்:** *மாற்றத்தை உண்டாக்க வேண்டுமென்றால், நாம் பெரிய விஷயங்களைச் செய்யவேண்டும். ஒரு ரொட்டேரியன் எந்த அரசு அலுவலகத்துக்குள் நுழைந்தாலும், எதிரில் இருக்கிறவர் எழுந்து அவரை வரவேற்கவேண்டும், நீங்கள் செய்யும் பணியை நாங்கள் விரும்புகிறோம் என்று சொல்லவேண்டும். அது தான் ரோட்டரியின் தோற்றமாக இருக்கவேண்டும் பணியாற்றும் மக்கள் வெறுமனே புகைப்படங்களை எடுக்க விரும்பும் மக்கள் இல்லை. நாம் மேம்படுத்தவேண்டிய ஒரு விஷயம் இருக்கிறதென்றால், எல்லாருடனும் புகைப்படங்களை எடுத்துக்கொள்கிற இந்தப் பழக்கம்தான். ரோட்டரிக்குள் இது பரவாயில்லை, வெளியில் தயவுசெய்து அப்படிச் செய்யாதீர்கள்.*

சுற்றியுள்ளவர்கள் உணரவேண்டும். மேலும், அது உண்மையாக இருக்கவேண்டும். ஆதரவு அலை இருந்தால், அதுதான் மிகச்சிறந்த நேரம்.'' அவர் வகித்த தலைமைப் பதவிகள் அனைத்துக்குமான ஏற்றம் மிகவும் இதமாக இருந்தது. அநேகமாக அதனால்தான். முதல் முயற்சியிலேயே RIPN பொறுப்பைப் பெற்ற மிகச் சில தலைவர்களில் இவரும் ஒருவர்.

இப்படிப்பட்ட உயர்ந்த பதவிகளை மேத்தா எளிதாகப் பெற்றதற்கு எதைக் காரணமாக நினைக்கிறார் என்று நான் அவரைக் கேட்டேன். என்னுடைய பணியாலும், அப்படிப்பட்ட பணியை ஆதரித்த மூத்தோராலும் நான் ரோட்டரியில் மேலே வந்துள்ளேன். எப்போதும் நான் மக்களை என்னுடன் அழைத்துச்செல்வேன். அந்தத் திறனும் அநேகமாக இதற்குக் காரணமாக இருக்கலாம்.''

முந்தைய நாள் மாலை, கொல்கத்தா வில் இக்னைட் நிகழ்ச்சிக்குப் பிறகு இதை நான் நேருக்கு நேர் பார்த்தேன். அங்கு ஒரு சிறிய கூடத்தில் PRIP கல்யாண் பேனர்ஜி உள்ளிட்டபல மூத்த ரோட்டரித் தலைவர்களுடன் அவர் மணிக்கணக்காக உரையாடினார். அந்தச் சிந்தனைத் தொட்டியில் இணையும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது; ஒரு வசதியற்ற நாற்காலியில் நான் நெடுநேரம் சிரமப்பட்டேன்; மிகக்குறைந்த பங்களிப்பை வழங்கியபடி ஒரு வாரத்துக்கான முதுகுவலியைச் சேர்த்துக்கொண்டேன். இதுதான் சேகருடைய வேலைப்பாணி என்று சிரிக்கிறார் PDG ஷ்யாமாஸ்ரீ சென். இக்னைட் நிகழ்ச்சியொன்றுக்காக மேத்தா அவரைத் திடீரென்று அழைத்த போது, தன்னுடைய சமையலறையில் கொதித்துக்கொண்டிருக்கும் சாப்பாட்டைக்கூட அப்படியே விட்டுவிட்டு அவர் கிளம்ப வேண்டியிருந்தது. அவர் மற்றவர்கள் நம்ப இயலாத அளவுக்கு நெடுநேரம் பணிபுரிவார்; தன்னைச் சுற்றியிருக்கிறவர்களையும் அவ்வாறு பணிபுரியத் தூண்டுவார் என்கிறார் அவர்.

முந்தைய காலையில், நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றனவா என்பதைப் பார்ப்பதற்காக மேத்தா

ஒரு ரொட்டேரியன் எந்த அரசு அலுவலகத்துக்குள் நுழைந்தாலும், எதிரில் இருக்கிறவர் எழுந்து அவரை வரவேற்கவேண்டும், நீங்கள் செய்யும் பணியை நாங்கள் விரும்புகிறோம் என்று சொல்லவேண்டும்.







**மேலே:** தெற்காசிய கல்வியறிவு மாநாட்டில் நோபல் பரிசு பெற்ற கைலாஷ் சத்யார்த்தி, ராஷி, RID கமல் சங்வி, PDGs பாபு பேரம், சந்து அகர்வால், மன்ப்ரீத் சிங் கந்தோகே மற்றும் சுமேதா சத்யார்த்தி ஆகியோருடன்.









*1. மத்திய மனித வள மேலாண்மை அமைச்சர் பிரகாஷ் ஜாவதேக்கர் மற்றும் PRIP கல்யாண் பேனர்ஜியுடன்; 2. PRIP ராஜேந்திர சாபுவுடன்; 3. PRIP KR ரவீந்திரன், PRID மனோஜ் தேசாய் மற்றும் RID கமல் சங்வி அவர்களுடன்; 4. தாயார் வல்லப் குமாரி மற்றும் மனைவி ராஷியுடன்.*

அதிகாலை 2மணிக்கு விடுதிக்கு வந்ததை இயக்குநர் கமல் சங்வி விவரித்திருந்தார்.

மறுநாள் காலை, அவருடைய செழிப்பான அடுக்ககத்தில் அமர்ந்தபடி நான் மேத்தாவிடம் பேசுகிறேன். அவர் எந்தப் பணியை எடுத்துக் கொண்டாலும், அதில் பெரும் எண்ணிக்கையிலான மக்களை ஈடுபடச் செய்யும் அவருடைய திறனைப்பற்றி விசாரிக்கிறேன். எடுத்துக்காட்டாக, சமீபத்தில் அவர் எடுத்துக்கொண்டுள்ள எழுத்தறிவுத் திட்டத்தில் குறைந்தது 100 PDGகள் பங்கேற்றுள்ளார்கள். அதை நாம் நிச்சயமாகச் செய்தாகவேண்டும். இல்லையா? சுமார் 100–200 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ரோட்டரி சங்கத்தில் இருக்கும் பன்முகத்தன்மையைக் கற்பனை செய்து பாருங்கள்; இவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு பார்வைக்கோணங்களைக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால், இவர்கள் அனைவரையும் ஒரே இலக்கை நோக்கி அழைத்துச்செல்வது ஒரு சவால், அதேசமயம் மிகவும் மகிழ்ச்சி தருவது. நம்முடைய நோக்கம் நல்லதாகவும், பிறருக்குச் சேவை புரிவதாகவும் இருந்தால், நாம் இதைச் செய்யலாம் என்கிறார் அவர்.

அவர் நாள்தோறும் 16 மணிநேரம் உழைப்பதாகவும், பிறரையும் நெடுநேரம் உழைக்கச்செய்வதாகவும் புகழ்பெற்றிருக்கிறார். அதைப்பற்றி அவர் என்ன நினைக்கிறார்? அவர் சிரித்தபடி இதற்குப் பதில் சொல் கிறார், ‘‘ஒருகாலத்தில் நான் அப்படிச் செய்துகொண்டிருந்தேன். எழுத்தறிவு என்பது, ரோட்டரியின் மற்ற திட்டங்களைப்போன்றது இல்லை. இந்தியாவை முழு எழுத்தறிவுபெற்ற நாடாக்கும் நோக்கத்தை நாம் எடுத்துக் கொண்டுள்ளோம் இந்தியாவில் நான்கில் ஓர் இந்தியர் எழுதப்படிக் கத் தெரியாதவர் என்பதை மனத்தில் வைத்துப் பார்க்கும்போது, இது ஒரு மிகப் பெரிய விஷயம். இத்தனைப் பெரிய திட்டங்களை மற்ற தன்னார்வலர் நிறுவனங்கள் நினைத்துப் பார்ப்பதுகூடச் சிரமம்தானே?’’

தொழில் அடிப்படையில் ஒரு பட்டயக் கணக்காளரான

# ரோட்டரியின் கிரீடத்தில் இந்தியாதான் கோஹினூர்

RIPN சேகர் மேத்தாவைப் பொறுத்த வரை, ரோட்டரியின் கிரீடத்தில் இந்தியாதான் கோஹினூர். நான் எல்லா நாடுகள்மீதும் மதிப்பு வைத்துள்ளேன்; நீங்கள் இந்தியாவைப்பற்றி என்னைக் கேட்டீர்கள், ஆகவே, அதற்குப் பதில் சொல்கிறேன். நீங்கள் என்னிடம் அமெரிக்காவைப்பற்றிக் கேட்டால், அதன் நல்ல அம்சங்களை நான் உங்களுக்குச் சொல்வேன், என்கிறார் அவர்.

இன்று, உறுப்பினர் எண்ணிக்கையிலும் வழங்குவதிலும் இந்தியா 2வது நிலையில் உள்ளது. ஆனால், திட்டங்களில் முதல் நிலையில் உள்ளது. என்னைப் பொறுத்தவரை, அதுதான் இந்தியாவில் ரோட்டரியின் மிகப்பெரிய சொத்து. இதய அறுவைச் சிகிச்சைகளோ, குடிநீர் வழங்குவதோ, பள்ளிகளைக் கட்டுவதோ ரோட்டரியின் அனைத்துப் பிரிவுகள், கவனப் பகுதிகளிலும் இந்தியா மிகச்சிறந்த பணியை ஆற்றியுள்ளது.

இந்தக் களத்தில் பல ஆண்டுகளாகப் பணியாற்றியுள்ளவர் என்றமுறையில், இந்தத் திட்டங்களில் ஏதேனும் ஒன்றைச் செய்யக்கூட எவ்வளவு உழைப்பு தேவை, பயன்பெறுவோருக்கு அது எவ்வளவு மகிழ்ச்சியைக் கொண்டுவரும் என்பது எனக்குத் தெரியும். இவை வாழ்க்கையை மாற்றும் விஷயங்கள். என்னுடைய மனத்திலும் இதயத்திலும் ஒரு தாக்கத்தை உண்டாக்கித் தங்கியுள்ள 20–30 பெரிய திட்டங்களை என்னால் விவரிக்க இயலும். உலகில் வேறு எந்த நாடு இத்தனைச் சேவைத் திட்டங்களை நிறைவேற்றுகிறது?''

அவர் தொடர்ந்து சொல்கிறார், ஒரு காசோலை எழுதுவது எளிது. ஆனால், உங்கள் வீட்டிலிருந்து 100கிமீ தொலைவிலுள்ள ஓரிடத்துக்கு மாதாமாதம் சென்று, அக்கிராமத்தில் உள்ள மக்களுக்குக் குடிநீர் கிடைப்பதை, அல்லது, அவர்கள் திறந்தவெளியில் மலம் கழிக்காமல், வீடுகளில் உள்ள கழிப்பறைகளைப் பயன்படுத்துவதை உறுதிசெய்வது எளிதில்லை. அது மிகக் கடினமான பணி.''

இந்தியாவில் ரோட்டரி பெற்றுள்ள வியப்பூட்டுகிற, சிறந்த தலைமையைப் பாராட்டும் அவர், இதுபற்றிய PRIP K R ரவீந்திரனுடைய கருத்தை மேற்கோள்காட்டுகிறார், உலகில் வேறு எங்கும் ஒரே இடத்தில் இந்த அளவு பெரும் எண்ணிக்கையிலான மூத்த தலைவர்கள் பணியில் மும்முரமாக ஈடுபடுவதைத் தான் பார்த்ததில்லை என்று அவர் எப்போதும் சொல்வார். எடுத்துக்காட்டாக, PRIP ராஜா சாபூவை எடுத்துக்கொள்ளுங்கள்; ஒவ்வோராண்டும் அவர் 2–3 மருத்துவப் பணிகளுக்காக ஆப்பிரிக்கா செல்கிறார். இந்த அளவு வியப்பூட்டும் சேவையை வேறு யார் செய்கிறார்கள்? அல்லது, கல்யாண் பேனர்ஜியை எடுத்துக் கொள்ளுங்கள் முழு எழுத்தறிவு பெற்ற இந்தியா என்பது அவருடைய கனவு; அவருடைய வயதில், எழுத்தறிவுபற்றிய ஒவ்வொரு முக்கியக் கூட்டத்திலும் அவர் கலந்துகொள்கிறார்; அவர் அப்படிச் செய்யவேண்டும் என்று என்ன அவசியம்?



அவர் தொடர்ந்து சொல்கிறார், நீர் மற்றும் தூய்மையைப்பற்றி யோசியுங்கள், PRID சுசீல் குப்தா அதில் நன்கு பணியாற்றி வருகிறார். உத்தராஞ்சல் நிலநடுக்கத்துக்குப்பிறகு, யஷ்பால் தாஸ் மலைப்பகுதிகளில் சுமார் 32 மிகச்சிறந்த பள்ளிகளைக் கட்டினார். எந்தத் திட்டத்துக்கும் பணம் தேவை. அதை அசோக் மகாஜனிடம் சொல்லுங்கள், விரல் சொடுக்கில் அவர் பணத்துக்கு ஏற்பாடு செய்துவிடுவார். ஏனெனில், அவர் இந்தியாவின் நிதித் தலைநகரத்தில் அமர்ந்திருக்கிறார். P T பிரபாகர் WinSல் சுறுசுறுப்பாகப் பணியாற்றிவருகிறார். மனோஜ் தேசாயின் விரிவான இளம்பிள்ளைவாதத் திருத்த அறுவைச்சிகிச்சைகளைப் பாருங்கள். தன்னுடைய இறுதி மூச்சு வரை ரோட்டரிக்காகப் பணியாற்றிக்கொண்டிருந்த சுதர்சன் அகர்வாலைப் பாருங்கள். அவர் ஹிம் ஜோதி பள்ளியை நிர்வகித்தார், தில்லியில் ஒரு மிகச்சிறந்த ரத்த வங்கியை அமைத்தார். O P வைஷும் அப்படிதான்; பல திட்டங்களுக்குப் பின்னாலிருந்த மூளை அவர். பாண்டுரங்க செட்டி 27 கல்வி அமைப்புகளை நடத்துகிறார்; அவரே ஓர் அமைப்புதான். சமீபத்தில் தன்னுடைய பதவிக்காலத்தை நிறைவுசெய்த C பாஸ்கர் கடினமாக உழைத்தார்; ஏதேனும் இயற்கைப் பேரழிவு நிகழ்ந்தால், பாதுகாப்புப் பெட்டியின்வழியாகக் கமல் சங்வி விரைவில் உதவியை அனுப்பிவிடுவார். பரத் பான்ட்யா நலம்சார்ந்த ஒரு மிகச் சிறந்த திட்டத்தை அறிமுகப்படுத்தி யுள்ளார். இவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுகள். இந்தியா சிறந்த தலைமையை வழங்குகிறது; நம்மிடம் மிகச்சிறந்த கூட்டணிகள் உள்ளன.

இந்திய ரோட்டரியை வருத்துவது என்ன? ஏதுமில்லை 7 அல்லது 10 பேர் தப்பான வழியில் எதையேனும் செய்தால், அதை வைத்து மொத்த நிறுவனத்தையும் குறைசொல்ல இயலாது. எல்லாம் மிகச்சிறப்பாக நடக்கிறது. இந்திய ரோட்டரியில் பிரச்னைகள் இருந்தால், சேவைத் திட்டங்கள், பங்களிப்புகள், உறுப்பினர் எண்ணிக்கையில் இந்த அளவு சிறந்த பணி எப்படி நடக்கும்?





இவர், ஒரு விலைக் கணக்காளர், நிறுவனச் செயலாளரும் ஆவார், M.Com. பட்டப்படிப்பை நிறைவு செய்திருக்கிறார். ''வர்த்தகத் துறையில் அப்போது நீங்கள் படிக்கக்கூடிய அதிகபட்சப் படிப்பு அதுதான். இந்த நான்கையும் நிறைவுசெய்தவர்கள் மிகக் குறைவு என்று நினைக்கிறேன்!''

அவர் தன்னுடைய குடும்பப் பண்பாட்டைப் பின்பற்றி ஒரு CA ஆனார். எங்கள் குடும்பத்தில் 30 CAக்கள் உள்ளார்கள். ஆனால், குடும்ப நிறுவனம் என்று ஏதும் இல்லை. நாங்கள் ஜோத்பூரிலிருந்து வருகிறோம்; உலகிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான CAக்களை உருவாக்குவது இந்த இடம்தான். ஜோத்பூரில் நீங்கள் ஒரு கல்லை எறிந்தால், அது ஒரு CAமீது விழும் வாய்ப்புகள் உண்டு என்பார்கள்!

மேத்தா முதலில் RC கல்கத்தா சென்ட்ரலில் இணைந்தார், அங்கு அவருக்குப் பல வாழ்நாள் நண்பர்கள் கிடைத்தார்கள். பின்னர் அவர் RC கல்கத்தா மகாநகருக்கு மாறினார், அப்போது அது RC கல்கத்தா படா பஜார் என்று அழைக்கப்பட்டது. மூன்றே மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அந்தச் சங்கம், ஓர் அடிப்படையான அமைப்புதான்; நாங்கள் ஒரு மங்கலான இடத்தில் சந்திக்கத் தொடங்கினோம். ஒரே ஆண்டில், நாங்கள் அதை 40 உறுப்பினர்களாக ஆக்கினோம். படா பஜார் என்ற பெயர் அதிகத் தூய்மையில்லாத இடங்களில் ஒன்றைக் குறிப்பிடுவதால், அதை மகாநகர் என்று மாற்றினோம், எங்களுடைய சந்திக்கும் இடத்தை முதலில் பார்க் விடுதிக்கும் பின்னர் தாஜ் பெங்காலுக்கும் மாற்றினோம். அப்போதிலிருந்து, இந்த மாவட்டத்தில் அதிக வலுவுள்ள சங்கங்களில் ஒன்றாக அது உள்ளது; நாங்கள் சில மிகச்சிறந்த திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம்; இப்போது எங்கள் குழுவில் 85க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளார்கள். எங்கள் சங்கத்தில் மிகச்சிறந்த நட்பும் தோழமையும் உள்ளது; நாங்கள் எந்தச் சவாலையும் ஏற்கத் தயாராக உள்ளோம்.

அவர் DGயாக இருந்தபோது, அம்மாவட்டத்தில் பெறப்பட்ட TRF சேகரிப்பான $250,000 தான் மிக அதிகமாக இருந்தது. நான் இந்த எண்ணை அதிகம் குறிப்பிடுவதில்லை; ஏனெனில், இன்றைய நிலையுடன் ஒப்பிடும் போது அது மிகக்குறைவு என்று சிரிக்கிறார் அவர். உறுப்பினர் எண்ணிக்கை வளர்ந்தது; பல புதிய சங்கங்கள் தொடங்கப்பட்டன; பெரிய திட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டது. நான் எப்போதும் பெரிய கனவுகளைக் காண விரும்புகிறேன்; பெரிய விஷயங்களைச் செய்ய விரும்புகிறேன். ஏனெனில், இத்தனை அதிக எண்ணிக்கையிலான மக்கள் தங்களுடைய மூளைகளை, நேரத்தை, வளங்களை ஒன்றுதிரட்டப்போகிறார்கள் என்றால், உண்மையிலேயே பெரிய விஷயமொன்றை நாம் செய்யவேண்டும்.

தன்னுடைய புதிய பொறுப்பில், ரோட்டரியை வளர்ப்பது அவருடைய முதன்மையான கவனமாக இருக்கும். ஆனால், நான் வளர்ச்சி என்று சொல்லும் நேரத்தில், நம்முடைய அடிப்படை மதிப்பீடுகளான பன்முகத் தன்மை போன்றவை அப்படியே இருக்கும். அதிர்ஷ்டவசமாக, இந்தியாவில் நம்முடைய சங்க உறுப்பினர்களிடையே ஏற்கெனவே பன்முகத்தன்மை உள்ளது. முதியவர்கள், நடுத்தர வயதினர், இளைஞர்கள், பெண்கள், அனைத்து



# ராஷி-யின் கருத்துகள்

ராஷி மேத்தாவிடம், அவருடைய கணவரின் பேரார்வம் மிக்க ரோட்டரிப் பணிகளைப்பற்றிக் கேட்டால், புன்னகையுடன் பதில் சொல்கிறார்: எங்களுக்குத் திருமணமானவுடனே (1994) அவர் ரோட்டரியில் சேர்ந்தார். நான் ரொட்டேரியன் இல்லை; ஆனால், அனைத்துச் சங்க, மாவட்டத் திட்டங்கள் செயல்பாடுகளிலும் முதல் நாளிலிருந்து சேகருடன் பங்குபெற்றுள்ளேன். நாங்கள் மிகச் சிறிய திட்டங்களுடன் செயல்படத் தொடங்கினோம். பின்னர் ஒரு பெரிய வானவில்லைப்போன்ற திட்டங்களை நிறைவேற்றினோம்.’’

ரோட்டரி எங்கள் இருவருக்கும் ஒரு வாழ்க்கை முறையாகி விட்டது. எங்கள் குழந்தைகள் பிறந்தபோது, ரோட்டரியில் எங்களுடைய பங்குபெறலை அவர்கள் புரிந்துகொண்டார்கள். 1991-92ல், மேத்தா சங்கத் தலைவரானபோது, ராஷி தன்னுடைய இன்னர் வீல் சங்கத் தலைவரானார்; பின்னர் தன்னுடைய மாவட்டத்தின் பொருளாளராக இரண்டு ஆண்டுகள் சேவை புரிந்தார்.

அவர் நினைவுகூரும் சில பணிகள், பீகார் வெள்ளத்துக்குப் பிறகு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாங்கள் அனுப்பிய நிவாரணப் பொருட்கள், பாதுகாப்புப் பொதிகள். யுரி நிலநடுக்க(2005)த்துக்குப் பிறகு காஷ்மீர் சென்றது; இந்திய ராணுவம் ரோட்டரி மீது வைத்திருக்கும் பெரிய மதிப்பை நாங்கள் மகிழ்ச்சியுடன் கண்டுகொண்டது இங்குதான் என்கிறார் அவர்.

ராஷி குறிப்பாக நினைவுகூரும் ஒரு நிகழ்வு, எங்கள் ஜீப்புக்கு நேர் முன்பாக நடந்த மிகப்பெரிய நிலச்சரிவு. நிலம் சரிவதை எங்களால் காண இயன்றது. சேகர் சொன்னார், “ராஷி, நாம் இந்தப் பயணத்திலிருந்து திரும்பப்போவதில்லைபோல.” ஆனால், ரோட்டரி ஊக்கம் வென்றது, நாங்கள் எங்களுடைய பணியை நிறைவுசெய்து விட்டு வீடு திரும்பினோம் என்று சிரிக்கிறார் அவர்.

நீங்கள் இருவரும் எப்படிச் சந்தித்தீர்கள்? என்ற கேள்விக்கு ராஷி பதிலளிக்கையில், எங்கள் இருவருடைய பெற்றோரும் ஓர் அரிமா சங்கத்தின் உறுப்பினர்கள். அவர்கள் மிக நெருங்கிய நண்பர்களானார்கள்; அப்படிதான் அவர்களுடைய குழந்தைகளும் சந்தித்தோம். நாங்கள் ஒன்றாக நெடுநேரம் செலவிடுவோம், பல அரிமா நிகழ்ச்சிகளுக்குச் செல்வோம்.’’ இவர்கள் 11ம் வகுப்பில் சந்தித்தார்கள், கல்லூரி முதலாண்டில் ஒருவரையொருவர் விரும்பத்தொடங்கினார்கள். 1984ல் மணந்துகொண்டார்கள். இவர்களுக்கு சிராக் என்ற மகனும், சாந்தினி என்ற மகளும் உள்ளார்கள்; மருமகள் கீதா, பேரன் வீருக்கு ஒரு வயதாகிறது. அவர்கள் அனைவரும் தில்லியில் வசிக்கிறார்கள்.

ரோட்டரித் தலைமையின் உச்சத்துக்கு அவருடைய உயர்வைப்பற்றிக் கேட்டபோது, ராஷி சிரிக்கிறார்: அவர் முதல் முயற்சியிலேயே இதைப் பெற்றார் என்பது மிகவும் ஆர்வமூட்டுவது. அவர் தன்னுடைய பெயரை மிகத் தாமதமாகதான் வழங்கினார், அதுவும் சில மூத்த தலைவர்களின் ஆலோசனைக்குப்பிறகு. இது ஓர் ஏற்ற இறக்கம் நிறைந்த பயணம்; அவர் எவன்ஸ்டானுக்கு நேர்காணலுக்காகச் செல்வதற்குமுன்பாகவே நாங்கள் பெற்ற அன்பும் நேயமும் அனைத்தையும் மதிப்புமிக்கதாக்கின; அவர் மக்களின் மனிதர் என்பதை நிரூபித்தன.



மதங்களுடைய பிரதிநிதிகளான உறுப்பினர்கள் இங்கு உள்ளார்கள். ‘‘ரோட்டரியில் நாம் மதம் அல்லது இடத்தைப்பற்றிச் சிந்திப்பதுகூட இல்லை. ரஷீதா பகத் ஆகிய நீங்கள் முஸ்லீமா, பஞ்சாபியா, அல்லது குஜராத்தியா என்பதை அறிவது சிரமமாக இருக்கும். நீங்கள் ஒரு ரொட்டேரியன் என்றால், நீங்கள் வரவேற்கப்படுகிறீர்கள்.’’

உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் திட்டங்களை அடுத்த நிலைக்குக் கொண்டுசெல்வதுடன், அவருடைய இன்னொரு முக்கியத்துவம், CSR நிதிகளைப் பயன்படுத்திக்கொள்வது. TRF நிதிக்கு வரம்பு உண்டு, ஏனெனில், நாம் 1 பில்லியனுக்கு மேல் செலவாகும் திட்டங்களைப்பற்றிப் பேசுகிறோம். பன்னாட்டு நல்கைகளால் இப்படிப்பட்ட பணத்தைக் கொண்டுவர இயலாது; இந்தப் பிரச்னைக்குப் பதில், CSR.’’

ஆனால், CSR நிதிகளைச் செயல்திறனோடு பெறுவதற்கு, கட்டமைத்தல், நிலையை உயர்த்துதல், தரமாக்குதல் ஆகியவற்றைச் செய்யவேண்டியிருக்கும். இதற்கு மிகுந்த கவனம், நேரம், ஆற்றல், ஒரு வடிவமைப்பு மற்றும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கக்கூடிய தரவுகளைத் திரட்டுதல் ஆகியவை தேவை.

ரோட்டரியினர்களுக்கு அவருடைய எளிய செய்தி, தனிப்பட்ட சங்கங்கள் பெருநிறுவனங்களைக் கேட்பதற்குப்பதிலாக, CSR நிதியானது மாவட்ட அல்லது தேசிய அளவில் செய்யப்படவேண்டும். சங்கத்துக்கு பெருநிறுவனத்துடன் தொடர்பு உண்டாகிறது என்றால், அவர்களிடம் சென்று ஒரு திட்டத்துக்காக ரூ.2 லட்சம் அல்லது ரூ.5 லட்சத்தைக் கேட்காதீர்கள். நீங்கள் உங்களைக் குறைத்து விற்கிறீர்கள்; பெருநிறுவனம் இந்தக் கேள்விக்குப் பதிலாக, நான் ஏற்கெனவே ரோட்டரிக்குப் பணம் தந்துவிட்டேன் என்று கூறலாம். இத்துடன், குறிப்பிட்ட விஷயங்களைப் பேசுங்கள்; தெளிவற்றுப் பேசாதீர்கள். எழுத்தறிவு என்றால் அதற்குப் பல பொருட்கள் உண்டு. அதற்குப்பதிலாக, 50 மகிழ்ச்சிப் பள்ளிகளுக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மின்-எழுத்தறிவித்தல் பொதிகளுக்கு நன்கொடை கேளுங்கள். பென்சில்கள், அழிப்பான்கள் அல்லது இருக்கைகளை



RIDs *கமல் சங்வி மற்றும் பரத் பாண்ட்யா ஆகியோருடன்.*

வழங்குவது ஒரு பெருநிறுவனத்துக்கு மகிழ்ச்சியுண்டாக்காது. நீங்கள் பெரிய, எல்லாருக்கும் தெரிகிற விஷயங்களைச் செய்யவேண்டும். எடுத்துக்காட்டாக, பள்ளிகள் அல்லது, மின் கற்றல் திட்டங்கள் போன்ற, உண்மையான மாற்றமொன்றை உருவாக்கும் திட்டங்களைச் செய்யவேண்டும்.''

இந்தியாவில் ரோட்டரி ஒரு திறன் எரிமலையின் மீது அமர்ந்திருப்பதாகச் சொல்கிறார் மேத்தா. நல்லவற்றைச் செய்வதற்காக நாம் அதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். நம்முடைய பொறுப்புமிக்க உறுப்பினர் எண்ணிக்கை வளரவேண்டும். இந்த ஆண்டு வந்துவிட்டு அடுத்த ஆண்டு வெளியேறுகிறவர்களைச் சேர்த்தால் போதாது. நீங்கள் உங்களுடைய ஆற்றலைக் குவித்தால், உங்களுக்குப் பலன்கள் கிடைக்கும்.'' இத்துடன், சரியான பயிற்சி மிக முக்கியமானது. இதை நாம் மேற்கத்திய உலகிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்; குறிப்பாக அமெரிக்கர்களுக்கு நிலையை உயர்த்துவது எப்படி என்பது எப்போதும் தெரியும். அவர்களுடைய பர்கரைப் பாருங்கள்; அது உலகம்முழுக்கப் பயணம் செய்துள்ளது. ஆனால், பர்கர் செய்வது ஓர் ஏவுகணை அறிவியலா என்ன? மும்பையில் செய்யப்படும் வடா பாவும் அதே அளவு சுவையானது தான்; ஆனால், அது மும்பையிலிருந்து கொல்கத்தாவுக்குச் செல்லவில்லை, பர்கர் எங்கிருந்தோ கொல்கத்தாவுக்கு வந்துவிட்டது காரணம், தரப்படுத்துதல், பயிற்சி மற்றும் திறன் சேர்த்தல்.''

*சங்கத்துக்கு பெருநிறுவனத்துடன் தொடர்பு உண்டாகிறது என்றால், அவர்களிடம் சென்று ஒரு திட்டத்துக்காக ரூ.2 லட்சம் அல்லது ரூ.5 லட்சத்தைக் கேட்காதீர்கள். நீங்கள் உங்களைக் குறைத்து விற்கிறீர்கள்.*

ஏற்கெனவே மிகச்சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் இந்திய ரோட்டரியினர்களுக்கு மேத்தாவுடைய அறிவுரை, நம்முடைய வேகத்தை இப்போது அதிகரிப்போம், கட்டமைப்பான திட்டங்களை உருவாக்குவோம். இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு, எழுத்தறிவுத் திட்டம்; ஐந்து ஆண்டுகளாக நாம் அதை மாற்றியமைக்கவேண்டியிருக்கவில்லை. இதை நாம் நலனில், WinSல், சுற்றுச்சூழலில் அல்லது பேரழிவு மேலாண்மையில் ஏன் பிரதியெடுக்கக் கூடாது? நாம் அதைச் செய்தால், நாம் முற்றிலும் மாறுபட்ட ஒரு நிலையில் இருப்போம். நம்முடைய திட்டங்கள் பிற நாடுகளால் பிரதியெடுக்கக்கூடிய மாதிரிகளாக ஆகும்.''

ஆனால், இதில் ஒரு குறையும் இருந்தது என்கிறார் மேத்தா. நன்கு முன்னேறிக்கொண்டிருந்த ஒருவரைக் கீழே இழுப்பதுதான் அந்தக் குறை. நல்லவேளையாக, அந்தக் குறை இப்போது குறைந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்னையை அவரும் சந்தித்திருக்கிறார். ஆனால், அவர் அதனால் அதிகம் பாதிக்கப்படவில்லை. காரணம், என்னுடைய பணிதான். அது எனக்குப் பல நண்பர்களைத் தந்தது. ஆனால், இது எல்லாருக்கும் நிகழ்வதில்லை.''

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# ரோட்டரிக்கு நோபல் பரிசு

ஜெய்ஸ்ரீ




PRIP *கல்யாண் பேனர்ஜி,* RIPN *சேகர் மேத்தாவிற்கு தலைப்பாகை சூடி கௌரவிக்கிறார். சோனல் சங்வி மற்றும் ராஷி மேத்தாவும் உடன் உள்ளனர்.*

2021ல் ரோட்டரி உலகத்துக்குத் தலைமை தாங்க சேகர் மேத்தா தயாராகும் இந்த நேரத்தில், இளம்பிள்ளைவாதத்தை நீக்குவதில் ரோட்டரி ஆற்றிய முயற்சிகளுக்காக அதற்கு நோபல் பரிசு வழங்கப்படும் நாளை அவர் கனவு காண்கிறார், PRIP கல்யாண் பேனர்ஜியும் இதற்கு ஆதரவளிக்கிறார். ரோட்டரி ஒரு நோபல் பரிசைப் பெறுவதற்கு, இளம்பிள்ளைவாதம் முற்றிலுமாக நீக்கப்படவேண்டியதில்லை. உலகில் 99 சதவிகிதம் இளம்பிள்ளைவாதம் நீக்கப்பட்ட நிலையில், அந்த ஒரு சத விகிதத்தை எட்டுவதற்குச் சிறிது காலம்தான் ஆகும்; நாம் அதைச் சாதிப்போம். இந்த வைரஸை வெல்வதில் ரோட்டரியின் மிகப்பெரிய பங்கை அங்கீகரிக்கவேண்டிய நேரம் இது. 3–4 ஆண்டுகளுக்கான ஒரு குழுவை உருவாக்குங்கள்; அதன் மூலம், உங்களுடைய பதவிக்காலம் நிறைவடையும் நேரத்தில், இதில் ஒரு தீர்மானம் எடுக்கப்படும் என்றார் PRIP பேனர்ஜி. கொல்கத்தாவில் RIPN சேகர் மேத்தாவைப் பெருமைப் படுத்தும் விதமாக நடைபெற்ற சிறந்த பாராட்டுவிழாவில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். கொல்கத்தா ரோட்டரியினரும், அருகிலுள்ள மாவட்டங்களும் கடுமையாக உழைத்து இந்த நிகழ்ச்சியைத் தங்கள் மண்ணின் மைந்தருக்கு நினைவில் நிற்பதாக ஆக்கினார்கள். நட்சத்திரங்கள் நிறைந்த மாலையாக அது அமைந்தது. இதை இன்னும் சிறப்பாக்கும்விதமாக, மேத்தாவின் பிறந்தநாளையும் விருந்தினர்கள் மிக நன்றாகக் கொண்டாடினார்கள்.

பேனர்ஜி முன்வைத்த இன்னோர் ஆலோசனை, பல பிராந்தியத் துணைத் தலைமையகங்களை உருவாக்குவது பற்றிச் சிந்திப்பது. இதன்மூலம் ரோட்டரியைக் கண்டம்-வாரியாக, நாடு-வாரியாக நடத்த இயலும். பல பிராந்தியங்களைச் சேர்ந்த வர்கள் வெவ்வேறுவிதமாகச் சிந்திக்கிறார்கள், செயல்படுகிறார்கள்.

# மேத்தாவுடன் கலந்துரையாடல்

*மேத்தா, ராஷி மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரைப் பலவிதமான தலைப்புகளில் RID கமல் சங்வி கேள்வி கேட்டபோது, பார்வையாளர்கள் அறிவார்ந்த நகைச்சுவை விருந்தைப் பெற்றார்கள். இந்தத் தம்பதியருடைய குடும்பத்தினர் நல்ல நண்பர்கள்; ஆகவே, இவர்கள் பள்ளி நாட்களிலிருந்து ஒருவரையொருவர் அறிவார்கள்; திருமணத்துக்குமுன்னால் அவர்கள் ஏழாண்டுகளுக்குக் காதலித்தார்கள். சேகரை ஓர் எழுத்தறிவு வல்லுனராக, கழிப்பறைகளைக் கட்டமைக்கிறவராக நாம் எல்லாரும் அறிவோம். ஆனால், அவருடைய மறுபக்கம், சேகர் என்கிற காதலர். இது நம்முடைய கற்பனையைத் தாண்டியதாக இருக்கிறது, என்றார் சங்வி. அவர் தன்னுடைய இரு சகோதரிகள் மீது வைத்திருக்கும் அன்பைப்பற்றிக் குறிப்பிட்ட ராஷி, தங்களுடைய தேனிலவில் அவர் தன்னுடைய சகோதரிகளையும் அழைத்துச் செல்ல விரும்பியதாகச் சொன்னார்.*

*நீங்கள் உங்களுடைய மகன் சிராகிடம் இதுவரை சொல்லாத, இப்போது அவரிடம் சொல்ல விரும்புகிற ஒரு விஷயம் என்ன? என்று கேட்டார் சங்வி. மேத்தா இதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தபோது, கூடத்தின் மறு பக்கத்திலிருந்து PDG ரவி வட்லாமணி இதற்குச் சட்டென்று பதில் சொன்னார்: ரோட்டரியில் சேர்ந்துகொள்.'' மேத்தா அதைப் பிடித்துக்கொண்டார். ஆமாம். சரியாகச் சொன்னீர்கள்! நான் இதுவரை இதை அவருக்குச் சொன்னதில்லை. ரோட்டரியில் சேர்ந்துகொள்ளுங்கள்.''*

*தான் ஒரு மிகத் தீவிரமான ரோட்டரியனாக மாறிய கணத்தைப் பற்றிச் சிந்தித்த மேத்தா, மாற்றுத்திறனாளிகளுக்காக அவருடைய சங்கமாகிய RC கல்கத்தா மகாநகர் ஏற்பாடு செய்திருந்த ஓர் இயக்கபொருட்கள் முகாமைப்பற்றிப் பேசினார். அங்கு மாற்றுத்திறனாளிகளுக்குக் கேலிப்பர்கள், செயற்கை கை, கால்கள், ஊன்றுகோல்கள் அல்லது சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன. அதில் அவருக்குத் தரப்பட்டிருந்த பணி, சக்கர நாற்காலிகளைத் தள்ளிக்கொண்டு நகரும் அளவுக்கு மக்களுடைய கைகளில் வலிமை இருக்கிறதா என்பதைச் சரிபார்ப்பது. ஒவ்வொருவருடைய வலிமையையும் சரிபார்ப்பதற்காக, தன்னுடைய கைகளை இழுக்கும்படி அவர் கேட்பார். முதல் மனிதர் தவழ்ந்துகொண்டு வந்தார். அவருடைய கைகள் அழுக்காகியிருந்ததை நான் பார்த்தேன். அவர் என்னுடைய கையில் அவருடைய கையை வைப்பதற்காக, நான் தயக்கத்துடன் என் கையை நீட்டினேன். எனக்கு அது பிடிக்கவில்லை, ஆனால், சகித்துக் கொண்டேன். அடுத்து வந்தவர் ஒரு தொழுநோயாளி. இந்த நிகழ்ச்சி தொடர்ந்து நடக்க நடக்க, நான் நிலைமையைப் ஏற்றுக்கொண்டேன், அவர்கள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குச் செல்ல தங்களால் இயன்ற வழிகளில் சமாளித்துவந்தார்கள். அந்தத் திட்டம்தான், வெறும் சங்க உறுப்பினராக இருந்த என்னை ஒரு ரொட்டேரியனாக மாற்றியது.''*

*சங்வி நடத்திய ஒரு தேர்வு: இரவுணவுக்கு யாருடன் செல்வது என்றால், கல்யாண் அவர்கள் என்கிறீர்கள், லட்சிய பிம்பம் யார் என்றால், கல்யாண் அவர்கள் என்கிறீர்கள், குருநாதர் யார் என்றால், கல்யாண் என்கிறீர்கள்... ஒருவேளை, நீங்கள் ஒரு தீவில் தனித்து விடப்பட்டால், யாராவது ஒருவரைத்தான் உங்களால் காப்பாற்ற இயலும் என்றால் இவர்களில் யாரைக் காப்பாற்றுவீர்கள்: உங்கள் தாய், மனைவி, கத்ரீனா கைஃப் மற்றும் கல்யாண் அவர்கள்?*

**மேத்தாவின் பதில்:** *நான் கல்யாண் அவர்களைத்தான் காப்பாற்றுவேன்; அதன் பிறகு, மற்ற மூவரையும் எப்படிக் காப்பாற்றுவது என்று அவர் எனக்கு வழிகாட்டுவார்.*

*சங்வி கேட்ட விறுவிறுப்பான கேள்விகளுக்கு அவர் வழங்கிய இன்னும் சில நகைச்சுவையான, அதே சமயம் அறிவார்ந்த பதில்கள்: கமல் சங்வியா அல்லது மகாநகரா, எதைத் தேர்ந்தெடுப்பீர்கள் என்று கேட்கப்பட்டபோது, மகாநகரில் கமல் சங்வி என்று பதில் சொன்னார். ராஷியா அல்லது உங்கள் தாயா, இருவரில் யாரைத் தேர்ந்தெடுப்பீர்கள்? என்பதற்கு, தாயைத்தான் தேர்ந்தெடுப்பேன் - என்னுடைய தாயையும், சிராகுடைய தாயையும் என்றார்.*



ஒட்டுமொத்த உலகுக்கும் ஒரு திட்டம் என்பது தீர்வாகாது. வெவ்வேறு பகுதிகளுக்கிடையிலுள்ள வேறுபாடுகளை நாம் வேறுவிதமாகக் கையாள வேண்டும்; அப்போதும் தொடர்ந்து வளரவேண்டும். இப்படி தான் நாம் இப்போதைய தலைமுறையைக் கவர இயலும்.'' என்றார்.

கொல்கத்தாவுக்கும் ரோட்டரிக்கும் உள்ள சிறப்பான இணைப்பை அவர் குறிப்பிட்டார், சிகாகோவில் ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸுடைய வீட்டைப் புதுப்பித்து, அதை ஒரு நினைவகமாகக் காப்பதற்கான முயற்சிகள் நடந்துவருகின்றன. அது போல, இந்தியாவிலுள்ள நாம், நித்திஷ் லஹார்ரி வாழ்ந்த வீட்டை ரோட்டரி நினைவகமாக



RIPN மேத்தா மற்றும் ராஷி அவர்கள் குடும்பத்தினருடன். மேத்தாவின் மடியில் அவர் பேரன் வீர்.

புதுப்பிப்பதற்கான திட்டங்களை ஒருங்கிணைந்து உருவாக்க வேண்டும். இப்போது இந்தியா தன்னுடைய ரோட்டரி நூற்றாண்டைக் கொண்டாடுவதால், இது மிகப் பொருத்தமான செயலாக அமையும். அநேகமாக, சேகர் அதற்கான வழியைக் காட்டுவார் என்று நான் நம்புகிறேன் என்றார் அவர்.

PRIP ராஜேந்திர சாபூவும் அமெரிக்காவிலிருந்து ஒரு வீடியோச் செய்திவழியாகத் தன்னுடைய மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டார். பேரழிவு நிவாரணத்தின்போது, தேவையுள்ளவர்களுக்குப் பாதுகாப்புப் பொதிகளைக் கொண்டுசென்ற மேத்தாவின் முயற்சிகளை அவர் பாராட்டினார். சேகர் நேர்மையானவர், திறனுள்ளவர், அர்ப்பணிப்புள்ளவர். அவரைத் தலைவராகக் கொள்வது ரோட்டரியின் அதிர்ஷ்டம். கடவுள் அவரை ஆசிர் வதிக்கட்டும், என்றார் அவர்.

RID கமல் சங்வி தொகுத்து வழங்கிய இந்த நிகழ்ச்சியானது, மகிழ்ச்சி, மேன்மை, தோழமையின் ஆர்வமூட்டும் தொகுப்பாக இருந்தது;



RID கமல் சங்வி மற்றும் சோனல் RIPN மேத்தா மற்றும் ராஷி அவர்களை கௌரவிக்கின்றனர்.

நாடெங்கிலுமிருந்தும் பங்களாதேஷ், நேபாளிலிருந்தும் பல்வேறு மாவட்டங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டார்கள். மூத்த தலைவர்கள் மேத்தாவுக்கு கலாச்சார முறையில் பாராட்டு வழங்கினார்கள். PDG அனிருத்தா ராய் சௌத்ரி பங்கேற்பாளர்களை வரவேற்றார்.

TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி, RILM உருவாக்கத்தில் மேத்தாவின் பங்கைப்பற்றிப் பேசினார். அப்போது, ரோட்டரி தெற்காசிய அமைதி மாநாட்டில் கொழும்பு அறிவிப்பு வெளியாகியிருந்தது, அப்போது மேத்தாவும் Y P தாஸும் RIDகளாகவும், பேனர்ஜி RI தலைவராகவும் இருந்தார்கள். இந்த ஆவணம், ரோட்டரி தெற்காசியச் சமூகம், ரோட்டரி இந்தியா எழுத்தறிவு நோக்கத்தின் உருவாக்கத்துக்கு வழிவகுத்தது. சேகருடைய முயற்சி தான், எழுத்தறிவின்மையை நீக்குதலை இந்தியாவில் ஒரு பரபரப்பான கருத்தாக ஆக்கியது என்றார் அவர்.

PRID Y P தாஸுடன் தான் RI இயக்குநராகச் சேவை புரிந்த இரண்டு சிறப்பான ஆண்டுகளுடைய நினைவுகளை மேத்தா மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொண்டார். நாங்கள் நால்வரும் ஒன்றாக இரவு உணவுக்குச் செல்வோம். ராஷி, மஞ்சு, நான் மூவரும் சைவ உணவு உண்ணுவோர். நாங்கள் இரவுணவுக்கு அமர்ந்ததும் தாஸ் சொல்வார், ஓ அசைவ உணவைப் பிரிந்து நான் மிகவும் வருந்துகிறேன்! உங்களுக்குத் தெரியுமா? சென்ற முறை நாங்கள் வியட்நாம் சென்றிருந்தபோது, அவர்கள் உயிருடனுள்ள நத்தைகளை எங்கள் தட்டில் பரிமாறுவார்கள். உடனே நான் சொல்வேன், அடக் கடவுளே, இங்கு நாம் சைவ உணவு உண்கிறோம், நீங்களோ நத்தைகளைப்பற்றிப் பேசுகிறீர்கள். நாங்கள் ஒவ்வொரு முறை இரவுணவுக்காக அமரும் போதும் அவர் அதைச் சொல்வார். நகைச்சுவை ஒருபுறமிருக்க, நாங்கள் ஒன்றாக மிக மகிழ்ச்சியான நேரத்தைச் செலவிட்டோம். RI தலைமையகத்தில் இந்தியத் தலைவர்கள் (அவரும் மேத்தாவும் RIDகள், பேனர்ஜி RI தலைவர் மற்றும் அசோக் மகாஜன் TRF அறங்காவலர்) "இந்திய மாஃபியா" என்று அழைக்கப்பட்டதை தாஸ் நினைவுகூர்ந்தார். ஆனால், நாங்கள் இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாக இருந்தபோதும் சரி, இயக்குநர்களானபிறகும் சரி, நாங்கள் ஒரு சிறந்த பணி உறவை அனுபவித்தோம். சேகர் பணியில் மிகுந்த கவனம் செலுத்துகிறவர். இரவு நெடுநேரம்வரை உழைத்துக் கொண்டிருப்பார். அவர் பெரிய கனவுகளைக் காண்கிறவர்; சாதிக்கிறவர். அவருடைய எழுத்தறிவுத் திட்டம் அவருடைய சிறப்பைச் சொல்லும். அவரை அந்தத் திசையில் செலுத்தும் அமைதியான விசைதான் ராஷி என்றார் அவர்.

RID பரத் பான்ட்யா, மேத்தாவுடைய "கவர்ச்சி"யைச் சிறப்பாகச் சுட்டிக்காட்டினார்: அர்ப்பணிப்புணர்வு, நம்பிக்கை, மனப்போக்கு, தன்னுடைய இலக்குகளை மேம்படுத்துவது, புதுமை முயற்சிகள், பிறர்மீது நுண்ணுணர்வு, ஊக்கம் தரும் தலைமை, செயலில் கவனம் செலுத்துவது. மேத்தாவுடைய இக்குணங்களைக் குறிப்பிட்ட அவர், RILMஐப் பெரிய வெற்றியாக்கிய TEACH தூண்களை வடிவமைத்த மேத்தாவைப் பாராட்டினார்.

சேகர் என்பதற்கு என்ன பொருள் என்று கூகுளில் தேடியபோது, அது அந்தச் சொல்லை ஷிகார் என்று எடுத்துக்கொண்டுவிட்டது, "உச்சம்" என்பதுதான் அதன் பொருள் என்று பதில் சொன்னது. அது உண்மைதான். அவர் அர்ப்பணிப்பின் உச்சம். குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சைகளாகட்டும், எழுத்தறிவை



*PDG வினய் குல்கர்னி போலியோ நிதியிற்காக RIPN சேகர் மேத்தாவிடம் ரூ.50 ஆயிரம் காசோலையை தருகிறார். PDGs மகேஷ் கோட்பாகி, அனிருதா ராய் சௌத்ரி, RID கமல் சங்வி மற்றும் DGN பங்கஜ் பட்டேல் ஆகியோரும் உடன் உள்ளனர்.*



RID *பரத் பாண்ட்யா, மாதவி பாண்ட்யா,* PRIP *கல்யாண் பானர்ஜி,* RID *கமல் சங்வி,*
TRF *அறங்காவலர் குலாம் வஹவன்வதி, ராஷி மேத்தா மற்றும் சோனல் சங்வி.*

முன்னிறுத்துவதாகட்டும், அவர் மிகுந்த அர்ப்பணிப்புணர்வுடன் பணியாற்றுகிறார் என்றார் PRID மனோஜ் தேசாய்.

மேத்தாவை RIPNஆகத் தேர்ந்தெடுத்த வேட்பாளர் நியமனக் குழுவின் ஒருவராக இருந்த PRID P T பிரபாகர் அந்தச் செயல்முறையை விளக்கினார். அது ஒரு கண்டிப்பான செயல்முறை, RI தலைவர் அல்லது பொதுச் செயலாளர்கூட அதில் நுழைய இயலாது. குழு ஒன்றுகூடும்போது, தலைவர் சிகாகோவில் இருக்கக்கூடாது என்ற வழக்கம் இருக்கிறது. பாலினம், வயது அல்லது மதத்தைக் கருத்தில் கொள்ளாமல் சிறந்த வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை RI இந்தக் குழுவுக்கு வழங்குகிறது. ஆகவே, இதுவரை ஒரு பெண் தலைவர் இங்கு இருந்ததில்லை என்பதால்மட்டும் நாங்கள் ஒரு பெண் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க இயலாது.'' வேட்பாளர்களுக்குக் கேட்கப்படும் கேள்விகளில் ஒன்று, “அடுத்த பத்தாண்டுகளில் நீங்கள் ரோட்டரியை எங்கு காண்கிறீர்கள்?” “ரோட்டரியில் 1.3 மில்லியன் உறுப்பினர்கள் இருப்பார்கள்”; “அறக்கட்டளையின் பங்களிப்புகள் இருமடங்காகும்” என்பதுபோல் இதற்குப் பலவிதமான பதில்கள் வந்தன. சேகருடைய பதில் அனைவரையும் வியக்கவைத்தது: இன்னும் மூன்று ஆண்டுகளில், இளம்பிள்ளைவாதத்தை நீக்குவதில் நம்முடைய பணிக்காக ரோட்டரி ஒரு நோபல் பரிசுப் பெருமையைப் பெறும் என்றார் அவர். குழுவினர் இந்தப் பதிலைக் கேட்டு வியந்து போனார்கள்.

நிகழ்ச்சி நிறைவடையும் நேரத்தில், மகிழ்ச்சியில் திக்குமுக்காடியிருந்த மேத்தா எல்லாருக்கும் அவர்களுடைய நல்ல வாழ்த்துகளுக்காகவும் ஆசி களுக்காகவும் நன்றி கூறினார். சிறப்பாக, அனைத்து மூத்த தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்த அவர், என்னை வடிவமைத்ததற்காக நன்றி. உங்கள் ஒவ்வொருவராலும் ஏதோ ஒருவிதத்தில் நான் ஊக்கம் பெற்றுள்ளேன், தூண்டப்பட்டுள்ளேன் என்றார்.

தன்னுடைய ஆண்டில் தான் அறிமுகப்படுத்த விரும்பும் சில திட்டங்களை அவர் விவரித்தார். இந்தியாவை விமர்சித்தது போதும். நாம் நம்முடைய பெருமைகளை உரக்கச் சொல்லவேண்டிய நேரம் இது. பன்னாட்டுக் கூட்டங்களில் நாம் நம்மைக் குறைவாகக் காட்சிப்படுத்து வது ஏன்? உறுப்பினர் எண்ணிக்கை, பங்களிப்பில் நாம் உயர்ந்து நிற்கிறோம். இங்கு பல பன்னாட்டு நல்கைத் திட்டங்களை நாம் மிக நன்றாகச் செய்துவருகிறோம். உறுப்பினர் எண்ணிக்கையை 1.3 மில்லியனாக அதிகரிக்கும் தன்னுடைய திட்டங்களைப் பற்றி அவர் பேசினார். ஒவ்வொரு ரொட்டேரியனும் அடுத்த மூன்றாண்டுகளில் ஓர் உறுப்பினரை அறிமுகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நம்மால் இதைச் செய்ய இயலும். கல்யாண் அவர்கள் TRF தலைவராக இருந்தபோது, அதற்கு $300 மில்லியன் பங்களிப்பதாக நாம் வாக்களித்ததும், அதை நிறைவேற்றியதும் நினைவிருக்கிறதா?'' அவர் பகிர்ந்து கொண்ட இன்னொரு யோசனை, பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெவ்வேறு அறக்கட்டளைகளின் மூலம் நிதி திரட்டுவதற்குப் பதிலாக, இந்தியா முழுவதற்கும் பொதுவான மையப் பேரழிவு மேலாண்மை நிதியொன்றை அமைத்தல்.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

மேலும் படங்கள் அடுத்த இதழில்.

# நூற்றாண்டு கொண்டாடும் RC கல்கத்தா

ரஷீதா பகத்

செப்டம்பர் 26 அன்று மாலை, கல்கத்தா ரோட்டரி சங்கத்தின் 100வது பிறந்தநாள் கொண்டாடப்பட்ட கூடத்தில் பழைய நினைவுகள் பொங்கி வழிந்தன. பல கலாசாரங்களும் துள்ளலான வண்ணங்களும் கலந்து தோன்றின. டாக்காவின் ஜம்தானிகளை அணிந்துகொண்டு பங்களாதேஷ் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள், இன்னொருபக்கம், அதற்கிணையாகக் கேரளாவிலிருந்து அழகான, தங்கச் சரிகையோரங்களைக் கொண்ட சந்தனப்புடைவைகளுடன் லக்னௌ ரோட்டரி சங்க உறுப்பினர்கள் வந்திருந்தார்கள். RC டாக்கா, RC லக்னௌ இரண்டு சங்கங்களையும் RC கல்கத்தா துவக்கி வைத்தவை.

இந்நிகழ்ச்சி, சங்கத்தின் 4,427வது சந்திப்பாக நடத்தப்பட்டது. முன்னாள் தலைவர், நூற்றாண்டுக் குழுத்தலைவர் சௌமென் ராய், சங்கத்தின் 100 ஆண்டுப் பயணத்தின் முக்கிய அம்சங்களைச் சுட்டிக்காட்டிப் பார்வையாளர்களை நினைவுப்பாதையில் அழைத்துச் சென்றார்.



1919 செப்டம்பர் 26ல் தொடங்கப்பட்ட இந்தச் சங்கம், ஜனவரி 1, 1920ல் பட்டியலிடப்பட்டது. ஆசிய முதன்மைப்பகுதியில் இயங்கிவரும் மிகப் பழைமையான ரோட்டரி சங்கம் இதுதான். இது இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷில் 28 சங்கங்களை ஆதரித்துள்ளது.

பார்வையாளர்கள் பகுதியில் PDG (1984–85) சோமேந்திர சந்திர நந்தியைக் காண்கிறேன், சங்கத்தின் மிக மூத்த வாழும் உறுப்பினரான இவர், மே 1964ல் இவர் சங்கத்தில் சேர்ந்ததாகச் சொல்கிறார். சங்கம் அவருக்குத் தந்த மிகச்சிறந்த பரிசு என்ன என்று கேட்டபோது, அவர் சிரித்தபடி சொன்னார்: நான் ஆங்கிலத்தில் எழுதக் கற்றுக்கொண்டேன். நம்முடைய சங்க இதழான தி சகாவுக்கு நான் பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்தேன். நான் பல புத்தகங்களை எழுதினேன்.''

55 ஆண்டுகளாகச் சங்க உறுப்பினராக இருக்கும் அவர் மிகவும் விரும்பி அனுபவித்தது என்ன? புதிய நண்பர்களை உருவாக்கிக்கொள்ளுதல், ஏகப்பட்ட மாறுபட்ட மக்களைச் சந்தித்தல். இது ஒரு மிகச்சிறந்த பயணமாகும்.''

அந்தப் பயணமும் பழைய நினைவுகளும் அடுத்த சில மணி நேரங்களில் நன்கு விவரிக்கப்பட்டன. RC கல்கத்தா ஆதரித்த 28 சங்கங்களில் 12 சங்கங்கள் இந்த நிகழ்ச்சிக்குத் தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன. பங்களாதேஷிலிருந்து ஒரு பெரிய பிரதிநிதிகள் குழு வந்திருந்தது. RID 3281 PDG சாம் சௌகெத் ஹுசைன் (RC மத்திய டாக்கா) இதற்குத் தலைமை தாங்கினார். டாக்கா, பாட்னா, லக்னௌ, டார்ஜிலிங் போன்ற ஊர்களிலுள்ள ரோட்டரி சங்கங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

நிகழ்ச்சியை நடத்திய சங்கத் தலைவர் பூர்னேந்து ராய் சௌத்ரி, சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் 20 பேர் அன்றைக்கு அங்கு இருப்பதாகக் குறிப்பிட்டார்.

RID 3291 மற்றும் இச்சங்கத்தால் ஆதரிக்கப்பட்ட மற்ற பல சங்கங்களுடைய மிகச்சிறந்த எதிர்வினைக்குத் தன்னுடைய நண்றியுணர்வை வெளிப்படுத்திய அவர், இது இந்தியாவில் ரோட்டரியின் நூற்றாண்டு. ஆகவே, நாம் அனைவரும் ஒன்றாகக் கொண்டாடுவோம் என்றார். 20 முந்தைய தலைவர்களுடைய மிக உறுதியான ஆதரவைப் பெறும் அதிர்ஷ்டம் அவருக்கு இருந்தது. 100வது தலைவராக இருப்பது எனக்கு மிகப்பெரிய பெருமை.

இப்போது, கொல்கத்தாவில் உள்ள ரோட்டரி சதனில் நாம் ஆதரித்த 28 சங்கங்களின் பெயர்களும் உள்ளன, என்றார் அவர். அவருடைய குழுவினர் ஏற்கெனவே கொழும்புக்குச் சென்று வந்துள்ளார்கள், அக்டோபர் 16லிருந்து 21வரை ஷாங்காய்க்குச் செல்லவுள்ளார்கள். அந்த நேரத்தில் அங்கு RC ஷாங்காயும் ரோட்டரியின் 100 ஆண்டுகளைக் கொண்டாடவுள்ளது. இச்சங்கம் 100 ஆண்டுகளிலும் தொடர்ந்து இயங்கவில்லை; நடுவில் நிறுத்தப்பட்டுப் பின்னர் மீண்டும் தொடங்கப்பட்டது; எனினும், நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது.

RC கல்கத்தா ஆதரவளித்த முதல் சங்கம், லாகூர்தான் என்றார் நூற்றாண்டுக் குழுத்தலைவர் சௌமென் ராய். அந்த அறையில், எண்பதாண்டுகளைக் கடந்த பல சங்கங்கள் இருந்தன. எடுத்துக்காட்டாக, 1936ல் ஆதரவளிக்கப்பட்ட ஜாம்ஷெட்பூர், டாக்கா (1937) மற்றும் லக்னௌ (முன்னாள் பிரதமர் A B வாஜ்பாய் இதில் ஒரு கௌரவ உறுப்பினராக இருந்தார்).

தன்னுடைய சங்கத்தின் குறிப்பிடத்தக்க திட்டங்கள் சிலவற்றைப் பட்டியலிட்ட சௌத்ரி, ஆண்டுதோறும் நடைபெறும்



*RC கொல்கத்தாவின் நூற்றாண்டு விழாவில் DG அஜய் அகர்வால், சங்கத்தலைவர் பூர்ணேந்து ராய் சௌத்ரி, RIPN சேகர் மேத்தா, சங்கச் செயலாளர் அனுசுவா தாஸ் மற்றும் RID கமல் சங்வி.*

# மகிழ்ச்சி நகரத்தில் ரோட்டரியின் வரலாறு




RC கொல்கத்தா தலைவர் பூர்ணேந்து சௌத்ரி மற்றும் சௌமென் ரே PRIP கல்யாண் பானர்ஜியிடம் தங்கள் சங்க பத்திரிக்கையை அளிக்கின்றனர்.

RC கல்கத்தாவின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களில் பேசிய PRIP கல்யாண் பேனர்ஜி, ரோட்டரி வரலாற்றைத் தான் திரும்பிப் பார்த்ததாகக் குறிப்பிட்டார். 1919ல், உருக்கு வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த புலம்பெயர்ந்த தொழிலதிபரான R J கூம்ப்ஸ் என்பவர் அமெரிக்காவுக்கு தொழில் முறைப் பயணமாகச் சென்று விட்டுக் கல்கத்தா திரும்பினார் என்று நான் படித்தேன். அப்போது அவர் ரோட்டரி தலைமையகத்திலிருந்து, கல்கத்தாவில் ஒரு சங்கத்தைத் தொடங்குவதற்கான அதிகாரத்தைப் பெற்றுவந்தாராம்.'' இங்கு வந்த பிறகு, தன்னுடைய ஐரோப்பிய நண்பர்கள் சிலரிடம் (இவர்களில் பெரும்பாலானோர் ஃப்ரீமேசன் உறுப்பினர்கள்) இந்த ஆர்வத்தை உண்டாக்குவதில் அவர் வெற்றிபெற்றார். சுமார் 45 ஆண்களைக் கொண்ட ஒரு மதிய உணவுக் கூட்டத்தின்போது, கல்கத்தாவில் ரோட்டரி சங்கமொன்றைத் தொடங்குவதற்கான முறையான தீர்மானம் நிறைவேறியது. Dr வில்லோபி கென்னடி என்ற மருத்துவர், அறுவைச்சிகிச்சை வல்லுனர் சங்கத்தின் முதல் தலைவரானார்.

Rtn ஜேம்ஸ் டேவிட்ஸனின் மேக்கிங் நியூ ஃப்ரெண்ட்ஸ் (புதிய நண்பர்களைப் பெறுதல்) என்ற புத்தகத்தைப்பற்றிப் பேனர்ஜி குறிப்பிட்டார். இந்தப் புத்தகம், சூயஸுக்குக் கிழக்குப்பக்கத்தில் புதிய ரோட்டரி சங்கங்களை அமைப்பதற்காக மத்திய மற்றும் தொலைகிழக்குக்கு ஜேம்ஸ் டேவிட்ஸன் சென்ற ரோட்டரிப் பயணத்தைப்பற்றியது. இதிலிருந்து பேனர்ஜி குறிப்பிட்ட பகுதி, 1928 ஆகஸ்ட் 23ம் தேதி, மான்ட்ரியாலிலிருந்து புறப்பட்ட டச்செஸ் ஆஃப் அதோல் என்ற கப்பலில், RIயின் கௌரவப் பொது ஆணையரான டேவிட்ஸனும் அவருடைய மனைவி, அவர்களுடைய மகளும் இருந்தார்கள். RIயிலிருந்து மூன்றாண்டுப் பயணமாகப் புறப்பட்ட அவர்கள், லண்டனுக்கும் டோக்கியோவுக்கும் இடையில் சென்ற நீராவிக் கப்பல்களில் பயணம் செய்தார்கள், 2,000 தொழிலதிபர்கள், தொழில் வல்லுனர்களைச் சந்தித்தார்கள், ரோட்டரி, அதன் கொள்கைகளை விளக்கினார்கள்.

கல்கத்தாவில், இங்கிலாந்துக் கால்வாய்க்கும் சீனக் கடலுக்கும் இடையில் நம்முடைய இளமையான பன்னாட்டு நிறுவனத்தின் ஒரே குழந்தையைக் கண்டு டேவிட்ஸன் மிகவும் வியந்தார். இந்தப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு வேறு எந்த ரோட்டரித் தொடர்பு நபர்களும் அப்போது இருக்கவில்லை. இந்தச் சங்கம் ஒன்பது ஆண்டுகளுக்குமேலாக இயங்கிவந்தாலும், எந்த RI பிரதிநிதியும் அங்கு வந்திருக்கவில்லை. RIக்குத் தன்னுடைய அதிகாரப்பூர்வமான அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்: RC கல்கத்தா எனக்குள் ரோட்டரியைப்பற்றிய பெருமை, வியப்பு ஆகிய இரண்டையும் விழித்தெழச்செய்தது. அப்போது கல்கத்தாவில் உயிர்வாழ்ந்த ஒரே பட்டியலிடப்பட்ட உறுப்பினர் வசிப்பாளர், எனினும் ஒரு பெரிய வலிமை வழங்குபவராக இருந்த Rtn W K பட்டே, சங்கத்தின் 10வது ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தில் பேசியபோது, "இது ஒரு மிகச் சிறிய குழந்தை, ஊட்டச்சத்து இல்லாமல் இது இறந்துவிடுமோ என்று அவ்வப்போது தோன்றுகிறது" என்று இச்சங்கத்தை விவரித்தார். வெறும் ஐந்தே பேர் இருந்த ஒரு நினைவில் நிற்கும் கூட்டத்தைப்பற்றி அவர் குறிப்பிட்டார். அதிலும் இருவர் விருந்தினர்கள்!

*ஆனால், நகரத்தில் நடைபெற்ற ஒரு முக்கியமான தொண்டு நிகழ்வு வலுவான ஆதரவை ஈர்த்துள்ளது. தான் கலந்துகொண்ட இரு மதிய உணவுக் கூட்டங்களிலும், தற்போது சுமார் 80 எண்ணிக்கையுள்ள ஐரோப்பிய மற்றும் இந்திய உறுப்பினர்களிடையே உள்ள மகிழ்ச்சியான சூழலையும் நல்ல தோழமையையும் கண்டு மகிழ்ந்தார் டேவிட்ஸன். சமூகத்துக்குச் சங்கம் வழங்கியுள்ள பல சேவைகளையும் அவர் குறிப்பிட்டார். இச்சங்கத்தின் மதிப்புக்குரிய வருகையாளர்களுடைய பெரிய பட்டியலைப் பார்த்தால், அதில் இந்தியாவின் வலுவான மனிதர்கள் அனைவரையும் காணலாம். ஐரோப்பியர்கள், இந்தியர்கள், சிறந்த இதயத்தையுடைய மனிதரான இர்வின் பிரபு உள்ளிட்ட பல வைஸ்ராய் களும் இதில் உள்ளார்கள் என்றார் அவர்.*

*1928ல், காந்திஜி இன்னும் தேசத்தந்தை யாகியிருக்கவில்லை; "மகாத்மா" என்ற புனைபெயரையும் வென்றிருக்கவில்லை. ஆனால், செப்டம்பர் 1925ல் RC கல்கத்தா வின் ஒரு சந்திப்பில் காந்தி கலந்து கொண்டதும், சர்காவின் பொருளாதார மற்றும் ஆன்மிக மதிப்பு என்ற தலைப்பில் பேசியதும் உண்மை!*

*டேவிட்ஸனிடம் திரும்பச் செல்வோம். குழுவின் உறுப்பினர்களில் 30 பேர் இந்தியர்கள் என்பதைக் கண்டு மகிழ்ந்தார். அதன் தலைவரும் இந்தியர் தான், மிகுந்த பண்பாடு, மதிப்பையுடைய அந்த மனிதருடைய பெயர், Rtn அப்துல் அலி. அவருக்குப் பின் தலைவரானவர், ஸ்டேட்ஸ்மன் ஆசிரியரான அல்ஃப்ரெட் வாட்ஸன்.*

*டேவிட்ஸனுடைய கூர்மையான பார்வைக்கு ஒரு சான்று, அவர் தனித்துக் குறிப்பிட்டிருந்த ஒரு மனிதர். ஓர் ஆர்வம் மிக்க, மிகவும் நல்ல அறிவையுடைய இந்திய உறுப்பினர், N C லஹார்ரி. இவர் பல ஆண்டுகளாக இச்சங்கத்தில் செயலாளர், பொருளாளர், சங்கத்தின் வார இதழான "தி சகர்"வின் ஆசிரியர் போன்ற பல பொறுப்புகளில், பல குழுக்களில் விசுவாசத் துடன் சேவை புரிந்துள்ளார். பேனர்ஜி தொடர்ந்து கூறியது, பின்னாட்களில் RIயின் முதல் இந்தியத் தலைவராக 1961–62ல் பணியாற்றிய லஹார்ரியிடம் அப்போதே ரோட்டரிப் பொறி தூண்டப்பட்டுவிட்டது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.''*

*அப்போதிலிருந்து, இந்தியா இன்னும் இரண்டு RI தலைவர்களைத் தந்துள்ளது, இருவருக்கும் ஒரு கொல்கத்தா இணைப்பு உண்டு: ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜி. 2020–21ல் நான்காவது RI தலைவராகச் சேவை புரிவதற்காக இயக்குநர் சுசீல் குப்தா தேர்ந்தெடுக்கப்பட்டார். துரதிருஷ்டவசமாக, அவருடைய எதிர்பாராத உடல் நலக் குறைபாட்டால், அவர் அந்தப் பணியிலிருந்து விலகவேண்டியிருந்தது. ஆனால், அவர் தன்னுடைய உடல்நலனைத் திரும்பப்பெற்று விரைவில் ரோட்டரிக்குத் திரும்பவேண்டும் என்று நாம் வேண்டிக் கொள்கிறோம். இப்போது, கொல்கத்தா மீண்டும் தன்னுடைய சொந்த ரோட்டரி உலகத் தலைவரைப் பெற்றுள்ளது; 2021–22ல் சேகர் மேத்தா இப்பொறுப்பை வகிக்க வுள்ளார். கொல்கத்தாவில் உண்மையிலேயே மிகச்சிறந்த ரோட்டரித் தலைவர்களின் வரிசை உருவாகியுள்ளதாகத் தோன்றுகிறது; அநேகமாக, இங்குள்ள புனிதமான கங்கை நீர் தான் இதற்குக் காரணமாக இருக்குமோ, என்னவோ!''*

*இதைத்தொடர்ந்து, அவர் நகைச்சு வையான தொனியில் இவ்வாறு குறிப்பிட்டார்: பல ரோட்டரியன்கள் கொல்கத்தாவில் குடியேறுவதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்; ஏனெனில், ரோட்டரியின் ஏணியில் உயரத்தைத் தொடவேண்டுமென்றால், கொல்கத்தா விலிருந்து தான் ஏறத் தொடங்கவேண்டும் என்று அவர்கள் நம்புகிறார்களாம்.''*

*RI தலைவர் என்றமுறையில், அமெரிக்காவுக்கு வெளியிலுள்ள பல சிறந்த சங்கங்களின் (அயர்லாந்தில் பெல்ஃபாஸ்ட், ஐரோப்பாவில் முதல் ரோட்டரி சங்கம், பின்னர் லண்டன் ரோட்டரி சங்கம் மற்றும் பிர்மிங்காம் ரோட்டரி சங்கம்) நூற்றாண்டுக் கொண்டாட்டங் களில் கலந்துகொள்கிற வாய்ப்பு அவருக்குக் கிடைத்ததாக பேனர்ஜி குறிப்பிட்டார். ஆனால், இங்கு கல்கத்தாவில் உள்ளது போல் ரோட்டரியினர் பெருமையாகவும் அமைதியாகவும் இருப்பதை நான் எங்கும் பார்த்ததில்லை. நீங்கள் எல்லாரும் உங்களுடைய சங்கத்துடன் ஒரு பொறுப்பு, இணைப்பை, அன்பைக் கொண்டிருக்கிறீர்கள். இது தனித்துவமானது. இந்தப் பிணைப்பு என்றென்றும் தொடரட்டும்.''* ■

குழந்தைகள் விருந்தை இவற்றில் ஒன்றாகக் குறிப்பிட்டார். இதை நாங்கள் 1925ல் தொடங்கினோம், அதன் பிறகு, 95 ஆண்டுகளாக இது தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. நாங்கள் ஒரு காப்பகத்தை யும் நடத்துகிறோம்; அது ஒரு புதையலைப்போல் அரிய விஷயங்களை வழங்குகிறது. நம்முடைய முன்னாள் தலைவரும், நம் சங்கத்தின் முதல் பெண் தலைவருமான, இங்கு நம்மிடையே வந்துள்ள நந்திதா சென், முன்னாள் தலைவர் டாக்டர் தீபக் R சர்பாதிகாரி ஆகியோர் இதில் மிகுந்த ஆர்வம் காட்டிப் பராமரித்து வருகிறார்கள்.

RC கல்கத்தா-தான் ப்ரக்கோலி (Broccoli) விளைவிக்கும் பழக்கத்தை இந்தியாவுக்குக் கொண்டு வந்தது என்பதைப் பல ரொட்டேரியன்கள் அறிந்திருக்க மாட்டார்கள்; எங்களுடைய அடுத்த திட்டம், இந்தியாவில் அஸ்பாரகஸ் விளைச்சலைப் பரப்புவது. இதற்கு ஏற்ற இடமாகிய டார்ஜிலிங் மலைகளுக்கு நாங்கள் செல்லவிருக்கிறோம், நெதர்லாந்து ரோட்டரி யினர்களுடைய உதவியுடன் இதைச் செயல்படுத்தவிருக்கிறோம். இந்த நகரத்தில் ஆஸ்பராகஸுக்கு ஒரு மிகப்பெரிய தேவை உள்ளது, என்றார்.

2011ல், முன்னாள் தலைவர் சௌமென் ராயுடைய சுறுசுறுப்பான பங்களிப்புடன் ரோட் டரியினர் இந்திய ரயில்வேத் தூய்மை வச திகளில் மாற்றங்களை முன்வைத்தார்கள் என்றும் சௌத்ரி பகிர்ந்து




RC *கொல்கத்தாவின் ஆரம்பக்கால நிகழ்வுகளை சித்திரிக்கும் நாடகம்.*

கொண்டார். இதன் விளைவாக, பெரும்பாலான இந்திய ரயில்வேப் பெட்டிகள் கட்டுப்படுத்தப்பட்ட வெளிவிடல் கழிப்பறைத் திட்டம் மற்றும் உயிரியல் கழிப்பறைகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.''

இந்தச் சங்கம், இப்போது சிறு நடைபாதைப் பள்ளிகளை அமைக்கத் திட்ட மிட்டுள்ளது. இதன்மூலம், குப்பை பொறுக்குவோர், தினக்கூலிப் பணியாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் போன்றோருடைய குழந்தைகளின் கல்விக்கு வழிவகை செய்யப்படும். பின்னர் அவர்கள் வழக்கமான பள்ளிகளில் ஒருங்கிணைக்கப்படுவார்கள். இந்தக் குழந்தைகளுடைய அறிவும் ஆற்றலும் எளிதில் நம்மிடம் தொற்றிக்கொள்ளும்; அவர்கள் எங்களுடன் ஆங்கிலத்தில் பேச முயலும்போது நீங்கள் அவர்களைப் பார்க்கவேண்டும்! அவர்கள் தொடர்ந்து படிப்பதை நாங்கள் உறுதிசெய்வோம்.''

இதய அறுவைச்சிகிச்சைத் திட்டமொன்று (1,000 அறுவைச் சிகிச்சைகள்), 200 பழங்குடியின மாணவர்களுக்கான ஒரு பள்ளி விடுதி, 25 கிராமங்களை ODF ஆக்குதல், ஒரு நடைபாதைப் பள்ளியைக் கட்டுதல், குழந்தைகளில் கண்பார்வையிழப்பைத் தடுத்தல், நீர், தூய்மை மற்றும் பிற நலத் திட்டங்களும் உள்ளன.

அந்த மாலையின் ஒரு முக்கிய அம்சம், ஒரு சிறு நாடக நடிப்பு. இதில் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், பிரிட்டிஷ்காரர்கள் மற்றும் இந்தியர்கள் இருவரும், அந்தந்தக் காலகட்டத்துக்குரிய ஆடைகள், நீண்ட தொப்பிகளுடன் தோன்றினார்கள். சங்கத்தின் வளமான கடந்தகாலத்தின் சில முக்கிய அம்சங்களை நினைவுகூர்ந்த இந்த நாடகம், பார்வையாளர்களைச் சங்கத்தின் புனிதமான வரலாற்றுப்பாதையில் திரும்ப அழைத்துச்சென்றது.

நூறாண்டுகளாக RC கல்கத்தா நடத்திவரும் சிறந்த செயல்பாடுகள், சேவைகளைப்பற்றிய தன்னுடைய வியப்பை வெளிப்படுத்திய PRIP கல்யாண் பேனர்ஜி உங்களுடைய 100வது நிறுவன விழாவை, வாழ்நாளில் ஒருமுறைமட்டுமே வருகிற நிகழ்வைச் சிறப்பாக, பிரமாண்டமான கொண்டாட்ட நிகழ்ச்சியாக நடத்தியதற்காக அவர்களைப் பாராட்டினார், ரோட்டரி 1920ல்தான் இந்தியாவுக்கு முதன்முறையாக வந்தது என்று இந்திய ரோட்டரியினர் எப்போதும் நம்பிவந்திருப்பதாகக் குறிப்பிட்டார். ஃபிலிப்பைன்ஸில் உள்ள RC மணிலாதான் ஆசியாவில் முதல் ரோட்டரி சங்கம் என்றும், RC கல்கத்தா இரண்டாவது என்றும் அவர்கள் நம்பியுள்ளார்கள். ஆனால், நீங்கள் இங்கு உங்களுடைய சங்கத்தை 1919ல் ஒன்றுதிரட்டியுள்ளீர்கள், அதாவது, மணிலாவுக்கு முன்பாக. வரலாற்று உண்மைகள் எப்படியிருந்தாலும் சரி, நான் கல்கத்தாவைக் கண்மூடித்தனமாக ஆதரிப்பேன். என்னைப் பொறுத்தவரை கல்கத்தா-தான் எல்லாமே. ஆகவே, இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்!

100 ஆண்டுகளுக்குமுன் இந்தச் சங்கம் அமைக்கப்பட்டதிலிருந்து, ஒவ்வொரு வாரமும் அதன் வாராந்திரக் கூட்டங்கள் கண்டிப்பாக நடைபெற்றுவந்திருப்பதைக் குறிப்பிட்டு வியந்தார் அவர். போர் வந்தாலும் சரி, பஞ்சம் வந்தாலும் சரி, நோய் வந்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி. உங்கள் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுள்ளன. இது ஒரு மிகச்சிறந்த செயல்திறனாகும்!''

குழுவின் வளமான வரலாற்றைப் பற்றிய இன்னும் சுவாரஸ்யமான தகவல்களை (பெட்டிச் செய்தியைக் காண்க) வழங்கிய பேனர்ஜி, அதன் உறுப்பினர்களுடைய திட்டங்களுக்காக அவர்களைப் பாராட்டினார். எடுத்துக் காட்டாக, உங்களுடைய தனித்துவமான ரோட்டரி சதான், உங்களுடைய கம்பீரமான நூலகம்; உங்களுடைய திட்டங்களும் உங்களுடைய மக்களுமே உங்கள் செயல்திறனுக்குச் சான்றுகள். எனினும், நான் DG அஜய் அகர்வாலுக்கும் தலைவர் பூர்னேந்து ராய் சௌத்ரிக்கும் உங்களுடைய குழுவின் 80க்கும் மேற்பட்ட ரோட்டரியன்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

ரோட்டரி இந்தியாவின் எதிர்வரும் நூற்றாண்டைப்பற்றித் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும் RIPN சேகர் மேத்தா, நாம் இந்த மாலைக்காக இரண்டாண்டுகளாகக் காத்திருந்தோம், அந்தக் காலகட்டத்தில் நாம் தொடர்ச்சியாகச் சந்தித்தபோதெல்லாம், உண்மையிலேயே பெரிதாக ஏதேனும் செய்யவேண்டும் என்று நான் உங்களைத் தூண்டிவந்தேன். அதை நீங்கள் மிக நன்றாகச் செய்துள்ளீர்கள். கல்யாண் அவர்கள் சரியாகக் குறிப்பிட்டது போல், பூர்னேந்து விறுவிறுப்பாகப் பணியாற்றுவதுடன், பெரிய அளவிலும் பணியாற்றுகிறார்; எங்கு திரும்பினாலும் அவர் இருக்கிறார் RC கல்கத்தாவின் 100வது ஆண்டில் அதற்கு ஏற்ற மிகச்சிறந்த தூதுவர் அவர்!'' என்றார்.

இந்தக் கொண்டாட்டத்தின்

# அடிமட்ட அறிவால் TRFக்குக் கிடைத்த $20,000

RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் முன்னாள் தலைவரும், TRFக்கு ரூ.100 கோடி நன்கொடையாக வழங்கிப் புகழ்பெற்றவருமான D ரவிசங்கர், RC கல்கத்தாவின் 100வது நிறுவன விழாவில் சிறப்பாகப் பேசினார். PDG அனிருத்தா சௌத்ரியுடன் அவர் நடத்திய கேள்வி பதில் நிகழ்ச்சிக்குப்பிறகு பேசிய PRIP கல்யாண் பேனர்ஜி இதுபற்றி இவ்வாறு குறிப்பிட்டார்: ரவிசங்கருடைய பேச்சைக் கேட்பது எப்போதும் மகிழ்வளிக்கிற ஒன்று; மற்ற இடங்களில் பொதுவாக நமக்குக் கிடைக்காத அடிமட்ட அறிவை அவர் எப்போதும் முன்வைப்பார். ரவி, இதைத் தொடர்ந்து செய்துவாருங்கள், இந்திய ரோட்டரியில் நீங்கள் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருகிறீர்கள்.''

RC கல்கத்தாவின் 100ம் ஆண்டுக் கொண்டாட்டங்களுக்கு ஒரு சிறப்பு விருந்தினராக வருகை தந்த ரவிசங்கர், PDG அனிருத்தா ராய் சௌத்ரி முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளித்தார். அப்போது அவர், தான் இன்றிருக்கும் நிலைக்குத் தன்னை உயர்த்திய தன்னுடைய நகரத்துக்கும் (பெங்களூரு) சமூகத்துக்கும் புவியன்னைக்கும் தான் குறிப்பிடத்தக்க அளவு திரும்பித் தரவேண்டியிருந்தது என்றும், அதனால்தான் தான் ரூ.100 கோடியை நன்கொடையாக வழங்கத் தீர்மானித்ததாகவும் குறிப்பிட்டார். அவ்வாறு வழங்குவதற்கு ரோட்டரிதான் சிறந்த தளம் என்று நான் நினைத்தேன். என்னுடைய தீர்மானத்தை எண்ணி நான் மிகவும் மகிழ்கிறேன்.

படித்தவர்கள் எப்படி வழங்கு கிறார்கள் அல்லது நன்கொடை யளிக்கிறார்கள் என்பதுபற்றி அவருக்கு எரிச்சலூட்டும் விஷயம் என்ன என்று அவரிடம் கேட்கப் பட்டபோது, நான் படிக்கவில்லை, ஆகவே, படித்தவர்களை நான் கிண்டலடிக்க இயலாது. ஆனால், தாராளமாக இருப்பதையும் தங்களிடம் இருப்பதைப் பகிர்ந்துகொள்வதையும் தவிர்ப்பதன்மூலம், தாங்கள் மிகவும் அறிவாளிகளாகச் செயல்படுவதாகப் படித்தவர்கள் நினைக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். செல்வத்தைத் திரட்டி அவர்களே வைத்துக் கொள்வதன் மூலம், வழங்குவதில் இருக்கும் மகிழ்ச்சி யை அவர்கள் அனுபவிப்பதில்லை. இப்படிதான் நான் நினைக்கிறேன், ஒவ்வொருமுறையும் நான் நினைப்பது சரி என்று உறுதிசெய்யப்படுகிறது என்றார்.

பின்னர் அவர் சௌத்ரியின் பக்கம் திரும்பிக் கேட்டார்: எனக்கு உங்கள் மாவட்டத்தைப்பற்றித் தெரியாது: உங்களிடம் எத்தனை AKS உறுப்பினர்கள் உள்ளார்கள்? இந்தக் கேள்விக்கு ஒன்று எனப் பதில் வந்தபோது, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்: நான் தவறானஇடத்தில் என்னுடைய நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன். ஒரு சங்கம் அல்லது மாவட்டம் TRF திட்டங்களுக்கு எப்படி நிதி திரட்டுவது என்பதற்கான உதவிக்குறிப்புகளைக் கேட்டபோது அவர் சொன்னார், எனக்குக் கொல்கத்தாவை நன்றாகத் தெரியும்; என்னுடைய மனைவி பவோலா என்கிற மிக இனிமையான பரிசை இந்நகரம் எனக்குக் கொடுத்தது, அவர் லொரெட்டோவில் படித்தவர், அவர்தான் எனக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுத்தார், அதனால்தான் உங்களுடன் இன்று என்னால் உரையாட இயலுகிறது. கொல்கத்தாவில் பல பணக்காரர்கள் இருப்பதும், அவர்களில் பலர் இந்த விழாவிலேயே இருப்பதும் அவருக்குத் தெரியும். இவர்கள் எல்லாரும் வீட்டுக்குச் சென்று, சமூகத்திலிருந்து தாங்கள் எவ்வளவை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதுபற்றிச் சிந்திக்கவேண்டும்; தங்களுடைய காலம் முடியும்போது தங்களால் எவ்வளவை எடுத்துச் செல்ல இயலும் என்பதையும் சிந்திக்கவேண்டும். அவர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டு தீர்மானிக்கவேண்டும்.

ரவிசங்கர் இதைச் சொல்லிச் சிறிது நேரத்தில், தன்னுடைய சங்க உறுப்பினர்களில் ஒருவரான சௌரவ் கெமானி அதே இடத்தில் AKS உறுப்பினராகத் தீர்மானித் திருப்ப தாகவும், அதற்கான நடை முறையைத் தெரிந்துகொள்ள அவர் விரும்புவதாகவும் அறிவித்தார் சங்கத் தலைவர் பூர்னேந்து சௌத்ரி. அவர் அன்று $20,000 நன்கொடையை அறிவித்தார். அவரைப் பாராட்டி அணைத்துக்கொண்ட ரவிசங்கர் சொன்னார், இன்று, இந்த மனிதர் உங்கள் மாவட்டத்தின் மதிப்பைக் காப்பாற்றிவிட்டார்! ■




PDG அனிருதா ராய் சௌத்ரி, Rtn D ரவிசங்கர், சௌமென் மற்றும் பூர்ணேந்து சௌத்ரி.




*நூற்றாண்டு துவக்க விழா கொண்டாட்டத்தில் PDGs (D 3281) சாம் ஷோக்கெத் ஷீசைன், (D 3291) சோமேந்திர நந்தி, முன்னாள் தலைவர்கள் SK சர்மா, நந்திதா சென், சோனல் மற்றும் RID கமல் சங்வி.*

எதிரொலி இந்தியா, பங்களாதேஷ், நேபாளமெங்கும் கேட்கும் என்றார் மேத்தா. வேறோரிடத்தில், இன்னொரு ரோட்டரி சங்கம் 100 ஆண்டுகளை முழுமைசெய்தது. ஆனால், அவர்கள் ஓர் இரவுவிருந்துக்கு ஏற்பாடு செய்ததுடன் சரி. அதற்குமேல் அவர்கள் ஏதும் செய்யவில்லை. ஆனால் இங்கு, ஒரே ஒரு சங்கம் ஓராண்டில் ரூ.20 கோடி மதிப்புள்ள திட்டங்களை நிறைவேற்றவிருக்கிறது! இது மிகச்சிறப்பான பணி.''

இந்த மாவட்டம் இந்தக் கொண்டாட்டங்களைப்பற்றி மிகவும் ஆர்வம் காட்டிவந்துள்ளது. DG அஜயும் நானும் "100 ஆண்டுகள், ரூ.100 கோடி" என்ற சொற்றொடரை உண்டாக்கியபோது, விரைவில் நாங்கள் அந்த எண்ணை ரூ.150 கோடி என்று மாற்றவேண்டியிருந்தது. DG அஜயுடன் நான் இதைப்பற்றிப் பேசி 15 நாட்களுக்குள், ஒரே ஒருவர் (D ரவிசங்கர்) TRFக்கு ரூ.100 கோடி நன்கொடை வழங்கியுள்ளார் என்று தெரிந்துகொண்டேன். அவரும் இன்று இந்த விழாவில் அமர்ந்திருக்கிறார்!''

அவர் பிற DGக்களுடன் பேசத் தொடங்கியபோது, எதிரொலித் தாக்கமானது ரூ.2,400 கோடிவரை உயர்ந்தது! ஆம், இந்த ஆண்டில், இந்தியாவில் ரோட்டரியின் 100 ஆண்டுகளைக் கொண்டாடுவதற்காக நம்முடைய ஆளுநர்கள் நிகழ்த்தப் போகும் திட்டங்களின் மொத்த மதிப்பு அதுதான்.''

இந்த மாபெரும் தொகையைக் கேட்டபோது, பலருக்கு அதில் நம்பிக்கை இல்லை என்றார் மேத்தா. ஆனால், சென்ற வாரம் இக்னைட் நிகழ்ச்சியில் நான் DGக்களைச் சந்தித்தேன்; தாங்கள் ரூ.2,400 கோடி மதிப்புள்ள திட்டங்களை நிகழ்த்து வதாக அவர்கள் மீண்டும் வலியுறுத் தினார்கள். ரவிசங்கருடைய DG (சமீர் ஹரியானி) ரூ.800 கோடி என்கிற தன்னுடைய முதல் எண்ணை ரூ.1,000 கோடியாக மாற்றவும் செய்தார். உங்கள் சங்கத்தின் பணிகளுடைய எதிரொலித் தாக்கம் இதுதான். முன்னோடிகளாகிய நீங்கள் வழங்கியுள்ள தலைமைப்பண்பு இதுதான்!''

அடுத்து, அடுத்த சில ஆண்டுகளில் ரோட்டரிக்கான தன்னுடைய தொலை நோக்குப்பார்வையை மேத்தா விவரித்தார்: இளம்பிள்ளைவாதத்தை நீக்கும் ரோட்டரியின் பணிக்காக நோபல் அமைதிப் பரிசைப் பெறுதல்; ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கையைக் குறைந்தது 1.3 மில்லியனுக்கு வளர்த்தல்; அறக்கட்டளை வழங்குதலில் முதல் நிலைக்கு உயர்தல்; உலகின் மிகப்பெரிய சேவை நிறுவனமாக வளர்தல். கல்யாண் அவர்கள் RI தலைவராக இருந்தபோது, இந்தியா இளம்பிள்ளைவாதத்தை நீக்கியது. அதுபோல, இன்னோர் இந்தியர் RI தலைவராக இருக்கும்போது, உலகம் இளம்பிள்ளைவாதத்தை நீக்கலாம் என்று அவர் சொன்னபோது கைதட்டல்கள் பெரிதாக எழுந்தன.

இன்றைய உலகில் தேவைகள் மிகப்பெரியவை, பலவிதமானவை, சேவை என்பது ஒரு தீவிரமான பணி, ஒரு மாலை நேரத்தில் அதைப்பற்றி மேலோட்டமாகப் பேசிவிட்டுச் சென்று விட இயலாது என்றார் சங்வி. ஆகவே, இன்னும் பெரிய, இன்னும் பொருளுள்ள திட்டங்களை அவர்கள் செய்யவேண்டும்.


இச்சந்திப்பில் பேசிய RI D3291, DG அஜய் அகர்வால், அன்று மாலையில் நினைவுப்பாதையில் திரும்பச்சென்றதும், இந்தியாவிலும் நம்முடைய பிராந்தியங்களிலும் ரோட்டரி வளர்ந்துள்ள விதத்தின் முழுத் தாக்கங்களை உணர்ந்ததும் தனக்குச் சிலிர்ப்பைத் தந்ததாகக் குறிப்பிட்டார். வெறும் 20 ரோட்டரி யன்களுடன் தொடங்கிய நாம், 170,000க்கு வளர்ந்துள்ளோம், என்றார்.

இச்சங்கத்தின் உருவாக்கத்துக்குப் பின்னாலிருந்த மனிதராகிய R J கூம்ப்ஸ் இந்தியாவில் ரோட்டரியை நிறுவுவதற்கு எவ்வளவு கடினமாக உழைத்திருப்பார் என்பதை நாம் கற்பனை செய்துபார்க்கலாம். இந்திய ரோட்டரியன்கள் தங்களுடைய இலக்குகள், முக்கியத்துவங்களை மீளமைக்கவேண்டும் என்றும் அகர்வால் கேட்டுக்கொண்டார். இந்த நூற்றாண்டுக்குப் பிறகு, நீங்கள் இன்னொரு வரலாற்றுச் சிறப்பு மிக்க 100 சிறந்த ஆண்டு களைக் கொண்டாடுவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன், என்றார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்


# உலகை காக்கும் ரோட்டரி அறக்கட்டளை




நம் ரோட்டரி அறக்கட்டளை (TRF) உலகின் மிக பயனுள்ள மற்றும் நேர்த்தியாக நிர்வகிக்கப்படும் நிறுவனமாக போற்றப்படுகிறது. தொடர்ந்து 12 முறை சேரிட்டி நேவிகேட்டராலும், சேரிட்டி வாட்சின் A-plus விருதுகளும் TRF பெற்றுள்ளது.

இந்த அகண்ட உலகில் TRFயின் மூலம் ரோட்டரி செய்துள்ள நற்பணிகள் ஏராளம். நவம்பர் ரோட்டரி அறக்கட்டளை மாதம். அதனால் இந்த ஐந்து ஆண்டுகளில் 2014–15 முதல் 2018–19 வரை TRFன் நற்பணிகளை இங்கு தொடுத்துள்ளோம். மேலும் நீங்கள் TRFக்கு நிதியுதவி அளிக்க rotary.org/donate வலைத்தலத்தில் பார்க்கவும்.■







© தி ரொட்டேரியன்.

# கொல்கத்தா ரோட்டரி சங்க நூற்றா






RC கொல்கத்தாவின் முதல் பெண் தலைவர் நந்திதா சென் மற்றும் முன்னாள் தலைவர் SK சர்மா.



RID கமல் சங்வி DG அஜய் அகர்வால் மற்றும் அவர் மனைவி மம்தா அகர்வாலுடன்.

# ண்டு விழா





**மேலே:** RIPN *சேகர் மேத்தா, ராஷி மற்றும் சோனல் சங்வி.*

**இடது:** RC *கொல்கத்தா தலைவர் பூர்ணேந்து ராய் சௌத்ரி மற்றும்* PRIP *கல்யாண் பேனர்ஜியுடன்* RC *லக்னவ் சங்கத்தினர்.*





Rtn *ரவிசங்கர்* PRIP *கல்யாண் பானர்ஜியுடன்.*








RIPN மேத்தா RC கொல்கத்தாவின் பழம்பெரும் உறுப்பினரும் PDGயுமான சோமேந்திர சந்திர நந்தி மற்றும் சங்கச் செயலாளர் அனுசுவா தாஸ் அவர்களுடன்.





**மேலே:** RC *கொல்கத்தா தலைவர் பூர்ணேந்துவின் தாயார்* Rtn *பாணி ராய் சௌத்ரி* PRIP *பானர்ஜியுடன்.*

**இடது:** RC *கொல்கத்தா தலைவர் பூர்ணேந்து ராய் சௌத்ரி அச்சங்கம் நிறுவிய ஒரு சங்கத்தினரை கௌரவிக்கிறார்.* Rtn *சௌமன் ரே இடதுபுறத்தில் உள்ளார்.*




*ராஷி மேத்தா டாக்கா சங்கத்தினருடன்.*

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# அறங்காவலர் தலைவர் RID 3201ல் சேவைத் திட்டங்களைப் பார்வையிட்டார்

ரஷீதா பகத்

மாநிலத்தின் நலப் பராமரிப்பை விரும்பப்படும் நிலைக்குக் கொண்டு செல்கிற, அரசுத்துறையில் உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்காகச் சிறந்த கருவிகளைப் பெறுவதற்கான எங்களுடைய முயற்சியில், மற்ற எந்தத் தன்னார்வலர் அமைப்பையும்விட ரோட்டரி எங்களுக்கு அதிகம் உதவுகிறது என்றார் கேரள நல அமைச்சர் K K ஷைலஜா.

RC கொச்சின் சவுத், RID 3201, ஒரு மலேசியச் சங்கத்துடன் இணைந்து வழங்கிய ஒரு பன்னாட்டு நல்கையின்மூலம் CT உருவகக்கருவி மற்றும் டோசிமெட்ரிக் கருவி (CT Scan அமைப்புகளின் ஒரு மேம்பட்ட வடிவம்) போன்ற பல கருவிகளை எர்ணாகுளம் பொது மருத்துவமனையில் தொடங்கிவைத்த அவர், நலத்துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தில் (GDPல் இரண்டு சதவிகிதம்) கேரளா தன்னுடைய நியாயமான பங்கைப் பெறுவதாகவும், மக்கள்தொகையின் நலப் பராமரிப்புத் தேவைகளை எட்டுவதற்கு அது போதவில்லை என்றும் குறிப்பிட்டார். அரசாங்க நலப்பராமரிப்பு அமைப்பை முழுமையாகச் சார்ந்திருக்கும் மக்களிடையே இது குறிப்பிடத்தக்க பாதிப்பை உண்டாக்குகிறது.

''அரசு மருத்துவ மனைகளை நோயாளிகளுக்கு நட்பான, உயர்-தொழில் நுட்ப மையங்களாக மாற்றுவதற்கு, கேரள அரசு எப்போதும் முயன்றுவருகிறது. GoI புதிய நல முன்னெடுப்புகளை அறிவிப்பது உண்மைதான். ஆனால், நிதி வளங்கள் போதவில்லை.''

மன நலன், புற்று நோயைக் கண்டறிதல், கண் பராமரிப்பு போன்ற பகுதிகளில் தன்னுடைய துறைக்கு உதவுவதற்காக ரோட்டரிக்கும், DG மாதவ் சந்திரனுக்கு நன்றி தெரிவித்த அவர், முதன்மை நல மையங்களைக் குடும்ப நல மையங்களாக மாற்றும் தன்னுடைய அரசின் மிகப்பெரிய பணியை ஆதரிக்கும்படி ரோட்டரியினர்க் கேட்டுக் கொண்டார். இந்தத் திட்டம் நிறைவேற உதவிய TRFக்கு நன்கொடையளித்த ரோட்டரியன்கள் நவாஸ் மீரான் (தலைவர், ஈஸ்டர்ன் காண்டிமென்ட்ஸ்) மற்றும்



*கேரள நலத்துறை அமைச்சர் KK சைலஜா, PDG ஜான் டேனியல், TRF தலைவர் கேரி ஹுவாங், முன்னாள் MP P ராஜீவ், MP ஹிபி ஈடன், அறங்காவலர் குலாம் வஹன்வதி, கொரின்னா, DG மாதவ் சந்திரன், AKS உறுப்பினர்கள் சொச்சுஃப் சித்தலப்பில்லி, நவாஸ் மீரான் மற்றும் DRFC R ஜெயசங்கர்.*



*ரோட்டரி அமைத்துத் தந்த ஒரு வீட்டின் முன் TRF தலைவர் கேரி மற்றும் அவர் மனைவி கொரின்னா.*

கொச்சுஃப் சிட்டிலப்பிள்ளி (தலைவர், வி-கார்ட்) (இருவரும் AKS உறுப்பினர்கள்) ஆகியோருடைய தாராள மனப்பான்மைக்கு அவர் நன்றி தெரிவித்தார். இதய அறுவைச்சிகிச்சை, சிறுநீரகவியல் போன்ற மிகசிறப்பு மருத்துவ வசதி களை எர்ணாகுளம், மற்ற அரசு மருத்துவமனைகளில் தொடங்குவதற்காக CSR நிதிகளின்வழியாக மேலும் ஆதரவளிக்குமாறு அவர் அவர்களைக் கேட்டுக் கொண்டார். பெருநிறுவனப் பிரிவுடனான கூட்டுமுயற்சி களுக்கு நாங்கள் தயாராக உள்ளோம். உங்களுடைய உதவியை நன்றியுடன் ஏற்றுக்கொள்வோம். வெள்ளத்தால் கேரளத்தில் பல PHCக்கள் பாதிக்கப் பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். அவற்றை நாம் குடும்ப நல மையங்களாக மறுகட்டமைப்பு செய்வோம். குறிப்பாக, வடக்குக் கேரளத்தில் நாம் கவனம் செலுத்தவேண்டும், ஏனெனில், அங்கு பெரிய நிறுவனங்கள் அவ்வளவாக இல்லை.''

**நலப் பராமரிப்பில் கவனம் செலுத்தும் TRF**

புதிய கருவிகளைத் தொடங்கி வைத்த அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங், ரோட்டரியின் முக்கியக் கவனப் பகுதிகளில் ஒன்றான நலச் சேவைகளை மேம்படுத்து வதில் கேரள அரசுடன் இணைந்து பணியாற்றுவதில் TRF மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார். போலியோவை இந்த உலகிலிருந்து நீக்குவதற்காக நாம் மிகவும் கஷ்டப்பட்டுப் பணியாற்றியுள்ளோம். அதில் 99.98 சதவிகிதம் வெற்றியடைந்துவிட்டோம்.

ரோட்டரியில் அதிக நிதி திரட்டப்பட்டுள்ள பகுதிகளில் சில, நோய்த் தடுப்பு மற்றும் நோய்களுக்கான சிகிச்சை என்றும், உலகெங்கும் நிகழ்ந்துவரும் ரோட்டரித் திட்டங்களில் பலவும் நோய்த்தடுப்பு நலன், நோய்களுக்கான சிகிச்சையை மையமாகக் கொண்டவை என்றும் அவர் குறிப்பிட்டார். எங்களுடைய பன்னாட்டு நல்கைகள், கருவிகளை வாங்குதல், தொற்றாத மற்றும் தொற்றுகிற நோய்களைத் தடுத்தல், அவற்றுக்குச் சிகிச்சையளித்தல், உயிர் காக்கும் அறுவைச்சி கிச்சைகள், மருத்துவர் கள், பிற மருத்துவ வல்லுநர்களுக்கான பயிற்சி, இன்னும் பல முயற்சிகளுக்கு ஆதரவளிக்கின்றன.''

கேரள அரசாங்கத்துடன் இப்படியொரு சிறப்பான கூட்டணியை அமைத்திருக்கும் DG சந்திரனையும் கொச்சி ரோட்டரியன்களையும்





அவர் வாழ்த்தினார். நம்முடைய சமூகங்களில் நீடித்த மாற்றத்தைக் கொண்டுவருவதற்காகத் தொடர்ந்து கடினமாக உழைக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

இச்சந்திப்பில் பேசிய TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி, கொச்சியுட னான தன்னுடைய நீண்ட தொடர்பை நினைவு கூர்ந்தார். நல வசதி களை மேம்படுத்துகிற, தன்னுடைய மக்களுக்குத் தரமான நலப்பராமரிப்பை வழங்குகிற கேரள அரசின் முயற்சி களில் துணை நிற்பதை எண்ணி TRF மிகவும் மகிழ்வதாகச் சொன்னார். இந்த ஒத்துழைப்பு தொடரும் என்று அவர் அமைச்சர் ஷைலஜாவுக்கு உறுதிதெரிவித்தார்.

கேரளத்தில் இந்தச் சேவைத் திட்டங்களை நிகழ்த்துகிற 4-வழிக் கூட்டணி தன்னை மிகவும் கவர்ந்திருப்பதாக வாஹன்வதி தெரிவித்தார்: பாராளுமன்ற உறுப்பினர் கள், சிட்டிலப்பிள்ளி மற்றும் மீரான் போன்ற தொழில் துறைச் சாதனையாளர்கள், உள்ளூர் ரோட்டரியன்கள் மற்றும் TRF ஆகியோரின் பங்களிப்பு, இவர்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து, சமூகத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருகிறார்கள். இந்தக் கூட்டணி தொடரும் என்று நான் நம்புகிறேன்; கேரளத்தில் வாழ்கிறவர்கள் தங்களுடைய இந்தச் சாதனையை எண்ணிப் பெருமைப்படவேண்டும். இந்தியாவில் எந்த மாநிலமும் கேரளாவைப் போன்ற நலக் காரணிகளைக் காண்பிக்க இயலாது. ஆகவே, உங்களுடைய முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம்நிலை நலப் பராமரிப்பு, இந்தியாவின் பிறமாநிலங்கள் பின்பற்றுவதற்கான ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். அதே நேரம், நாம் எப்போதும் மேம்படவேண்டும்; அந்த மேம்பாட்டுக்காக உங்களுக்கு உதவுவதில் நாங்கள் முன்னணியில் நிற்போம்.''

சென்ற ஆண்டு, பேரழிவு வெள்ளத்துக்குப் பிறகு, வீடுகளைத் திரும்பக் கட்டுவதற்காகப் பல அமைப்புகளுடன் ரோட்டரி இணைந்து பணியாற்றிய தாக அவர் சொன்னார். அப்படிப்பட்ட ஒரு கூட்டணி, 75 வீடுகளைத் திரும்பக் கட்டுவதற்காக அஸ்டர் குழுவுடன் இணைந்ததாகும்.

இந்தப் பன்னாட்டு நல்கைத் திட்டத்தில் பணிபுரிந்த தன்னுடைய அனுபவத்தை விவரித்த DG சந்திரன், இந்தத் திட்டத்தில் பணியாற்றும்போது, ரோட்டரியுடன் பணியாற்றுவதில் இந்த மருத்துவர்கள் காட்டிய ஊக்கமும் அர்ப்பணிப்புணர்வும் மிகச்சிறப்பாக இருந்தன; இது ஒரு சாதாரண அரசு மருத்துவமனை என்பதை நம்புவது சிரமமாக இருந்தது என்றார்.

ரோட்டரியினர் பணிபுரியப்போகும் அடுத்த திட்டத்தையும் அவர் அறிவித்தார். இந்தத் திட்டம், இதே மருத்துவமனையில் அமைக்கப்படவிருக்கும் வலி நிவாரண மையமாகும். தங்களைக் கவனித்துக் கொள்ள யாரும் இல்லாத நோயாளிகளுடைய சிகிச்சைக்குப் பிறகு, அல்லது, தீவிர நோய் கொண்ட சூழல்களில் இந்த மையம் அவர்களுக்கு உதவும். இந்தத் திட்டங் களில் பங்கேற்ற மருத்துவ மனைக் கண்காணிப்பாளர் மற்றும் மருத்துவர்களுடைய குழுவுக்கு அவர் நன்றி தெரி வித்தார். ஓர் NGO மற்றும் அரசாங்கம் இணைந்து பணியாற்றுவதற்கான



ஒரு மைல்கல்லை நாம் உருவாக்கியுள்ளோம். அடுத்து, இன்னும் மேம்பட்ட, இன்னும் சிறந்த திட்டங்களை நாம் செய்வோம், என்றும் அவர் குறிப்பிட்டார்.

மருத்துவமனைத் திட்டத்தின் தொடக்கத்தைப் பற்றிப் பேசிய அல்கியர்ஸ் காலித், RC கொச்சின் சௌத்தின் உறுப்பினரான மீரானை எர்ணாகுளம் அரசு மருத்துவமனையிலிருந்து ஒருவர் அணுகியதாகவும், கருவிகளின் மேம்பாட்டுக்கு உதவி கோரியதாகவும், தன்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்தியதாகவும் குறிப்பிட்டார். மொத்தத் தொகை சுமார் ரூ.2 கோடி என அமைந்தது. அவர் தன்னுடைய பங்களிப்பை TRFக்கு நன்கொடையாக வழங்கினால், ஒரு பன்னாட்டு நல்கையின் மூலம் நாம் அதைப் பெருக்கலாம் என்று நாங்கள் அவருக்கு ஆலோசனை தெரிவித்தோம்.''

RID 3201 அறக் கட்டளைத் தலைவர் R ஜெயசங்கர் தொடர்ந்து பேசுகையில், அவரிடம் நாங்கள் இதைத் தெரிவித்த போது, அவர் சம்மதம் தெரிவிப்பதற்கு 15 விநாடிகள் கூட ஆக வில்லை. அவர் AKS உறுப்பினராகி விட்டார். நிறைவாக, திட்டத்தின் செலவு ரூ.3.5 கோடியைக் கடந்தது; இந்தக் குறை பாட்டின் ஒரு பகுதியானது, இதே மாவட்டத்தைச் சேர்ந்த இன்னோர் AKS உறுப்பினரான சிட்டிலிப் பிள்ளி வழங்கியிருந்த பரிசுத் தொகையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. திட்டத்தின் நிறைவுச் செலவு `497,000 என்றார்.

பெரு நிறுவனங் களுடைய உதவியைக் கோரிய அமைச்சர் ஷைலஜாவின் கோரிக்கை யைப் பற்றிப் பேசிய மீரான், வருங்காலத்தில் நலத்துறையில் அரசுடன் இணைந்து பணிபுரிவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். முதன்மை நல மையங்களைக் குடும்ப மையங்களாக்க நீங்கள் கோரிக்கை விடுத்துள்ளீர்கள். இந்தப் பணிக்கு என்னுடைய ஆதரவு உண்டு என்று நான் உறுதியளிக்கிறேன், என்றார்.



மேமோக்ராஃபி வண்டியில் அறங்காவலர் வஹன்வதி, TRF தலைவர் கேரி, கொரின்னா மற்றும் DG மாதவ் சந்திரன்.

### குறைந்த செலவில் தங்குமிடங்கள்

அதே நாளின் பிற்பகுதியில், வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட கேரள மக்களுக்காக, D 3201ல் சில சங்கங்கள் அமைத்துவரும் குறைந்த செலவு வீடுகளில் ஒன்றுக்கு அறங்காவலர் தலைவர் கேரி அடிக்கல் நாட்டினார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரளத்தில் குறைந்த செலவில் தங்குமிடங்களை அமைப்பதற்காக ஆஸ்டர் குழுமத்துடன், அடோஸ் இந்தியாவும் RID 3201 உடன் இணைந்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்காக RC கொச்சின் சென்டரல் கட்டப் போகும் 11 வீடுகளில் இதுவும் ஒன்று. இதற்கு முன் இந்தச் சங்கத்தின் தலைவராக இருந்த பிஜு ஜான் அவர்களுடைய தீவிர ஆர்வத்தால் இது சாத்திய மானது. பாதிக்கப்பட்ட பலன்பெறுவோரை அடையாளம் காண்பதற்காக அவர் 10,000 கி.மீட்டருக்கு மேல் பயணம் செய்தார்; ஒரு நிதி திரட்டல் இயக்கத்தை முன்னின்று நடத்தினார், அதன்மூலம் ரூ.1 கோடிக்குமேல் நிதி திரட்டினார் என்றார் RC கொச்சின் சென்டரல் உறுப்பினர்களில் ஒருவர்.

தன்னை முன்னிறுத்திக் கொள்ள விரும்பாத இந்த முன்னாள் தலைவரை நான் தேடிக் கண்டுபிடித்து அவருடன் பேசினேன். இந்த வீடு, வாயு வெடிப்பொன்றில் தன்னுடைய கணவரை இழந்த, தற்போது இரண்டு குழந்தைகளை வளர்த்துவருகிற ஒரு பெண்ணுக்காகக் கட்டப் பட்டது என்றார். இந்த வீடு சுமார் 500 சதுர அடி பரப்பைக் கொண்டிருக்கும்; ஆறு மாதங்களில் இது தயாராகிவிடும் என்றார்.

கேரி, வாஹன்வதி மற்றும் சந்திரன் ஆகியோர் ரோட்டரியன்களால் கட்டப்பட்ட புத்தம் புதிய வீடொன்றைப் பார்வையிட்டார்கள்; அங்கிருந்த குடும்பத்தினர் அவர்களை நன்றியுடன் வரவேற்றார்கள்.

அவர்கள் கொச்சியில் இன்னும் இரு GG திட்டங்களையும் பார்வையிட்டார்கள்: அவை ஒரு கண் பரிசோதனை வண்டி, மற்றும் மார்பகப் புற்றுநோயைக் கண்டறியும் வண்டி ஆகும்.

### ஒரு CSR கருத்தரங்கம்

அன்று மாலை, ரோட்டரி நடத்திவரும் சமூக சேவைத் திட்டங்களைப் பற்றிய, பெருநிறுவனங்கள் CSR நிதிகளைச் செலவழிப்பதற்காக அவர்களுடன் பெரு நிறுவன ஒப்பந்தங்களைக் கையெழுத்திடும் சாத்தியத்தைப்பற்றிய விழிப்புணர்வை அதிகப்படுத்துவதற்காக ஒரு CSR கருத்தரங்கம் நடைபெற்றது. பெருநிறுவனங்கள் கூட்டுச்சேரக்கூடிய வகையிலான சேவைத் திட்டங்களைப்பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டன.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# உங்கள் பணம் உலகத்தை இன்னும் மேம்பட்ட ஓர் இடமாக மாற்றலாம்: கேரி

V முத்துக்குமரன்

உலகை மாற்றும் மிகப்பெரிய சாத்தியம் ரோட்டரியினருக்கு உண்டு என்றார் அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங். உலகெங்கும் ரோட்டரி செய்துகொண்டிருக்கிற அனைத்துக்கும் பின்புலமளிக்கிற அறக்கட்டளைக்கு அவர் நன்றி தெரிவித்தார். உங்களுடைய முதலீடுதான் அறக்கட்டளையைத் தொடர்ந்து இயங்கச்செய்கிறது. உங்களுடைய டாலர்கள் நூற்றுக்கணக்கான இடங்களில் பணிபுரிகின்றன, மனிதர்களுக்குச் சேவைபுரிகின்றன, உலகை இன்னும் மேம்பட்ட ஓர் இடமாக ஆக்குகின்றன.''

RC மெட்ராஸ், RID 3232 உறுப்பினர்கள் மத்தியில் பேசிய அவர், பிரேசிலில் ஓர் இடத்தில், குழந்தைகள் இறப்பு விகிதம் அந்நாட்டின் சராசரியை விட அதிகமாக இருந்ததை ரோட்டரியினர் கண்டறிந்த நிகழ்வைக் குறிப்பிட்டார். அவர்கள் மருத்துவர்களுடன் பேசி விரைவில் ICU வசதியை வழங்கினார்கள்; தாய்மார்களுக்குப் பிரசவத்துக்கு முந்தைய பயிற்சி வகுப்புகளை வழங்கினார்கள், இதனால் அந்தப் பகுதியில் குழந்தைகள் இறப்பு விகிதம் பாதியாகக் குறைந்தது. லெபனானில், குழந்தைகள் மாசுபட்ட நீரைக் குடித்துக் கொண்டிருந்த 19 பள்ளிகளில் ரோட்டரி நீர்த்தொட்டிகளை, வடிகட்டல் அமைப்பு மற்றும் குழாய்களை அமைத்துள்ளது. இப்போது, ஒவ்வொரு நாளும் 6,700க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குத் தூய நீர் கிடைக்கிறது. இதை எண்ணி அவர்கள் எந்த அளவு மகிழ்வார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள் என்றார் அவர். WinS திட்டம் இந்தியப் பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ளது; இந்த மாதிரியை உலகின் பிற பகுதிகளுக்குக் காட்டலாம் என்று சுட்டிக்காட்டினார் அவர்.

ரோட்டரி சங்கங்கள் தாங்களாகவே முன் வந்து இன்னும் பல பெண் உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும். சென்னை மற்றும் பம்பாய் சங்கங்கள் ஒரு வலுவான இணைப்பைப் பகிர்ந்துகொள்கின்றன; ஏனெனில், இவை இரண்டும் 90வது ஆண்டைக் கொண்டாடுகின்றன என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர். சென்ற ஆண்டில், மெட்ராஸ்ச் சங்கம் பன்னாட்டு நல்கைத் திட்டங்களுக்காக TRFக்கு $260,000 வழங்கியுள்ளது,

*TRF தலைவர் கேரி ஹுவாங், கொரின்னா போலியோ ஜோதியை துவக்கி வைக்கின்றனர்.* **(இடதிலிருந்து)** *NK கோபிநாத், SN ஸ்ரீகாந்த், PRID PT பிரபாகர், அறங்காவலர் குலாம் வஹன்வதி, RC மெட்ராஸ் தலைவர் R விஜய பாரதி, DRFC M அம்பலவாணன், செயலாளர் சேஷ சாய் மற்றும் ராஜேஷ் சோம சுந்தரம் ஆகியோரும் உள்ளனர்.*






**இடதிலிருந்து:** *ஜார்ஜ்* B *செரியன், அறங்காவலர் வஹவன்வதி,* PDG J B *காம்தார், ரஞ்சித் பிரதாப்,* TRF *தலைவர் கேரி,* RC *மேட்ராஸ் தலைவர் விஜய பாரதி மற்றும் செயலாளர் சேஷசாய்.*

$248,000 பெற்றுள்ளது. அதே காலகட்டத்தில் (2018–19), பம்பாய்ச் சங்கம் GG திட்டங்களுக்காக TRFக்கு $870,000 வழங்கியுள்ளது, $1.2 மில்லியன் பெற்றுள்ளது. ரோட்டரியினர் TRFக்குத் வழங்குவதுடன், சமூகத் திட்டங்களுக்கு நல்கைகளை ஒதுக்குவதற்காக, இளம்பிள்ளைவாத நிதி மற்றும் அறக்கட்டளையின் ஆண்டு நிதிக்கும் பங்களிக்கவேண்டும், என்றார் அறங்காவலர் குலாம் வஹன்வதி.

### தொழில்நுட்பப் பயிற்சி மையம்

கும்முடிப்பூண்டியில் பாய்ஸ் டவுனில் ஒரு பன்னாட்டு நல்கையின்மூலம், RID 7570க்கு, மற்றும் அதன் நான்கு சங்கங்களின் ஆதரவுடன் ஒரு தொழில்நுட்பப் பயிற்சி மையம் (TTC) அமைக்கப்படும். நாங்கள் வர்த் டிரஸ்ட் என்ற பன்னாட்டு NGOவுடன் இணைந்து, கிராமப் புறக் குடும்பங்களைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிச் சிறுவர்களுக்குக் கல்வி புகட்டுகிறோம், TTCயானது 16–30 வயதானோருக்கு இயந்திரப்பணியாளர் பணி களில் பயிற்சியளிக்கும்; அவர்கள் பாதுகாப்பான வேலை வாய்ப்புகளைப் பெற இது அவர்களுக்கு உதவும், என்றார் IPP ரஞ்சித் பிரதாப்.

TTC திட்டத்துக்கு $327,260 செலவானது, இதில் TRF பங்களிப்பு $78,690ஆக இருந்தது. PDG J B காம்தார் வழங்கிய $50,000, சங்கத் தலைவர் Dr விஜயா பாரதி வழங்கிய ஒரு குறிப்பிடத்தக்க நன்கொடையுடன் நாங்கள் இத்துடன் திட்டத்தைத் தொடங்கினோம், என்றார் அவர்.

இதுவரை TRFக்கு $500,000க்கு மேல் வழங்கியதற்காக, AKS-நிலை 2ஐ எட்டியதற்காகக் காம்தாரையும், சங்கத்தில் 25 ஆண்டுகளை நிறைவு செய்ததற்காக M ஸ்ரீனிவாசனையும் கேரி பாராட்டினார். இதற்கு முன். RCMன் குறிப்பிடத்தக்க திட்டங்கள் சிலவற்றை Dr விஜயா பட்டிய லிட்டார். எடுத்துக்காட்டாக, மதிய உணவுத் திட்டம் (1971), ரோட்டரி நகர் (1943–45) மற்றும், நீர், சுகாதாரம் மற்றும் 3-H திட்டங்கள், கல்வி மற்றும் பணிசார்ந்த பயிற்சி. சென்னையின் புறநகர்ப்பகுதிகளில் ஒன்றான சோழிங்கநல்லூரில் 105 ஏக்கர்களுக்குப் பரந்திருந்த ஓர் ஏரி வறண்டிருந்தபோது, ரூ.50 லட்சம் செலவில் அது தூர்வாரப்பட்டது; இதன்மூலம் அந்தப் பகுதியிலிருந்த 5,000 குடும்பங்கள் பலன் பெற்றார்கள்; சென்னையின் வெளிப்பகுதியில் தாம்பரத்துக்கு அருகிலுள்ள இன்னொரு வறண்ட ஏரி (60 ஏக்கர்கள்) ரூ.40 லட்சம் செலவில் மீட்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் ஜூலை 2020ல் நிறைவுபெறும்போது, இந்த ஏரி 50,000க்கும் மேற்பட்ட மக்களுக்குப் பலன் தரும்.

கும்முடிப்பூண்டியிலுள்ள 104 ஆதரவற்ற மாணவர்களைக் கொண்ட பாய்ஸ் டவுனில் கடந்த 35 ஆண்டுகளாக மாணவர்களுக்கு ஒரு பாதுகாப்பான வாழ்க்கை, உணவு மற்றும் பணிசார்ந்த பயிற்சி வழங்கப் பட்டுவருகின்றன என்றார். இச்சங்கம் பெண்களுக்கு ஆற்றலளிப்பதற்காக அறிமுகப்படுத்தும் முயற்சியில் ஓட்டுனர் பயிற்சிப்பெற்ற கெண்கள் பிங்க் டாக்ஸி என்னும் வாடகை கார் சேவை வழங்குவர்.

2014–15ல் கேரி RI தலைவராக இருந்தபோது, இளம்பிள்ளைவாதம் இல்லாத இந்தியாவைக் கொண்டாடுவதற்காக இச்சங்கம் நிறுவிய போலியோ சுடரானது 35 நாடுகளின்வழியாகச் சென்று வந்தது. இப்போது அது மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது. இந்தமுறை, இரண்டு சுடர்கள் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீருக்கும், காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரிக்கும் தொடர் ஓட்டமாகக் கொண்டு செல்லப்படும், என்றார் முன்னாள் தலைவர் N K கோபிநாத். சங்கத்துக்குக் கேரி வருகை தந்துள்ள சிறப்பு நிகழ்வைக் குறிக்கும்வகையில், Dr விஜயா பாரதி, IPP ரஞ்சித் பிரதாப் மற்றும் காம்தர் TRFக்குத் தலா $15,000 வழங்கினார்கள்.■

# குடும்பத்துடன் சந்தோஷம்

ஹேன்க் சர்டின்



ஜூன் 6-10 வரை ஹோனொலுலுவில் நடைபெற உள்ள ரோட்டரி சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ள நீங்கள் திட்டமிடும் நிலையில் சிறுவர்களை சேர்க்க மறக்காதீர்கள். வாழ்நாள் முழுக்க மறக்கமுடியாதபடியான நினைவுகளை தருவதற்கும் உலகளவிலான ரோட்டரி குடும்பத்தை உங்கள் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்ய ஹோனொலுலு, ஒரு சரியான இடம்.

உண்பதற்கும் பொழுது போக்குவதற்கும் முக்கியத்துவம் தரும் லாவ், என்ற பெரிய பார்ட்டி, கமேஹமேஹா II மன்னன் காலத்திலிருந்து தொடரும் ஒரு ஹவாய் பாரம்பரியம். பெரும் பாலான லாவ்க்களில், நீங்கள் ஹுலா நாட்டியத்தை பார்க்கலாம். குறியீட்டு அசைவுகளில், கதைகள் சொல்லக்கூடிய இது பாலினீஷியன் கலாச்சாரத்தின் ஒரு அர்த்தமுள்ள பகுதியாகும் இது. ஹவாயில் எந்த பயணிக்கும் லாவ்க்கள் ஒரு எதிர்பார்க்கும் பயண திட்டமாகும் மேலும் ஹோனொலுலு சுற்றி பல நிகழ்வுகள் நடப்பதை நீங்கள் அனுபவிக்கலாம்.

ஹவாயின் இயற்கை அழகு மிகப் பழமையானது; உங்கள் குடும்பம் இதனை அனுபவிக்க கப்பல் பயணம் மேற்கொள்ள வேண்டும். உங்கள் குடும்பத்தினர் தைரியம் கொண்டவர்களாக இருந்தால், நீங்கள் சர்ஃபிங் முயற்சிக்கலாம். ஹோனொலுலுவின் பல இடங்களில் இது குறித்து பயிற்சி நடத்தப்படுகிறது. மென்மையாக பாயும் தண்ணீரை நீங்கள் அனுபவிக்க வேண்டுமானால் கனியோஹே பேயின் ப்ரிஸ்டின் பேட்ச் ரீஃப் அமைப்புகளில் கயாகிங் அல்லது ஸ்னார்கெலிங் முயற்சிக்கலாம்.

நீங்கள் உங்கள் குழந்தைகளும் ஒன்றாக அங்கு மண்வீடு கட்ட வேண்டுமென்றால் ஹோனொலுலு உங்களுக்கு வாய்ப்பு வழங்குகிறது: ஒஹு கடற்கரைகள் பழம்பெருமை வாய்ந்தவை. சன்ஸ்க்ரீன் எடுத்துக்கொள்ள மறக்காதீர்கள்.

**ஹோனோலுலுவில் நடைபெறும் 2020ம் ஆண்டு ரோட்டரி மாநாட்டைத் தவறவிடாதீர். riconvention.org இணைய தளத்தில் டிசம்பர் 15-க்குள் பதிவு செய்யுங்கள்.**

# தைவானில் வெற்றிகரமான நிதி திரட்டல்



ரோட்டரி அறக்கட்டளைக்காக நமது நிதி திரட்டும் நிகழ்வு இப்பொழுதுதான் நடத்தி முடித்தோம்-இது ஒரு பெரிய வெற்றியாக அமைந்தது.

ஆகஸ்ட் மாதம் தைவான் AKS உறுப்பினர் கழகம் இந்நிகழ்வை தைபேயில் நடத்தியது. பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்கம், D3190ன் ரவிசங்கர் அவர்களின் ஊக்கம் தரும் பேச்சு நம்மை மகிழ்வித்தது. அவர் ஏன் அவருடைய நிதி மற்றும் நேரத்தை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்-அவர் ஏன் ஒரு உடலுறுப்பு கொடையாளியாக உள்ளார் என்பதை அவர் பகிர்ந்து கொண்டார். அவருடைய தாராள குணம் பழமையானது மற்றும் உலகத்துக்கு எந்த வகையிலாவது உதவவேண்டும் என்பது அவருடைய விருப்பம். நிகழ்வில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் அவருடைய பேச்சு மனதைத் தொட்டது.

நிதி திரட்டும் திட்டத்தில் மொத்தம் $5.5 மில்லியன் கிடைத்தது என்பதை மகிழ்ச்சியுடனும் மரியாதையுடனும் அறிவிக்கிறோம். சேர் சர்க்கிள் லெவலிலும் ($500,000–999,999) ட்ரஸ்டீஸ் சர்க்கிள் லெவலிலும் ($250,000–499,999) பங்களிக்க நம்மிடம் 11 புதிய AKS உறுப்பினர்கள் உள்ளனர். தைவானின் தாராள கொடையாளிகளுக்கு எமது நன்றி!

இது போன்ற பெரிய நிகழ்வுகளில், நாமனைவரும் கூட்டாக செயல்படும் வகையில் ரோட்டரி தரும் நல்லவைகளை நான் நினைவு கூர்கிறேன். நாம் சந்திக்கும்போது எல்லாவித திட்டங்களை குறித்தும் நாம் கேள்விப்படுகிறோம், அது எப்பொழுதுமே ஊக்கம் தருவதாக அமைகிறது.

இது நமது பிள்ளைகளுக்கு ஒரு அற்புத பாடம் வழங்குகிறது. சகதோழமை மற்றும் பிறருடன் புதியதாக பிணையும் முக்கியத் துவத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். வாழ்க்கையில் உண்மையாக எது முக்கியம் என்பதையும் அவர்களுக்கு எடுத்துக் காட்டுகிறோம்: இணைப்புகளை ஏற்படுத்துவது, தேவைப்படுவோரின் வாழ்வை மேம்படுத்துவது மற்றும் நம்மால் முடிந்ததை பிறருக்காக செய்வது. ஒரு குடும்பம் பெறக்கூடிய சிறந்த கல்வி ரோட்டரியாகும்.

ரோட்டரியின் குடும்பத்தை விருத்தி செய்வதற்கு ரோட்டரி தலைவர் மார்க் மெலோனி அவர்கள் முன்னுரிமை வழங்கியதற்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ரோட்டரி நிகழ்ச்சிகளுக்கு நமது குடும்பத்தினரை அழைத்து வரவேண்டும் மேலும் இந்த அற்புத அமைப்பின் ஒரு அங்கமாக அவர்கள் இருக்கும்படி நாம் ஊக்குவிக்க வேண்டும். ரோட்டரி அறக்கட்டளை மூலம், இத்தகைய குடும்ப இணைப்புகளை நமது பாரம்பரியத்தின் அங்கமாக மாற்றலாம்.



**கேரி ஹுவாங்**

TRF அறங்காவலர் தலைவர்

# போலியோ நிதி பங்களிப்புக்கு சிறப்பு அங்கீகாரம்

ரோட்டரி செய்திக்குழு

பூமியிலிருந்து போலியோ தொற்றை 99 சதவீதம் ஒழித்துவிட்ட நிலையில், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானிலுள்ள மீதம் 1 சதவீதத்தை ஒழிப்பது மிக்க சிரமமாகத் தான் உள்ளது. கண் காணிப்பு, அறிவுரை மற்றும் முன் தடுப்பு குறித்து ரோட்டரியின் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். இவையனைத்தும் கூடுதல் செலவு உடையது.

RI மாவட்டங்களுக்கு பயன் படுத்தப்படாத DDFன் 20 சதவீதத்தை போலியோ நிதிக்கு வழங்க வலியுறுத்தி வருகிறது. இதற்கு TRF, 1:1 என்ற வகையில் போலியோ நிதியிற்கு வழங்கும். இந்தியாவில் பயன்படுத்தப்படாத DDF அந்த அளவு இருப்பதில்லை. ஆகவே போலியோ நிதி பங்களிப்பை அதிகப்படுத்த என்ட் போலியோ நவ் கோஆர்டினேட்டர் (End Polio Now Coordinator - EPNC), E K சகாதேவன் ஒரு புதிய திட்டத்தை வடிவமைத்துள்ளார். $1,500 அல்லது ரூ.1 லட்சம் போலியோ நிதிக்கு பங்களிக்கும் ரோட்டரியன்களுக்கு RIDs, TRF அறங்காவலர், EPNC மற்றும் DG கையெழுத்திட்ட சான்றிதழும் என்ட் போலியோ ஃபெல்லோ (EPF) பின் (Pin)னும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள். EPNC PDG கேஷவ் குன்வார் மற்றும் TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி இந்த ஆலோசனையை வரவேற்றுள்ளனர். இதற்கு RI மற்றும் TRF அனுமதி அளித்துள்ளன. அண்மையில், டெல்லியில் நடைபெற்ற தேசிய போலியோ கூட்டத்தில், RIDக்கள் பரத் பான்ட்யா மற்றும் கமல் சங்வி, RIPN சேகர் மேத்தா, PRIP ராஜேந்திர சாபூ மற்றும் INPPC சேர் தீபக் கபூர் ஆகியோர் முன்னிலையில் இது அறிமுகப்படுத்தப்பட்டது.

பங்களிப்புக்கு பில் மற்றும் மெலின்டா கேட்ஸ் அறக்கட்டளை 1:2 என்ற அளவுக்கு ஈடாக நிதியளிக்கிறது. கொடையாளிகள் ஆன்லைனில் www.endpolio.org அல்லது www.rotaryfoundationindia.org அல்லது www.rotary.org ஆகிய தளங்களில் நிதியளிக்கலாம் அல்லது Rotary Foundation (India) என்ற பெயரில் செக் மூலமாகவோ அல்லது DD மூலமாகவோ அளிக்கலாம். அவர்களின் நிதியளிப்புக்கு ரசீது பெற்றவுடன், கொடையாளிகள் ரூ.1,000 தொகையை Rotary EPF Account (அக்கவுன்ட் எண் - 919020065960568, ஆக்சிஸ் பேங்க், காந்திஜி ரோடு, ஈரோடு, IFSC கோட் – UTIB0002146) க்கு வைப்பு செய்து கொரியர் மூலம் மாவட்ட ஸ்பெஷல் ரெகக்னிஷன் பரிசை பெற்றுக் கொள்ளவும்.

மாவட்ட கவர்னர்கள், குறைந்தது 100 என்ட் போலியோ ஃபெல்லோக்களை ஊக்குவித்து PHF/MPHFக்கு பங்களிக்க விரும்பும் ரோட்டரியன்களுக்கும் என்ட் போலியோ ஃபெல்லோ திட்டத்துக்கு அளிக்க விரும்பும் பெரிய அளவு கொடையாளிகளுக்கும் ஊக்கம் தரவேண்டும். பங்களிப்பு ஒரு சிங்கிள் கட்டணமாகவோ அல்லது இந்த ரோட்டரி வருடத்துக்குள்ளான பல எண்ணிக்கை கட்டணங்களாகவோ இருக்கலாம். கொடையாளிகளின் முழு கட்டணம் செலுத்துவது முடிந்ததும் அவர்களுக்கான அங்கிகாரம் கிடைக்கும்.

விவரங்களுக்கு கேஷவ் குன்வார் : 977-98510 20711/dgkeshav1516@gmail.com மற்றும் Dr.சகா: 99944 77725/pdgdrsaga@gmail.com.■

*DGs அனிஷ் ஷா, சிவநாராயணராவ், A K நடேசன், PDG சகாதேவன், RID பரத் பாண்ட்யா, RIPN சேகர் மேத்தா, PRIP ராஜேந்திர சாபூ, PDG கேஷவ் குன்வர், INPPC தலைவர் தீபக் கபூர், DGs சிரீஷ் கேசவன், ராஜேந்திர பாம்ரே மற்றும் சுஹாஸ் வைத்தியா.*



# சங்கங்கள் மத்தியில் வரவேற்பைப் பெறும் நேர்வித நலன் திட்டம்

V முத்துக்குமரன்

நலப்பராமரிப்புப் பிரிவில் ஒரு புதிய பாதையை உருவாக்கும் முயற்சியாக, ரோட்டரி சங்கங்கள் செப்டம்பர் 29 உலக இதய நாளைக் குறிப்பதற்காக ஏற்பாடு செய்துள்ள நல மற்றும் விழிப்புணர்வு முகாம்களில்நேர்வித நலன் திட்டம் (PPH): தொற்றா நோய்கள் (NCD) நிறுத்துவோம் என்ற திட்டத்தைத் தங்களுடைய முதன்மை அம்சமாகக் கொண்டுள்ளன.
இந்த ஜூலையில், PPH பரப்புரை அறிமுகப்படுத்தப்பட்டபோது, இந்த நலப்பராமரிப்பு முயற்சி தங்கள் சங்கங்களில் பெரிய அளவில் கொண்டு செல்லுமாறு மாவட்ட ஆளுநர்கள் கோரப்பட்டார்கள். முன்பு நாம் நாள்பட்ட நோய்களுக்கான முகாம்களை நடத்திவந்தோம். ஆனால் இப்போது, PPH அறிமுகமானபிறகு, உலக இதய நாளில் தொடங்கி நாம் அதை ஓர் அமைப்பு ரீதியில் செய்கிறோம். அடுத்த ஆண்டிலிருந்து, சங்கங்கள் NCDயை நிறுத்தும் முகாம்கள் மற்றும் விழிப்புணர்வுப் பேச்சுகளை நடத்துவதற்கான ஒரு கட்டமைப்புள்ள செயல்முறையைக் கொண்டிருக்கும், என்றார் PPH தேசியக் குழு உறுப்பினரான PDG Dr அசோக் சிங்.

பல பிராந்தியங்களில் நடைபெற்ற NCDயை நிறுத்துவோம் பரப்புரைகளின் சில துளிகள், இதோ. DGக்களும் சங்கத் தலைவர்களும் முன்னணியிலிருந்து இவற்றை நடத்தி, இந்தியாமுழுவதும் நடைபெறும் இந்த முயற்சியில் தங்கள் முத்திரையைப் பதிக்கும் காட்சிகளைப் பாருங்கள். சம்பல்பூர், RID 3261ல் உள்ள ஆறு சங்கங்களும், மக்களுடைய இரத்த அழுத்தம் (உயர் அழுத்தம்), ரத்தச் சர்க்கரை அளவு (நீரிழிவு), எடை மற்றும் உயரக் குறியீடு (உடல் பருமன்) ஆகியவற்றைப் பரிசோதிப்பதற்கான பயிற்சியை வழங்கும் பள்ளிகளைத் தனித்தனியே தொடர்புகொண்டன. நான்கு சங்கங்கள், ரோட்டரி மருத்துவர்கள், பரிசோதிக்கும் ஆசிரியர்கள் மற்றும் உயர் அழுத்தம் மற்றும் நீரிழிவுக்கான பிற ஊழியர்களைக் கொண்ட கல்வி நிறுவனங்களுக்குச் சென்றன, என்றார்

**இடது புறத்திலிருந்து (நிற்பவர்கள்):** PDGs *பரத், கிரிஷ் கூனே, சரப்ஜீத் சிங், மோகன் பிரசாத், ஜெயப்பிரகாஷ் வியாஸ், அஜய் நாயர், சயந்தன் குப்தா, ஜமீன் ஹுசைன் மற்றும் அஷோக் சிங்.* **(அமர்ந்திருப்போர்):** K *விஜயகுமார், ரவி அப்பாஜி,* RIPN *சேகர் மேத்தா,* RID *பரத் பாண்ட்யா,* PDG E K *சகாதேவன் மற்றும் இந்துமதி கோபிநாதன்.*



சிங். சம்பல்பூர்முழுவதும், ஒரே நாளில் 300 மக்கள் பரிசோதிக்கப்பட்டனர்.

மகாராஷ்டிராவில், (RID 3030), 50 சதவிகிதத்துக்கும் மேற்பட்ட சங்கங்கள் இந்தச் செயலை மேற்கொண்டன, RIDக்கள் 3261, 3262ல் 30–40 சதவிகிதச் சங்கங்கள் PPH திட்டங்களை செயல் படுத்தின.

பாட்னாவில் ஏற்பட்ட பெருவெள்ளம், NCD முகாம்களைப் பெரிய அளவில் ஏற்பாடு செய்ய இயலாதபடி தடுத்தது. ஆனால், பின்னர் ஆறு சங்கங்கள் நல முகாம்களுக்கு ஏற்பாடு செய்தன என்றார் DG கோபால் கேம்கா, RID 3250. பாட்னாவில் உள்ள ரோட்டரியினர் வெள்ள நிவாரண உதவிப்பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள், ஆனால், ஜார்கண்டில், 40ல் 20 சங்கங்கள் NCD கண்டறிதல் முகாம்களை நடத்தின; இவற்றுக்குச் சமூகங்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது, என்றார் அவர்.

### தெரு நாடகங்கள், விரிவுரைகள்

ஜாம்ஷெட்பூரிலிருந்த ஆறு சங்கங்களும், அந்த இரும்பு நகரத்தின் நான்கு வெவ்வேறு பகுதிகளில் நான்கு முகாம்களுக்கு ஏற்பாடு செய்திருந்தன. நாங்கள் தெரு நாடகங்களின்மூலம் நோயாளிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினோம். ரோட்டராக்டர்களும் இன்ட்ராக்டர்களும் விழிப்புணர்வு நாடகங்களில் நடித்தார்கள்; 300 மக்கள் பரிசோதிக்கப்பட்டார்கள், என்றார் RC ஜாம்ஷெட்பூர், RID 3250, தலைவர் சங்கீதா ஜா. “உங்கள் இதயத்தை நலமாக வைத்துக்கொள்ளுங்கள்” என்று எழுதப்பட்ட ஒரு பெரிய அறிவிப்புப்பலகை நகரின் முக்கியப் பகுதியொன்றில் வைக்கப்பட்டது. இந்த அறிவிப்புப்பலகை ஒரு ஸ்பூன் உப்பு, எண்ணெய், சர்க்கரை குறைவாக எடுத்துக்கொள்ளுங்கள், என்று மக்களுக்கு அறிவுறுத்தியது. Dr விஜயா பரத் மற்றும் டாக்டர் மந்தர் ஷா ஆகியோர் முகாம்களிலும் பின்னர் வானொலியிலும் NCDபற்றிய விழிப்புணர்வுச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள்.

பாட்னாவில் உள்ள ரோட்டரியினர்க்காக, RID 3250 விரைவில் மாவட்டம் முழுவதற்குமான ஓர் இதயப் பரிசோதனை முகாமுக்கு ஏற்பாடு செய்யும் என்றார் DG கெம்கா.

### பல பிராந்தியக் கருத்தரங்கம்

RC ஸ்ரீவில்லிபுத்தூர் கிரீண் சிட்டி, RID 3212 ஏற்பாடு செய்திருந்த ஒரு பல கருத்தரங்கை PDG K விஜயகுமார் தொடங்கிவைத்தார். மற்ற சங்கங்களும் விரைவில் இதை நடத்தும். ராஜபாளையம் PACR ரோட்டரி இரத்த வங்கியிலிருந்து வந்திருந்த ஐந்து- உறுப்பினர் குழுவொன்று, இந்தக் கருத்தரங்கத்தில் பங்கேற்றவர்களுக்கு இரத்தச் சர்க்கரை அளவு, உடல் எடை மற்றும் உயரப் பரிசோதனைகளை நடத்தியது, என்றார் சங்கத் தலைவர் S சண்முகநாதன்.

கன்னியாக்குமரியில், 20 சங்கங்கள் ஒரு மிகப்பெரிய இதய விழிப்புணர்வுப் பேரணியை நடத்தின. ரோட்டராக்டர்கள், இன்டராக்டர்கள் மற்றும் மாணவத் தன்னார்வலர்கள் இந்தப் பேரணியை ரோட்டரியின் வலிமையைக் காட்டும் ஒரு நிகழ்ச்சியாக ஆக்கினார்கள் என்றார் RC நாகர்கோயில் ப்ளாஸம்ஸ், RID 3212 தலைவர் ஸ்ரீதேவி ப்ரின்ஸ். 350க்கும் மேற்பட்ட மாணவர்கள் பேரணியில் பங்கேற்றார்கள்.

மும்பை ரோட்டரியினர் (RIDகள் 3141, 3142) சுமார் 4,000 பேரைப் பரிசோதித்த 54 முகாம்களுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்; இவர்களில் சுமார் 900 பேருக்கு, சர்க்கரை அளவு மற்றும் அதிகம் இருப்பது கண்டறியப்பட்டது. RID 3020ல், சங்கங்கள் 10,380 பேரைப் பரிசோதித்தன, இவர்களில் 4,070 பேருக்கு உயர் அழுத்தம் இருப்பதும், 2,340 பேருக்கு உயர் சர்க்ரை அளவு இருப்பதும், 3,010 பேருக்கு உடல்பருமன் இருப்பதும் கண்டறியப்பட்டது.

மாவட்டங்களில் நடைபெறும் இன்னும் பெரிய PPH முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, “ஒரு ஸ்பூன் குறைவாக” என்ற பரப்புரையில் இணைவதாக RID 3070, 3080 மற்றும் 3090ஐச் சேர்ந்த ரோட்டரியினர் உறுதியெடுத்துக்கொண்டார்கள்.

### நாம் பரப்புரையை நீடித்திருக்கச் செய்வோம்

இந்திய அளவிலான முதல் திட்டத்தின் வெற்றியைக் கண்டு மகிழ்ந்த RID பரத் பான்ட்யா, தேசியக் குழு உறுப்பினர்கள் தங்களுடைய தலைமைப் பண்புகளையும் அறிவாற்றலையும் பயன்படுத்தித் தங்கள் மாவட்டங்களில் உள்ள பொதுமக்களைச் சென்றடைந் திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு அவர்கள் காட்டிய ஊக்கமும் பேரார்வமும் நன்கு தெரிந்தன என்றார்.

அதே சமயம், மக்களுடைய உடல் நலத்துக்குப் பாதிப்பான வாழ்க்கை முறைகளை மாற்றவும், “ஒரு ஸ்பூன் குறைவாக,'' என்ற மந்திரத்தை அவர்கள் பின்பற்றச்செய்வதற்கும் தொடர்ந்த முயற்சிகள் தேவை என்றும் அவர் குறிப்பிட்டார். அடுத்த செயல்பாடுகள் அனைத்தும் நவம்பர் 14ல் உலக நீரிழிவு நாளுக்காகத் திட்டமிடப்பட்டுள்ளன.

(Dr விஜயா பரத், RID 3250, வழங்கிய குறிப்புகளின் அடிப்படையில் எழுதப்பட்டது)



# ஆனெட்களின் ப்ளாக்கிங் ஓட்டம்

ஜெய்ஸ்ரீ

சென்னை அருகிலுள்ள மாமல்லபுரக் கடற்கரையில் PM மோடியின் ‘ப்ளாக்கிங்’ சமூக ஊடகங்களில் புகழ்பெற்றபோது, RID 3232 ரோட்டரியினரின் குழந்தைகள் (Annetes) சென்னையில் தூய்மைக்கான, ப்ளாஸ்டிக்குக்கு எதிரான ஒரு நிகழ்வுக்காக ப்ளாக்கிங் ஓட்டமொன்றில் பங்கேற்றார்கள். ப்ளாக்கிங் என்பது, ஸ்வீடனைச் சேர்ந்த, 2016ல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு கருத்தாக்கமாகும். பிளாஸ்டிக் மாசுபற்றிய அதிகரித்து வரும் கவலையைத் தொடர்ந்து ப்ளாக்கிங் அறிமுகமானது, அதன்பிறகு, உலகெங்கும் பரவியுள்ளது. அடிப்படையில், ப்ளாக்கிங் என்பது ஓடுதல், ஓடும் பாதையில் கிடக்கும் பிளாஸ்டிக் குப்பைகளைப் பொறுக்குதல் ஆகியவற்றின் தொகுப்பாகும்.

மாவட்ட ஆனெட்கள் கூட்டமைப்பு (DAC), RC சென்னை சென்ட்ரல், பூமி என்னும் NGO ஆகியவை இணைந்து, அக்டோபர் 2 அன்று மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள்







மாரத்தானில் கலந்துக் கொள்ளும் ரொட்டேரியனரின் குழந்தைகள்.

விழாவின் நினைவாக இந்நிகழ்வுக்கு ஏற்பாடு செய்திருந்தன. சுமார் 80 பங்கேற்பாளர்கள் (இவர்களை ப்ளாக்கர்கள் என்பார்கள்) தொப்பி, முகமூடி, கையுறைகள், ஏப்ரன் மற்றும் குப்பைப் பை கொண்ட பொதிகளைப் பெற்றார்கள். அவர்கள் கடற்கரையோரமாக உள்ள 3-கிமீ சாலையில் ஓடவேண்டும், வழியில் கிடக்கும் குப்பைகளைத் திரட்ட வேண்டும். DAC தலைவர் Rtn ஆஷா மரீனா ஆதரவுடன் திட்ட ஒருங்கிணைப்பாளர் கௌரி ரவிக்குமார் தொடங்கிய இந்த நிகழ்வில் ஆனெட்டெகள், ரோட்டரியன்கள் மற்றும் அவர்களின் மனைவியர் பங்கேற்றார்கள்.

இந்த நிகழ்வை RCs சென்னை சவுத், சென்னை உத்சவ், ரெனாய்சென்ஸ், பேவாட்ச், ஆதித்யா மற்றும் ஆதம்பாக்கம் இணைந்து வழங்கின. நிகழ்ச்சியின் நிறைவில், பங்கேற்பாளர்களுக்குத் தின்பண்டங்களும் சான்றிதழ்களும் பரிசுப் பைகளும் வழங்கப்பட்டன.

நகரைத் தூய்மையாகவும் ப்ளாஸ்டிக் இல்லாமலும் வைத்துக் கொள்ளவேண்டும் என்ற நுண்ணுணர்வை இளைஞர்கள், பொதுமக்கள் மத்தியில் உருவாக்கு வதற்கான விழிப்புணர்வு ஏற்பாடு இது, என்கிறார் ஆஷா. கூட்டமைப்பானது ஒவ்வொரு மாதமும் ஆனெட்களுக்கு இரண்டு பயிலரங்குகளை வடிவமைக்கிறது. தீபாவளி நேரத்தில், பட்டாசு வெடிப்பதால் மிருகங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைப்பற்றி மக்களுக்கு நுண்ணுணர்வூட்டுவதற்கான ஒரு நிகழ்வை நாங்கள் ஏற்பாடு செய்யவுள்ளோம். அதுதான் எங்களுடைய அடுத்த திட்டம்.'' கூட்டமைப்பின் திட்டங்களுடன், ரோட்டரி சங்கங்களால் ஆதரிக்கப் படும் ஆனெட் சங்கங்கள் தனிப்பட்ட திட்டங்களிலும் பணியாற்றுகின்றன, நாங்கள் அவற்றுக்கு ஆலோச னைகளை வழங்கி உதவுகிறோம் என்கிறார். DACல் 40 ஆனெட் உறுப்பினர்கள் உள்ளார்கள்; இந்த ஆண்டு இதை ப்ரகீதா ஜோசஃப் வழிநடத்துகிறார்.

எங்களுடைய முயற்சி, அவர்கள் இளைஞர்களாக இருக்கும்போதே அவர்களைப் பிடித்துவிடுவதுதான். ஆனெட்கள் எப்போதும் எந்தத் திட்டத்தையும் செயல்படுத்த ஆர்வத்துடன் உள்ளார்கள். எடுத்துக்காட்டாக, சென்ற மாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேக்கிங் பயிலரங்கு மிகப்பெரிய வெற்றியடைந்தது, என்கிறார் ஆஷா. இது போன்ற நிகழ்ச்சிகள் இளைஞர்கள் மத்தியில் ரோட்டரி இணைப்பை உயிர்ப்புடன் வைக்கின்றன, ரோட்டரியன் பெற்றோர் ரோட்டரிச் செயல் பாட்டில் ஈடுபடும்போது, இளைஞர்கள் தனிமையாக உணர்வதில்லை என்றும் சொல்கிறார் இவர்.■

# பெண்கள் சுகாதாரம் பற்றி ஆண்களுக்கும் விழிப்புணர்வு

கிரண் ஜெஹ்ரா

உங்களுக்குத் தெரியுமா உங்கள் மனைவி எந்த சானிட்டரி நாப்கின் பயன்படுத்து கிறார் என்றும் அதன் உள்ளடக்கப் பொருள்கள் எவை என்றும், என தமான் ஆங்கர் பானசோனிக் இன்டியா லிமிடெட் அமைப்பை சார்ந்த 250 பேருக்கு உரையாற்றுகையில், RI D 3060, வாபி ரிவர்சைட் ரோட்டரி கிளப்பின் உறுப்பினர் டாக்டர். அமிஷா மேத்தா கேட்டார். ஆண்களுக்கும் பெண்களுக்கும் மாதவிலக்கு சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த இவர் புரொஜக்ட் ரெட் ரெவொல்யூஷன் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். ஆண்களுடன் பேசுவது முக்கியம் மேலும் அது சிறுவயதிலேயே தொடங்கப்பட வேண்டும் என்கிறார். நன்கு தகவலறிந்த ஒருவன், கவனிப்பு தரும் மகனாக, சகோதரனாக மற்றும் கணவனாக திகழ்வான்.


ஒரு சராசரி பெண் அவளுடைய வாழ்நாளின் 10 ஆண்டுகளை மாதவிலக்கு காலமாக கழிக்கிறாள் என அவர் கூறுகிறார். மாதவிலக்கை நிர்வகிக்க தேவையான அறிவு, வசதிகளை கௌரவமாக பெண்கள் பெறுவதற்கும் ஒரு ஆரோக்கிய சமூக சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கும் முன்னுரிமை நாம் தரவேண்டும். அவருடைய மாவட்டத்தின் 100 உறுப்பினர்களுடன் இணைந்து இப்புரட்சியை தொடங்குவதன் மூலம் அது பற்றி பேசும்படி ஆண்கள் மற்றும் பெண்களின் மனங்களை திறக்கச் செய்து, அது தொடர்பாக ஒரு சுற்றுச் சூழலுக்குகந்த தீர்வை கண்டறியும் நிலையில், ஒரு ஆரோக்கியமான மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை தர முடியும் என்பது அவருடைய நம்பிக்கை.



ஒரு பள்ளியில், இளம் வயது பெண்கள் சிலருடன் பேசுகையில் அவருக்கு மாதவிலக்கு தொடர்பாக கிடைத்த பதில்கள் பெரும் ஆச்சரியம் தந்தன: ‘அம்மா சொன்னார், இது பற்றித் தெரிந்து கொள்ளும் வயது இதுவல்ல என்று. வளர வளர நான் தெரிந்து கொள்வேன். ஆசிரியர் கூட இது குறித்து பேச விருப்பப்படவில்லை. பெரும்பாலான நாடுகளில் பல கலாச்சார கட்டுப்பாடுகள் இருப்பதனால் இவைகள் மாதவிலக்கு சுகாதார நிர்வாகத்துக்கு முட்டுக்கட்டைகளாக மாறி விடுகின்றன. பெண்களிடம் இது குறித்து பேசுவதற்கு எது சரியான காலம் என்றால் பதில் இப்பொழுதே!

குறைவான மற்றும் மத்திய அளவு வருமானம் பெறும் குடும்பங்களில் மாதவிலக்கு நிகழ்வுகளை நிர்வகிக்க வழிகாட்டிகள், வசதிகள், பெண்களுக்கும் சிறுமிகளுக்குமான பொருள்கள் கிடையாது. ஆகவே அத்தகைய பெண்களுடன் பேசி மாதவிலக்கின் பின்னணியில் உள்ள விஞ்ஞானம் பற்றி அறியச் செய்து அவர்களின் பேட்களை அவர்களே அமைத்துக் கொள்ளச் செய்வது என்று முடிவு செய்தோம். எளிதில் கைக்கொள்ளக் கூடிய சுகாதார சானிட்டரி தயாரிப்புகள் பெறுவது சுலபமில்லை என்பதால் இந்த சுழற்சியை நிர்வகிப்பது பல பெண்களுக்கு/ பெண்மணிகளுக்கு சங்கடங்கள் நிறைந்ததாக உள்ளன.

RID 3060யின் முதல் பெண்மணியான ஸ்வாதி ஷா



Dr அமீஷா மேத்தா ஆங்கர் பானசோனிக் ஊழியர்களுடன்.

அவர்களின் உதவியுடன், அகமதாபாத்தின் மறு உபயோக சானிட்டர் பேட் தயாரிப்பாளரான யூனிபேட்ஸ் இன்டியா நிறுவனத்திலிருந்து, மீண்டும் உபயோகிக்கக் கூடிய பருத்தி பேட் (pads)கள் பெரிய எண்ணிக்கையில் பெறப்பட்டது. பள்ளிப் பெண்களுக்கும் பணியில் உள்ள பெண்களுக்கும் சுமார் 1,000 பாக்கெட்டுகள் வினியோகம் செய்யப்பட்டன. மறு உபயோக சானிட்டரி பேட்கள் கூடுதல் பிரபலமாகி வருகிறதாக ஸ்வாதி கூறுகிறார். இவைகள் ஆரோக்கிய மிக்கதாகவும், வாங்கக்கூடியதாகவும் மற்றும் நிலையாக பயன்படுத்தும் வகையிலும் உள்ளன.

சானிட்டரி பேட்கள் ‘மருத்துவப் பொருள்களாக பட்டியலிடப் பட்டுள்ளதால், தரத்தை பராமரிப்பது இந்தியாவில் கடினம் என்கிறார் அமிஷா. விஷப் பொருள் மற்றும் செயற்கை வண்ணங்கள், பாலியெஸ்டர், ஒட்டும் பொருள்கள், பாலிஎத்திலீன் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன; இவைகள், ஹார்மோன் தடை, புற்றுநோய், பிறப்புக் குறைபாடுகள், உலர்தன்மை, மலட்டுத் தன்மை போன்றவையை ஏற்படுத்தக் கூடும். பாரம்பரிய பயன்படுத்திக் களையக்கூடிய நாப்கின்களிலிருந்து மறுஉபயோக துணி சானிட்டரி பேட்களுக்கு மாறுவது என்பது சிரமம் தான், ஆனால் உங்கள் உடல் மற்றும் பூமியின் நலனை கருத்தில் கொண்டால் இதுவே அறிவுமிக்க முடிவாக இருக்கும்.



அமிஷாவின் நான்கு வருட ஆய்வு, அவரின் ரெட் ரெவொல்யூஷனை (சிவப்பு புரட்சி) வடிவமைக்க உதவியது. மாதவிலக்கு குறித்து ஆண்கள், பெண்களிடம் பேசுவதிலிருந்து கிடைக்கும் பொருள் கொண்டு குறைவான விலையில் சானிட்டரி நாப்கின்களை தயாரித்துக் கொள்வது குறித்து பள்ளிப் பெண்களிடம் பேசுவது வரை, மறு உபயோக பேட்களை இலவசமாக வினியோகிப்பது வரை, RID 3060 இன் ரோட்டரியினர் இதுவரை 195 பயிற்சி வகுப்புகள் நடத்தி 65,060 பேருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளனர்.■

# RI தெற்காசிய அலுவலக அறிவிப்புகள்

இன்டராக்ட் சங்கங்கள் ஜூன் 30க்குள் ஓர் ஆலோசகரைக் கண்டிப்பாக நியமிக்கவேண்டும். இந்த ஆலோசகர், ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராக இருக்கலாம், முந்தைய இரண்டு ஆண்டுகளில் இன்டராக்ட் ஆலோசகர் ஒருவரைப் பதிவுசெய்யாத இன்டராக்ட் சங்கங்கள் டிசம்பர் 2019க்குள் ஓர் இன்டராக்ட் சங்க ஆலோசகரைப் பதிவுசெய்யவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், ஜனவரி 1, 2020முதல் அந்தச் சங்கம் நீக்கப்படும்.

**இன்டராக்ட் வீடியோ விருதுகள்:** இன்டராக்ட் சங்கங்கள் இன்டராக்ட் வீடியோ விருதுகளில் பங்கேற்கலாம். வெல்லும் சங்கத்துக்கு, அதன் அடுத்த திட்டத்துக்கு `1,000 பரிசு வழங்கப்படும்! மேலும் தகவல்களுக்கு: https://xd.wayin.com/display/container/dc/310c6437-c69d-4d1d-a73c-746a944ab1ec/details

**என் ரோட்டரியில் நல்கை அறிக்கைகளின் பயன்பாடு:** என் ரோட்டரியில், மாவட்டத் தலைவர்கள் நல்கைச் செயல்பாடுகளைக் கையாள்வதற்கான அறிக்கைகள் உள்ளன. கீழே உள்ள அட்டவணை, பலவிதமான தகவல்களைப் பெறப் பயன்படுத்தவேண்டிய அறிக்கைகளைக் காட்டுகிறது. நீங்கள் உங்களுடைய பன்னாட்டு நல்கை விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமுன்னர், நல்கை ஆதரவாளர்கள் விண்ணப்பத்தில் சரியாகப் பட்டியலிடப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துங்கள். நல்கை யானது சங்கத்தால் ஆதரிக்கப்படுவதா, அல்லது மாவட்டத் தால் ஆதரிக்கப்படுவதா என்பதைக் கவனிக்க வேண்டியது முக்கியம். கூடுதல் தகவல்களை பன்னாட்டு நல்கைக்கான ஒரு வழிகாட்டி என்ற கையேட்டில் இங்கு காணலாம்: https://my.rotary.org/en/take-action/apply-grants/global-grants.

| அறிக்கை | இதை எதற்குப் பயன்படுத்தலாம்? |
|---|---|
| **நல்கைத் தகவல்** | ஒரு நல்கையைப்பற்றிய விரிவான தகவல்களைப் பெறலாம் |
| **நல்கையின் இடம்** | தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு நல்கைகளையும் காட்டுகிறது. |
| **நல்கைப் பங்கேற்பு** | பன்னாட்டு நல்கைகள் மற்றும் மாவட்ட நல்கைகளின் சங்கம், மாவட்டம் மற்றும் பிராந்தியப் பங்கேற்பை அளவிடலாம் |
| **நல்கைச் செயல்திறன்** | ஒரு குறிப்பிட்ட சங்கம், மாவட்டம் அல்லது பிராந்தியத்தின் பன்னாட்டு நல்கைகள் மற்றும் மாவட்ட நல்கைகளை அனைத்து நிலைகளிலும் காணலாம். |
| **ஆதரவாளரின்படி நல்கைகள்** | ஒரு சங்கம் அல்லது மாவட்டத்தின் நல்கைகளையும் அவற்றின் இப்போதைய நிலையையும் காணலாம் (மூடப்பட்ட மற்றும் ரத்துசெய்யப்பட்ட நல்கைகள் இதில் இடம்பெறாது) |
| **கட்டமைப்பு உறுப்பினர் தகவல்** | கட்டமைப்பு உறுப்பினர்களைக் கண்டறியலாம் |

## மன நலம் பாதிக்கப்பட்டோருக்கு ஓர் தொழில்முறை பயிற்சி கூடம்

ரோட்டரி செய்திக்குழு



RID 3011ஐ சேர்ந்த RC ரெவாரி மெயின், மற்றும் நவப்ரேர்னா சொஸைட்டி, இணைந்து மனநலம் பாதிக்கப்பட்டக் குழந்தைகளுக்கு வாழ் வளிக்க ஓர் சிறப்பு தொழிற்பயிற்சி கூடம் அமைத்துள்ளன. இங்கு இக்குழந்தைகளுக்கு களிமண் விளக்குகள், இனிப்பு மற்றும் பரிசுப் பொருட்கள், மெழுகுவர்த்திகள், பாய் வகைகள் மற்றும் பரிசு உறைகள் செய்ய கற்றுக் கொடுக்கப்படுகிறது.

இத்திட்டத்தைப் பற்றி விளக்கிய திட்டத்தலைவர் ஹரீஷ் மாலிக், "இவ்வாறு பல வேலைகளில் ஈடுபடும் பொழுது குழந்தைகளின் மனநிலை ஒருமுகப்படுகிறது. மேலும் அவர்களுக்கு தன்னம்பிக்கை பிறக்கிறது'', என்றார். தற்சமயம் இந்த கூடத்தில் 20 குழந்தைகள் பயிற்சி பெறுகின்றனர்.■

SERVICE ABOVE SELF

2020 B2B MEET

ROTARY CONNECTS THE WORLD

**First of its Kind...First time in Pune....Soon in other Metros**

# Indias Biggest Rotary Business to Business Meet

**This meet is for facilitating selling to or purchasing from a Rotarian. Assured integrity in business deals within Rotarian Brotherhood as per the 4 Way Test**

**Inaugural & Closing Session will have a nationally famous speaker on Business.**




*3794 clubs of Rotary in 38 districts*
*More than 150,000 members*
*more than 90%*
*professionals or Industrialists*

*Selling through Exhibitions / Advertising / Sundry marketing efforts incurs significant costs*

*Only Companies owned by Rotarians participating*
*For participating in this meet*
*Send only one sales officer + one purchase officer*
*Meet : 10 am to 5 pm. Networking : 7 to 10 pm*

**Ideal opportunity to launch / trade / learn about products within the Rotarian Businessmen Community thereby saving huge costs incurred on advertising / marketing / aquiring know-how**

*Cost includes stay for 3 nights (twin sharing) at a 5 star venue + 3 breakfasts + 2 lunches + 2 dinners for the 2 people representing your organisation*
**Travel Costs to be borne by participants*

**Meet & interact with 1000+ Rotarians from all over India**

Organised by

Rotary
Club of Pune Far East
Dist. 3131 Club No. 30952

In Association with :

THE TIMES OF INDIA

*2 days / 3 nights*

**Feb 2020**

Theta : +91 98230 111145

*For details and modus operandi Call us on +91 72494 16788 or email us at rotaryb2bpune@gmail.com*

# ஒரு வித்தியாசமான பள்ளி

G சிங்

ஜமீர் சர்தார், ஒரு சிறந்த மாணவன், திறமையுள்ள நடனக் கலைஞனும் ஒரு நல்ல ஓவியனும் கூட. அவனுடைய ஆசிரியர்கள் அவர் மீது மிகுந்த பற்று வைத்து அவனுடைய திறமைகளை பாராட்டுபவர்கள். இந்த பதினாறு வயது சிறுவன், கலாச்சார பரிமாற்ற திட்டத்தின் கீழ், ஒரு நாட்டிய நிகழ்ச்சியை டென்மார்க்கில் அவனுடைய நண்பர்களுடன் வழங்கினான். நாட்டியத்தில் திறமை மிக்கவனாக இருந்தும் ஒரு ஓவியனாக திகழ வேண்டும் என்பதே அவன் விருப்பம்.

ஆனால் அவனுடைய சாதனை கூடுதலாக இனிப்பது, அவனது பின்னணியினால் தான். இந்த IXவது வகுப்பு மாணவன், அணுகுவதற்கே மிகக் கடினமான மேற்கு வங்காளத்தின் சுந்தர்பான்ஸ் பகுதியில் வசிப்பவன். 2வது வகுப்பில் அவன் படித்துக் கொண்டிருக்கும் போது அவன் தந்தை காலமாகி விட்டார். அவனுடைய தாயார் தான் அங்கிங்கு வெவ்வேறு வேலை செய்து அவருடைய நான்கு பிள்ளைகளை வளர்த்தது.

அவர்களுக்கு சரியான கல்வி தரும் வகையில் அவரால் சம்பாதிக்க முடியவில்லை. ஒரு நல்ல மனிதர், ஜமீரை, சவுத் 24 பர்கானாஸ் பகுதியின் ஜாய்கோபால்பூர் கிராமத்தில் இலாபமற்ற முறையில் நடத்தப்படும் விவேகானந்தா சிக்ஷா நிகேதன் பள்ளியில் சேர்த்து விட்டார். பொருளாதார ரீதியாக கீழ்மட்டத்தில் இருக்கும் மாணவர்களுக்கு இப்பள்ளி சலுகைகள் வழங்குகிறது. இப்பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு நிதியுதவி செய்யும் ஒரு டென்மார்க் தம்பதிகளின் கண்களில் பட்டான் ஜமீர். ஜமீர் கல்விக்கும் உதவி செய்ய அவர்கள் முடிவு செய்தனர்.

பள்ளி அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்களின் உதவியும் ஆதரவும் கிடைத்திருக்காவிட்டால் இந்தளவுக்கு நான் வந்திருக்கமுடியாது என்கிறான் ஜமீர். இப்பள்ளி என் வாழ்க்கையை அடியோடு மாற்றி விட்டது. பெரிதாக நினைத்து என் கனவுகளை நினைவேற்றுவேன் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றான் ஜமீர், அவனுடைய ஒரு ஓவியத்தை காண்பித்துக் கொண்டே.

அவன் தனியாக இல்லை. இப்பள்ளி, தமது 500 மாணவர்களின் 20 சதவீதத்தினருக்கு கட்டணங்களை முழுதுமாக நீக்கி அவர்களது கல்வி தொடரும் படியான வழி வகை செய்துள்ளது. நாம் வெகு குறைவான கட்டணத்தையே வசூலிக்கிறோம்-மாணவர்களிடமிருந்து அதிகபட்சமாக ரூ.250 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. கட்டணம் செலுத்த முடியாதவர்களுக்கு இலவசமாக தங்கும் வசதியும் செய்து தரப்படுகிறது. மாணவர்கள் பள்ளிப்படிப்பிலிருந்து விலகக்கூடாது என்றார் பள்ளியின் முதல்வர் மதுசூதன் மண்டல்.

எரிபொருள் சேர்ப்பதற்கும் அல்லது மீன் பிடிப்புக்கும் காட்டுக்குள் சென்ற போது புலிகளால் கொல்லப் பட்டவர்களின் பிள்ளைகளும் இந்த மாணவர்களின் எண்ணிக்கையில் அடக்கம். சுமார் 3,000 புலி விதவைகள், சுந்தர்பான்ஸ் பகுதியில் வசிக்கின்றனர்.

சுந்தர்பான்ஸ் பகுதியின் ஜார்க்கலியில் வசிக்கும் பபிதா, லதிகா மண்டல் என்ற இரண்டு சகோதரிகள் இவ்வாண்டு Xவது படிப்பை முடித்துள்ளனர். அவர்களின் இரண்டு உறவினர்கள் முதலையினாலும் தாத்தா புலியினாலும் கொல்லப்பட்டுவிட்டனர். பள்ளிக் கட்டணம் செலுத்த முடியாத காரணத்தால், இவர்களை பள்ளியிலிருந்து நிறுத்தி விட்டிருந்தனர். பள்ளி அதிகாரிகள் தலையீட்டினால், இவர்கள் மீண்டும் பள்ளியில் VIவது வகுப்பில் சேர்க்கப்பட்டனர். ஆசிரியர்கள்



எமக்கு ஆதரவு தந்து தேர்வுகளுக்கு முன்னதாக கூடுதல் வகுப்புகளையும் எமக்காக நடத்தினார்கள். எமது தந்தை உயிரை பணயம் வைத்து காட்டுக்குள் செல்வதை தடுப்பதற்காக நாங்கள் சம்பாதிக்க விரும்புகிறோம், என்றார் பபிதா மண்டல். இச்சகோதரிகளுக்கு துணி தைக்கும் பயிற்சி, பள்ளியில் தரப்படுகிறது. இதன்மூலம் இவர்கள் தமது சொந்தக் காலில் நின்று ஒரு மாற்று வருமானமும் பெறும் வகையில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பள்ளியில் இருக்கும் கல்வி முறையே வித்தியாசமானது. படிப்பில் சிறந்த செயல்பாட்டுக்காக நிறைய அழுத்தம் மாணவர்களுக்கு தரப்படும் இக்காலகட்டத்தில், இப்பள்ளி, மீன்பிடிப்பு, விவசாயம் மற்றும் இதர நடவடிக்கைகளில் மாணவர்களுக்கு பயிற்சியளிக்கிறது. மாணவர்களுக்கு அளவுக்கதிக அழுத்தம் தருவதனால பலமுறை விபரீத முடிவுகளை எடுக்கும் அளவுக்கு அவர்களை தள்ளி விடுகின்றன. மீன்பிடிப்பில், விவசா யத்தில், நடனத்தில் அவர்களுக்கு அதிக ஊக்கம் தருவதன் மூலம் அவர்கள் இத்துறைகளில் சிறந்து



*ஜமீர் சர்தார் தன் ஓவியங்களுடன்.*






**மேலே:** *விவேகானந்தா பள்ளிக் குழந்தைகள்.*

**இடது:** *பள்ளிக் குழந்தைகளுக்கு விவசாயப் பயிற்சி.*

விளங்குவார்கள். மாணவர்களுக்கு எந்தத் துறையில் விருப்பமோ அதை பொறுத்து அவர்களின் பயிற்சியும் தரப்படுகிறது, என்றார் மதுசூதன் மண்டல்.

இப்பள்ளியின் மாணவர்களும் இதர ஊழியர்களும் உள்ளிட்ட சுமார் 17 பேர், கலாச்சார பரிமாற்ற திட்டத்தின் கீழ், டென்மார்க் நாட்டுக்கு விஜயம் செய்தனர். அங்குள்ள பார்வையாளர்கள் பலரையும் தமது நடனத் திறமையினால் இவர்கள் வெகுவாக கவர்ந்தனர்.

சுந்தர்பான்ஸ் பகுதியில் பல பிள்ளைகள் பள்ளிப்படிப்பிலிருந்து உயர்நிலைப் படிப்பு மட்டத்தில் விலகி விடுகின்றனர்; அவர்கள் சமூகத்துக்கு பெரிய சுமையாகி விடுகின்றனர். உயர்நிலைப் பள்ளியை முடித்ததும் கல்விக்கு காப்பீடு கொடுப்பதன் மூலம் ஒரு சிறப்பு வகை காப்பீடு திட்டம் கைகொள்ளப்படுகிறது. இதன்படி மாணவர்கள் பணம் சேமிக்க தொடங்குகின்றனர், ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு பள்ளியின் 50 சதவீத கூடுதல் பங்களிப்புடன் அத்தொகை அவர்களுக்கு திரும்பி தரப்படுகிறது. இதன் மூலம் பல்வேறு சுற்றுப்புறச் சூழலுக்கு தேவையான திட்டங்களையும் வகுத்து மாணவர்களை அவற்றில் ஈடுபடச் செய்கிறது, என குறிப்பிட்டார் இலாபமற்ற முறையில் நடத்தப்படும் கோபால்பூர் கிராம் விகாஸ் கேந்திராவின் செயலாளர் பிஸ்வஜித் மஹாகுர். ■

# GG திட்டங்களுக்குப் பின்னாலுள்ள தொழில்நுட்பக் குழுவைத் தெரிந்துகொள்ளுங்கள்

Dr இந்துமதி கோபிநாதன்

ரோட்டரித் தன்னார்வலர்களுடைய பெரிய குழு ஒன்று, TRF ஊழியர்கள் மற்றும் அறங்காவலர்களுக்கு உதவுவதற்காக, முறையான நல்கைத் திட்டமிடல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடலில் தங்களுடைய நேரத்தையும் அறிவாற்றலையும் வழங்குகிறார்கள். இந்த ரோட்டரியன்கள், "தொழில் நுட்ப ஆலோசகர்கள் கட்டமைப்பு" எனப்படும் குழுவைச் சேர்ந்தவர்கள்.



*இந்துமதி கோபிநாதன் குழுவினர்களுடன் கலந்துரையாடுகிறார்.*

**வளங்களை அளிக்கும் வல்லுனர்கள்:** இவர்கள் பன்னாட்டு நல்கை விண்ணப்பங்களுக்கு வழிகாட்டுவது, ஆலோசனை வழங்குவது, ஜூலை 2019முதல் எந்தவொரு பன்னாட்டு நல்கைத் திட்டத்துக்கும் கட்டாயமான சமூகத் தேவைகள் மதிப்பீட்டு செய்வது போன்றவற்றில் உதவுகிறார்கள்.

**தொழில்நுட்ப வல்லுனர்கள்:** இவர்கள் உலகெங்கும் செயல்திறன் மிக்க, நீடித் திருக்கக்கூடிய மற்றும் பொறுப்பான GG திட்டங்களை நிறைவேற்றச் சங்கங்களுக்கு உதவுகிறார்கள்.

**கட்டமைப்பு உறுப்பினர்களைப் பற்றிய தகவல்கள்:** இவர்கள், ரோட்டரியின் ஆறு கவனப் பகுதிகளுக்குத் தொடர்புடைய வெவ்வேறு தொழில்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ரோட்டரியன்கள்... இத்துடன், கட்டமைப்பு உறுப்பினர்களில் தணிக்கையாளர்களுடைய ஒரு குழுவும் உண்டு, இவர்கள் திட்ட நிதிக் கணக்குகள் மற்றும் நல்கை மேலாண்மையை ஆராய்வார்கள். கட்டமைப்பு உறுப்பினர்கள் பலவிதமான தொழில்களிலிருந்து வருகிறார்கள்

**கட்டமைப்பு உறுப்பினர்களுடைய குறிப்பிட்ட பொறுப்பு:** அவர்கள் திட்டங்களை ஆராய்கிறார்கள், கண்காணிக்கிறார்கள், மதிப்பீடு கிறார்கள், நல்கை நிதி முறையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்கிறார்கள். இவர்கள் இணையத்தில் தொழில்நுட்ப ஆய்வுகளை, கள வருகைகளை, தணிக்கைகளை, பிற முக்கியப் பணிகளை நிகழ்த்துகிறார்கள்.

உங்களுடைய திட்ட வகையை அறிந்த ஒரு கட்டமைப்பு உறுப்பினரிடமிருந்து பணிகளைத் திட்டமிடல் அல்லது செயல்படுத்தலுக்கான வழிகாட்டுதலைப் பெற விரும்பினால், cadre@rotary.org என்ற மின்னஞ்சல் முகவரியையோ, தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்களையோ தொடர்பு கொள்ளலாம்.

இத்துடன், ரோட்டரி விவாதக் குழுக்களின் வழியாக நீங்கள் வல்லுனர்களிடம் நேரடியாகக் கேள்விகளைக் கேட்கலாம். ஒவ்வொரு கவனப் பகுதியிலும், ரோட்டரி உலகத்திலிருந்து மூன்று தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளார்கள். கட்டமைப்பு உறுப்பினர்களைச் சேர்க்க இவர்கள் உதவுகிறார்கள், ஒவ்வொரு தொழில்நுட்பப் பிரிவிலும் தலைவர்களாகச் சேவைபுரிகிறார்கள்.

**TRF கட்டமைப்பில் இணைவது எப்படி?**

பொருந்தும் பகுதியைத் தேர்ந்தெடுங்கள்; உங்களுடைய பகுதியில் உள்ள கட்டமைப்புக்கு என்னென்ன திறமைகள் தேவைப்படுகின்றன என்பதைக் காணுங்கள். அனைத்துத் தொழில்நுட்பப் பகுதிகளிலும் ரோட்டரி ரொட்டேரியன்களை நாடுகிறது. இதற்குத் தேவையான தகுதிகள் இவை:

- ஒரு ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராக இருக்கவேண்டும்
- TRF மற்றும் RIயுடன் நல்ல புரிந்து கொள்ளலில் இருக்கவேண்டும்
- தொழில்நுட்ப பிரிவுகளில் குறைந்தது ஒன்றிலாவது தொழில் முறை அனுபவம் வேண்டும்.

ரோட்டரியினர் நன்கொடைப் பணத்துக்கு முறையான கணக்குகள் பதிவுசெய்யப்படவேண்டும்; உலகெங்குமுள்ள சமூகங்களுக்குப் பயன்படும்வண்ணம் செயல்திறனோடு அது பயன்படுத்தப்படவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிறார்கள்.

*இதன் எழுத்தாளர் RC பாம்பே செம்பூர் வெஸ்ட் (RID 3141) உறுப்பினர் மற்றும் 2014 முதல் கட்டமைப்பு உறுப்பினராகவும் உள்ளார்.*

ADVT.




*Congratulations*
*to*

# Shekhar Mehta

Selected 2021-2022
Rotary International President

*With Best Compliments From*

**Sangeeta - Kishor Katru**
**District Governor, 2019-2020**
**RID 3110**



# ஈரானிலிருந்து ஈரோட்டுக்கு நீளும் இரக்கச் சுவர்

கிரண் ஜெஹ்ரா

அந்தச் சிறு பையனுக்குக் காலணி பொருந்தியபோது அவனுடைய முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியை நான் எப்போதும் மறக்கமாட்டேன், என்கிறார் RC ஈரோடு காஸ்மோஸ் (RID 3202) தலைவர் காயத்ரி தேவி. அவர் இரக்கச் சுவர் என்னும் திட்டத்தைத் சங்கத்தின் மூலம் நிறுவியுள்ளார். இதன்மூலம், ஈரோட்டைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்திய, கூடுதலான பொருட்களை நன்கொடையாக வழங்கலாம், இப்பொருட்களுக்கு தேவையுள்ள மக்கள் அவற்றைப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்வார்கள். கலைமகள் பள்ளிச் சாலையின் ஒரு மூலையில் அந்தச் சிறுகடை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு தான் ஆடைகள், வீட்டுப் பொருட்களில் தொடங்கிப் புத்தகங்கள், பொம்மைகள் வரை தேவையுள்ளவர்கள் எடுத்துக் கொள்வதற்காகச் சேமித்துவைக்கப் பட்டுள்ளன. ஒருவருக்குத் தேவையில்லாத பொருட்கள், அவற்றுக்குத் தேவையுள்ளவர்களைக் கண்டறிந்து செல்லும் என்பதை உறுதிப்படுத்தச் சிறந்த வழி இது என்றார் காயத்ரி.

இரக்கச் சுவர் யோசனையானது, ஈரானிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ள நன்கொடைத் திட்டம் என்று விளக்குகிறார் அவர். மஷாஹதில், ஒரு குளிர்க் காலத்தின் போது, ஒரு சுவரின்மீது யாரோ ஹாங்கர்களை மாட்டி, அவற்றில் கதகதப்பான ஆடைகளைத் தொங்கவிட்டார்கள். பக்கத்தில் ஒரு குறிப்பும் எழுதிவைத்தார்கள்: 'தேவையில்லா விட்டால், இங்கு விட்டுவிடுங்கள். இது உங்களுக்குத் தேவைப்பட்டால், எடுத்துக்கொள்ளுங்கள்.' விரைவில், அக்கம்பக்கத்தினருடைய நன்கொடை கள் வரத்தொடங்கின. சமூக ஊடகங்களின் துணையோடு இந்த யோசனை பிற நகரங்களுக்கும் பரவத் தொடங்கியது.''

சுவரின் இலக்கு, சமூகத்தில் தேவையுள்ள மக்களை எட்டுதல். ஈரோட்டில் இது, அரசு உதவி பெறும் இரண்டு பள்ளிகள் மற்றும் ஒரு மருத்துவமனையில் உள்ளது. பலரும் பொருட்களை நன்கொடையாக வழங்கினார்கள். ஆனால், அவற்றை யாரும் எடுத்துக்கொள்ளவில்லை. இரக்கச் சுவரைப்பற்றிச் சில மக்களுக்குதான் தெரிந்திருந்தது. ஆகவே, மற்ற தொழில்களைப் போலவே நாங்கள் இதை விளம்பரப் படுத்த வேண்டியிருந்தது என்கிறார் காயத்ரி. இந்தச் சுவரைச் சமூக ஊடகங்களில், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்களின்மூலம் சில மாதங்கள் விளம்பரப்படுத்திய பிறகு, அதிகப் பேர் இங்கு வரத் தொடங்கினார்கள். இதன்மூலம் அதிக நன்கொடையாளர்களும் வந்தார்கள்.

இதுபோன்ற யோசனையைப் பெங்களூரில் கண்டபின், காயத்ரிக்கு இந்த யோசனை வந்தது. இதை ஈரோட்டில் முயன்றுபார்த்தால் என்ன என்று நான் யோசித் தேன்.'' இதற்காக நிறைய உழைக்கவேண்டியிருந்தது: அரசு அனுமதிகள், உள்ளூர் ஆதரவு, சுவரை அமைப்பதற்கு ஓர் இடம். தனக்கு உரிமையாக இருந்த மூன்று



*PDG E K சகாதேவன் மற்றும் RC ஈரோடு காஸ்மோஸ் தலைவர் காயத்ரி தேவி திட்டத்தை துவக்கிவைக்கின்றர்.*




*சிறுவர்கள் இரக்கச் சுவர் ஒன்றில் உள்ள காலணிகளை அணிந்து பார்க்கின்றனர்.*

கடைகளில் ஒன்றை இரக்கச் சுவராக மாற்றினார். ரூ.70,000 முதலீடு செய்து சேமிப்பு அலமாரிகள், இரும்புத் தாங்கிகள் மற்றும் ஹேங்கர்கள், மற்றும் முறையான விளக்குவசதிக்கு ஏற்பாடு செய்தார்.

இத்திட்டம் நன்கு செயல்படத் தொடங்கியதும், நகரின் முன்னணி விளையாட்டுப் பொருட்கள் கடையொன்று சங்கத்துக்கு 250 ஜோடி புதிய காலணிகளை நன்கொடையாக வழங்கியது. ஒவ்வொரு நாளும், நாங்கள் 10 ஜோடிக் காலணிகளை வைக்கிறோம். எந்தக் குழந்தையும் இரண்டாவது முறை வந்து காலணிகளை எடுக்கவில்லை என்பது, சங்கத்திலுள்ள எங்கள் அனைவருக்கும் வியப்பைத் தந்தது. எங்களிடம் இன்னும் 10 ஜோடிக் காலணிகள் உள்ளன; அவற்றைத் தேவையுள்ள மாணவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்று உறுதியாக நம்புகிறோம் என்கிறார். பெரியவர்கள் அலமாரிகளிலிருந்து மூன்று அல்லது ஐந்துக்கும் மேற்பட்ட பொருட்களைத் தேவைக்காக எடுத்துக் கொள்கிறார்கள். இதில் நாங்கள் குறுக்கிடுவதில்லை. அவர்களில் பெரும் பாலானோர் சரியான முறையைப் புரிந்து கொண்டுவிட்டார்கள். அலமாரியிலிருந்து ஒரே ஒரு பொருளை தான் எடுக்கிறார்கள்.

இத்திட்டத்தை PDGகள் Dr சகாதேவன் மற்றும் PM சிவசங்கரன் தொடங்கி வைத்தார்கள்.■

---

# மான்ட்வி மாணவர்களுக்கு கல்விப் பயிற்சி வகுப்புகள்

ரோட்டரி செய்திக்குழு



மான்ட்வி ரோட்டரி கிளப், RID3054, 10வது, 12வது படிக்கும் மாணவர்களுக்கு ஒரு கல்விப் பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்தது. கற்றலுக்கும் கல்விக்கும் ஒரு ஆரோக்கியமான அணுகுமுறையை கைகொள்ளவைக்கும் குறிக்கோளுடன் நடத்தப்பட்ட இவ்வகுப்பில் கிட்டத் தட்ட 120 மாணவர்கள் பங்கேற்றனர். வாரியத் தேர்வுகள் எழுதும் மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதில் 40 ஆண்டு அனுபவமிக்க கல்வியாளர் கிஜுபாரட், பல்வேறு தலைப்புகளில் மாணவர்களுக்கு உரையாற்றினார்.

இந்த மூன்றரை மணி நேர பரஸ்பர ஊடாடும் வகுப்பு, மான்ட்வியின் ரோட்டரி ஹாலில் நடத்தப்பட்டது. மாணவர்கள் தேர்வுகளை சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில் அவர்களுடைய புரிதல் மற்றும் நினைவு கொள்தல் திறனை அதிகரித்துக் கொள்ளும் வகையில் இவ்வகுப்பு, நினைவாற்றல் தொழில்நுட்பங்களை கைகொண்டது. எழுதும்போது வேகமாகவும் சரியாகவும் இருக்கச்செய்யும் உதவிக் குறிப்புகளும் மாணவர்களிடையே பகிரப்பட்டது. தேர்வுகள் அழுத்தம் தரக்கூடாத வகையில் இருக்க வகுப்பின் நடவடிக்கைகள், மன வரைபடங்கள் போன்ற கற்றல் தொழில்நுட்பங்களில் கவனம் தரப்பட்டது. மாணவர்களின் அழுத்தத்தை குறைப்பதற்கு அவர்களுக்கு ஆதரவு தந்து அவர்களின் மனவலிமை அதிகரிக்கவும் தேர்வு காலங்களில் அவர்களுக்கு ஆதரவு தந்து அழுத்தம் தருவதை குறைக்க அவர்களின் பெற்றோர்களுக்கு விளக்கவும் எமது கிளப் விரும்பியது என்றார் கிளப் தலைவர் பாவின் கனத்ரா.■

# ஆளுநர்களுடன் சந்திப்பு

ஜெய்ஸ்ரீ



## சிறுவயது முதல் ரோட்டேரியன்

**சுனில் நாக்பால், தகவல் தொழில்நுட்பம்**

RC **பாலாம்பூர்,** RID 3070

எனது தந்தை Y P நாக்பால் அவர்கள் உறுப்பினராக இருந்த அதே கிளப்பில் நான் 41 ஆண்டுகள் உறுப்பினராக உள்ளேன் என்கிறார் சுனில் நாக்பால். தனது தந்தை ரோட்டரி உறுப்பினராக இருக்கும்போதே அவருடன் சிறு வயதில் கிளப் கூட்டங்களுக்கும், மாநாடுகளுக்கும் திட்டக் களங்களுக்கும் சென்று கொண்டிருந்தார். இறுதியாக ரோட்டரியில் 1997ம் ஆண்டு தன்னை இணைத்துக் கொண்டார்.

கிளப் சார்ட்டர் பிரசிடென்ட் Dr சிவகுமார் மற்றுமொரு வழிநடத்துனர். கிளப் லாட்டரி திட்டத்தின் மூலம் கிடைத்த ரூ.20,000த்தை அவர் பாலாம்பூர் ரோட்டரி பவன் கட்டுமானத்துக்கு எவ்வாறு பயன்படுத்தினார் என்பதனை என்னுடைய சிறு வயதில் நான் கவனித்துள்ளேன். இன்று இந்த கட்டிடம் 7,500 சதுர அடி வரை விரிந்து மூன்று அடுக்கு மாடிகளுடன் ஒரு வெற்றிகர திட்டமாக செயல்பட்டு வருகிறது. மற்ற நிரந்தர திட்டங்கள், ரோட்டரி கண் மருத்துவமனை; இதன் சீனியர் வைஸ் சேர்மன், அவருடைய தந்தையாராவார்; ஒரு தாய்-சேய் மருத்துவமனை; ஒரு அனாதை இல்லம் நடத்தும் ரோட்டரி ஹெல்பேஜ் பவுன்டேஷன்; ஒரு பிசியோதெரபி க்ளினிக்; மாற்றுத்திறனாளிகளுக்காக ஒரு பள்ளி ஆகியவை உள்ளிட்டிருக்கும். இத் திட்டங்களுக்கான நிலம் சமூகத்தால் நன்கொடையாக தரப்பட்டது. ஒரு பெரிய கொடையாளி, கடந்த 35 ஆண்டுகளாக, கண் அறுவை சிகிச்சைகள் சிலவற்றிற்கு நிதியுதவி அளித்து வருகிறார். இந்த அளவுக்கு இப்பகுதி மக்களிடம் ரோட்டரி நம்பிக்கை பெற்றுள்ளது. என்கிறார் அவர்.

நாக்பால் அவர்கள், போர் விதவைகளுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் திறன் மேம்பாட்டு திட்டங்களை வழங்குவதில் தீவிரமாக உள்ளார். பிப்ரவரி 2020 யில் லூதியானாவில் உலகளவிலான நிதியுதவியுடன் நடக்க உள்ள பிரம்மாண்டமான மருத்துவ முகாமுக்காக அவர் செயல்பட்டு வருகிறார். ஜலந்தரில் ரோட்டரி மருத்துவமனை அண்மையில் திறக்கப்பட்டது குறித்து அவர் பெருமை கொள்கிறார். இதற்கான கட்டிடம் ஒரு கார்ப்பரேட் நிறுவனம் தர நாம் அதனை உலகளவிலான நிதியுதவி மூலம் ஒரு ஜெர்மனி கிளப் ஆதரவுடன் செயல்பட வைத்தோம். பள்ளிகளில் மின்-அஞ்சல் வழி கல்வி வசதிகளை ஏற்படுத்தவும் அவர் திட்டமிட்டு வருகிறார்.

மாவட்டதில், இந்த ஆண்டு 140 புதிய உறுப்பினர்கள் சேர்ந்திருக்கிறார்கள் மற்றும் ஒரு புதிய ரோட்டரி கிளப் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஐந்து புதிய கிளப்புகள் தோற்றுவிப்பதனுடன், வெளியேறுவோர்களை தடுக்கும் நடவடிக்கையுடன் அவர் நிகர வளர்ச்சியாக 10 சதவீதம் எதிர்பார்க்கிறார். புதிய உறுப்பினர்கள் முதலில் குறைந்தது மூன்று ரோட்டரி திட்டங்கள் அல்லது நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொள்கிறார். அதன்மூலமாகத்தான் அவர்கள், கிளப்புக்கு ஒரு மதிப்பு சேர்க்க முடியும்.

இதுவரை ஏற்கனவே TRFக்காக அண்மையில் நடைபெற்ற TRF கருத்தரங்கில் $10,000 வசூலிக்கப் பட்டுவிட்ட நிலையில், மேலும் $150,000 வசூலாகும் என்று அவர் நம்பிக்கையுடன் உள்ளார். இந்த மாவட்டம் மூன்று மாநிலங்களை உள்ளடக்கியுள்ளது-பஞ்சாப், இமாச்சல பிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீர்; மேலும் கூடுதல் நிதியளிப்புக்கும் வாய்ப்புள்ளது என்கிறார் கவர்னர். அவருடைய மனைவி அர்ச்சனா அவர்களும் அதே கிளப்பில் உறுப்பினராக உள்ளார்.■

## திட்டங்கள் பெருகுகின்றன

**ஹரி குப்தா,** RC **மீரட் ஸ்டார்ஸ்,** RID 3100



அவருடைய மாவட்டதிற்கென்று அவரிடம் பல திட்டங்கள் உள்ளன; இதில் ஒரு கண் வங்கி, மருத்துவமனை, இரத்த வங்கி, சோலார் சக்தி பேனல்கள் மற்றும் இருதய-சிறப்பு ஆம்புலன்ஸ் ஆகியவை அடங்கும். கல்வியறிவை மேம்படுத்துவது முன்னிலையில் உள்ளது என்கிறார் ஹரி குப்தா. மேலும் அவர் கூறுகையில் படிக்கவும் எழுதவும் சுயமாக கையெழுத்து போடவும் கற்றுக்கொண்டால் மக்கள் முகங்களில் எவ்வளவு மகிழ்ச்சி பொங்குகிறது என்பதை பார்த்து பாராட்டவேண்டும். பள்ளிகளில் மின்-அஞ்சல் வழி கல்வி கற்றல் வசதி களுக்கும் வயதானோர் கல்வியறிவு திட்டங்களுக்கும் அவர் பட்டியலில் முன்னுரிமை பெறுகின்றன.

1989–96 வரை குப்தா ரோட்டராக்டராக இருந்து 2007ல் அவர் ரொட்டேரியன் ஆனார். எண்ணிக்கையில் 13 முதல் 40 வரை உள்ள ரோட்டராக்ட் கிளப்புகளை அதிகரிக்க விரும்புகிறார் அவர். ஜனவரி 2020ல் அவர் திட்டமிட்டுள்ள RYLA குறித்து அவர் ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டுள்ளார். மாவட்டம் இந்த நிகழ்வை 20 ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்க இருக்கிறது. ரோட்டரி உறுப்பினர்களை 3,000 வரை இரட்டிப்பாக்கும் திட்டம் அவர் கைவசம் உள்ளது. இது சாத்தியம். பதினாறு புதிய கிளப்புகள் சார்ட்டர் செய்யப்பட்டுள்ளது, நமக்கு மேலும் நான்கு கிடைக்கும். சராசரியாக ஒவ்வொரு கிளப்பும் 30 உறுப்பினர்கள் கொண்டிருந்தால், இது ஒரு வரப் பிரசாதம்தான் என்றார் நம்பிக்கை ஒளிர. ஆறு உலகளவிலான நிதியுதவி திட்டங்கள் மாவட்டம் திட்டமிட்டுள்ளது மேலும் மாவட்டத்திலிருந்து TRFக்கு $200,000 நிதி திரட்ட கவர்னர் திட்டமிட்டுள்ளார்.

அவருடைய மனைவி நிதி அவர்களும் அதே கிளப்பின் உறுப்பினராவார்.■

## கல்வியறிவுக்கு முன்னுரிமை

**கிஷோர் காட்ரு**
**ஆட்டோமொபைல் நிதியுதவியாளர்**
RC **பரேலி சென்ட்ரல்,** RID 3110



1986–89 வரை ரோட்டராக்டராக இருந்தவர் 1991லிருந்து ரோட்டேரியனாக உள்ளார்.மிகவும் பாராட்டப்படவேண்டிய அவருடைய ரோட்டரி பணி என்னவெனில், மாவட்ட நிர்வாகத்தின் பொறுப்பில் இருந்த ஒரு இடுகாட்டை ரோட்டரி மூலமாக புதுப்பித்தது தான். அது மிகவும் மோசமான நிலையில் இருந்தது. இதன் மூலம் இறந்தோரை கௌரவிப்பது போல் இத்திட்டம் அமைந்தது என நான் நினைக்கிறேன், என்கிறார் கிஷோர் காட்ரு.

பரேலி, ஆக்ரா, அலிகர் ஆகிய பகுதிகளில் டயாலிசிஸ் மையங்களை ஏற்படுத்தும் திட்டம் அவர் கைவசம் உள்ளது. கல்வியறிவை மேம்படுத்து வதற்கும் அவர் முக்கியத்துவம் தருகிறார். உத்திரப் பிரதேசத்தின் முக்கிய பகுதிகளில் கல்வியறிவு பெறாதவர்கள் பலர் உள்ளனர். கிராமங்களில் கழிப்பிடங்களையும் கையலம்பும் மையங்களையும் கிளப்புகள் அமைத்து, அடிப்படைக் கல்வி வசதிகளை அப்பகுதி மக்களுக்கு ஏற்பாடு செய்து தரும்.

இவருடைய உறுப்பினர் இலக்கு, கணிசமான பெண் உறுப்பினர்கள் உள்ளிட்டு சுமார் 1000 புதிய உறுப்பினர்கள்.

TRFக்காக $400,000 நிதி திரட்டும் குறிக்கோள் வைத்துள்ளார். DRFC தேவேந்திர அகர்வால் அவர்களின் அர்ப்பணிப்பு, 20 பெரிய கொடையாளிகளை அளித்துள்ளது, என்கிறார் அவர்.

காட்ருவின் மனைவி சங்கீதா அவர்கள் ஒரு தீவிர இன்னர் வீல் உறுப்பினராவார்.■

# முதியவர்களுக்கான கவனிப்பு

**ஜோசப் மாத்யூ**

**கல்வியாளர், RC மைசூர் வெஸ்ட், RID 3181**



என்னுடைய மறக்க முடியாத ரோட்டரி நேரம் என்பது, பள்ளி மாணவர்களுக்காக எனது கிளப் ஒரு விஞ்ஞான கண்காட்சி நடத்திய போது அப்துல்கலாம் அவர்கள் வந்து அதனை பார்வையிட்டது தான் என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார் ஜோசப் மாத்யூ. 2001ல் ரோட்டரியில் சேர்ந்தார்; அவர் பணிபுரியும் கல்லூரியின் ரோட்டராக்ட் கிளப்பில் ஸ்டாஃப் கோ-ஆர்டினேட்டராக செயல்பட்டார்.

மாத்யூவிடம் அவரது மாவட்டத்திற்காக இரண்டு திட்டங்கள் தயார் நிலையில் உள்ளன. ஒன்று ஜீவன் சந்த்யா, மூத்த குடிமக்களை கவனித்துக் கொள்ளும் ஒரு திட்டம். இங்குள்ள ரொட்டேரியன்கள் முதியோர் இல்லங்களுக்கு சென்று, மறுசீரமைப்பு செய்யவும் தயாராக உள்ளனர்., இங்கு ஒரு சங்கம் முதியோர் இல்ல கட்டிடத்தை எழுப்பி வருகிறது. இன்னொரு திட்டம் ஒரு உயிரை காப்பாற்றுங்கள் திட்டம்; இதன்படி முதலுதவி பயிற்சிகளை கல்லூரிகளில், பள்ளிகளில் மற்றும் அலுவலகங்களில் வழங்கும். புற்றுநோய் அறிதல் முகாம்களும் இதன் அங்கமாக நடத்தப்படும்.

பெண் உறுப்பினர்கள் உள்ளிட்ட 1,000 மாவட்ட உறுப்பினர்களை சேர்த்து பத்து புதிய கிளப்புகளை அமைக்க விரும்புகிறார் மாத்யூ. 300 புதிய உறுப்பினர்களில், 30 பேர் பெண்கள் என்றும் அவர்களின் கணவன்மார்கள் அனைவரும் ரொட்டேரியன்கள் என்பதையும் பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறார். ரோட்டராக்ட் கிளப்புகள் குறித்து பேசுகையில், சமூக அடிப்படையை சார்ந்து அமைந்துள்ள கிளப்புகள், கிராமப்புற மக்களுக்கு கல்வி வசதி தர தீவிரமாக செயல்படுகின்றன என்றார். கல்வி அமைப்பு அடிப்படையிலான கிளப்புகள், அவர்களின் தேர்வு வடிவமைப்பில் மாற்றம் இருப்பதால், இப்பொழுது மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு மொபைல் புற்றுநோய் ஸ்க்ரீனிங் யூனிட் அமைக்க உலகளாவிய நிதியுதவித் திட்டத்தை அவர் திட்டமிட்டுள்ளார். TRFக்காக $500,000 பங்களிப்புக்கு திட்டமிட்டுள்ள இவரிடம் 20–25 பெரிய கொடையாளிகள் நிதியுதவியளிக்க தயார் நிலையில் உள்ளனர்.■

# ரோட்டரி-CSR கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது

**ஹரிஷ் கவுர், HR ஆலோசகர், RC பிவான்டி, RID 3053**



இவர் 2005ல் ரோட்டரியில் சேர்ந்தார். பிவான்டி புலம் பெயர்ந்த மக்கள் தொகையை கொண்ட தொழில் நகரம். இங்கு மக்கள் வாழ்வை மேம்படுத்த பல வாய்ப்புகள் உள்ளன; நான் ரொட்டேரியன் ஆவதற்கு முன்பே இங்கு ரோட்டரியின் செயல்பாட்டை பார்த்துள்ளேன், என்றார் ஹரிஷ் கவுர்.

இந்த முன்னுரிமை திட்டங்களில் நீர் சேமிப்பும் கல்வியறிவும் முக்கியத்துவம் பெறுகின்றன. CSR உடன் உலகளவிலான நிதியுதவிக்கு கவனம் தந்துக்கொண்டிருக்கும் நிலையில், அடிப்படைக் கல்வியறிவு மற்றும் மின்-அஞ்சல் வழி கல்வி தொடர்பான ஐந்து திட்டங்களை செயல்படுத்தவும் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. CSR கூட்டுடன் நாம் மொபைல் டிஜிட்டல் லைப்ரரியை அறிமுகப்படுத்தவுள்ளோம். மொபைல் TB கண்டறியும் யூனிட் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டுக்கு எதிரான தீவிர பிரச்சாரமும் அவருடைய திட்டப்பட்டியலில் உள்ளன.

ரோட்டரி பற்றிய பொதுமக்கள் கருத்தை மேம்படுத்த, மாவட்டத்தில் உள்ள மூன்று கிளப்புகள் இந்திய சாதனை புத்தகத்திலும் லிம்கா சாதனை புத்தகத்திலும் அவர்கள் சாதனைகளுக்காக இடம் பெற்றுள்ளன என்பதில் கவுர் மகிழ்ச்சி அடைகிறார்.

விலகிச்செல்வதை தடுப்பதில் கவனம் தரும் நிலையில் அவர் உறுப்பினர் எண்ணிக்கையை 10 சதவீதம் அதிகரிக்கச் செய்ய திட்ட மிட்டுள்ளார். அவர் திட்டத்தில் அதிக பெண் உறுப்பினர்களை சேர்ப்பதும் பிரதானமாக உள்ளது.

TRF இலக்காக $325,000 தொகை பங்களிப்பை பெறுவது சிரமமாக இருக்கலாம் என கவர்னர் நினைக்கிறார். இது மாவட்டத்திற்கு பெரிய தொகை தான், ஆனால் இதற்கு நிகராக எவ்வளவு தொகை கிடைக்கிறதோ பார்க்கலாம், என்கிறார்.■

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# திறந்தவெளி மலங்கழித்தல் பழக்கத்தை நிறுத்துவதற்கான ரோட்டரி–பெருநிறுவன முயற்சி

ஜெய்ஸ்ரீ

பெரேலியில் சுமார் 955 பேர் இப்போது கழிவறைகளைப் பயன் படுத்துகிறார்கள்; தூய்மையான, மகிழ்ச்சியான வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள். காரணம், RC பெரேலி சவுத், RID 3110, மற்றும் B L ஆக்ரோ ஆயில்ஸ் நிறுவனம் என்ற ஒரு பெருநிறுவனம் இணைந்து செயல்படுத்திய ஒரு திட்டம். பெரேலியைச் சுற்றியிருந்த பல கிராமங்களில் கழிப்பறைகளே இல்லை; ஆகவே, பல குடும்பங்கள் வயல்களில் மலம் கழித்துவந்தார்கள். இந்த மோசமான சுகாதார நிலை மற்றும் தூய்மை வசதியின்மையை இந்திய அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது.



PDGs *அருண் ஜெயின், IS தோமர் மற்றும் கன்ஷியாம் கன்டேல்வால் ஒரு கிராமத்தில் கழிவறைக் கட்டிட திறப்பு விழாவில்.*

RC பெரேலி சவுத் ரோட்டரியினர் சுற்றியுள்ள கிராமங்களின் திறந்தவெளி மலங்கழித்தல் பிரச்னையைச் சரிசெய்யத் தீர்மானித்த போது, சங்க உறுப்பினரும், B L ஆக்ரோ ஆயில்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருமான கன்ஷ்யாம் கந்தேல்வால் தன்னுடைய பெருநிறுவனத்தின் CSR அர்ப்பணிப்புகளின் கீழ் இந்தத் திட்டத்துக்கு நிதி வழங்க முன்வந்தார். இதற்காக ஒரு விரிவான சமூக மதிப்பீடும், கிராமத் தலைவர்கள், கிராமத்தில் வாழ்வோரிடம் நேரடி உரையாடலும் நடத்தப்பட்டது. அதன்பிறகு, மூன்று கிராமங்களில் (பர்சகேரா, கௌடியா, கோகில்பூர் மற்றும் நந்தௌசி) 191 வீடுகள் அடையாளம் காணப்பட்டன. இந்த வீடுகள் ஒவ்வொன்றிலும் கழிப்பறைகளைக் கட்டுவதற்காக, CSR-நிதியளிக்கப்பட்ட, மாவட்டத்தால் ஆதரிக்கப்படும் இந்தப் பன்னாட்டு கூட்டுத் திட்டம், திட்ட ஒருங்கிணைப்பாளர் PDG I S டோமர் வழிகாட்டுதலின் கீழ் தொடங்கப் பட்டது. RC கார்னிங், RID 7120, பன்னாட்டுக் கூட்டு அமைப்பாக இணைந்துகொண்டது. கழிப்பறைகளைக் கட்டியபிறகு, அவற்றைப் பராமரிப் பதிலும் நல்ல தூய்மைச் செயல் முறை களிலும் குழுவினர் கிராம மக்களுக்குப் பயிற்சி அளித்தார்கள். கை கழுவுதலின் முக்கியத்துவத்தை மக்களுக்குச் சொல்லித்தந்தார்கள்; எளிய பழக்கங்களால் நோய்களைத் தடுப்பது எப்படி என்று கற்றுத் தந்தார்கள்.



*ரோட்டரியினர் கிராமத்தினருக்கு கை கழுவும் பழக்கத்தை கற்றுக் கொடுக்கின்றனர்.*

பயிற்சி நிகழ்வுகளை நடத்துவதற் காக, இத்திட்டத்தில் பங்கேற்கும் UNICEF, இந்திய மருத்துவ அமைப்பு மற்றும் ரோட்டரி மாவட்டம் 3110 ஆகிய அமைப்புகளிடையே ஓர் MoU கையெழுத்திடப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.35 லட்சம். கழிப்பறைகளைப் பராமரிக்கவும், தங்களுக்குக் கற்றுத்தரப்பட்ட தூய்மைப் பாடங்களைப் பயன்படுத்தவும் கிராம மக்கள் உறுதி கூறினார்கள்.

PDG அருண் ஜெயின் தலைமையில், இந்த வசதிகள் பயன்பெறுவோரிடம் ஒப்படைக்கப்பட்டன.■

# ரோட்டரியின் நட்பு மரங்கள்

ஸ்கேரியா ஜோஸ்

20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, தோழமை, நட்பு மற்றும் சமூக சேவையின் பெயரால் ரோட்டரியினர் மரங்களை நட்டுவந்திருக்கிறார்கள். உலகெங்கும் நடப் பட்டுள்ள இந்த மரங்கள், ரோட்டரிக் கொள்கைகளின் நீடித்திருக்கும் நினைவுச் சின்னங்களாக வளர்ந்துள்ளன.

1920கள், 1930களில், ஓய்வுபெற்ற தலைவர் என்றமுறையில் பால் ஹாரிஸ் பல இடங்களுக்குப் பயணம் செய்தார், பெரும்பாலான பயணங்களில் அவருடைய மனைவி ஜீனும் உடன் சென்றார். இந்தப் பயணங்களின் போது, நல்லெண்ணம் மற்றும் நட்பை உணர்த்தும் வகையில் அவர் மரங்களை நட்டார். 1932ன் இலையுதிர்காலத்தில், ஐரோப்பாவிலுள்ள ரோட்டரி சங்கங்களுக்கு ஐந்து வாரப் பயணமாகச் சென்றார் ஹாரிஸ், வழியில் எல்லா இடங்களிலும் மரங்களை நட்டார். என்னுடைய மாவட்டமான RID 3211ல், நாங்கள் இந்த மரங்களை நெடுங்காலமாகப் பார்த்து வருகிறோம், இவற்றை “ரோட்டரி நட்பு மரங்கள்” என்று அழைக்கிறோம்.



*ஃப்ரான்ஸ் நாட்டிலிருந்து பள்ளி பரிமாற்றத்திட்டம் மூலம் வந்த மாணவி மார்கட் லஸ்ஸாக்னே ஓர் நாற்று நடுகிறார். இவர் தாத்தா ஃபிலிப் குய்லோன் 2004ல் ஓர் செயற்கைக் கால் முகாமிற்கு பண உதவி அளித்துள்ளார்.*

1994ல், 1,000 மாற்றுத்திறனாளிகளுக்குச் செயற்கைக் கை, கால் பொருத்தும் முகாமை முதன்முறையாக நடத்தியது RID 3211. இதற்கு ரோட்டரி ஜெய்ப்பூர் லிம்ப், UK உதவியது. அப்போது நான் ஓர் இளம், 27-வயது ரோட்டரியனாக இருந்தேன், ரோட்டரியில் வெறும் மூன்று வருடச் சேவையையே அறிந்திருந்த எனக்கு, அது வாழ்க்கையை மாற்றும் ஒரு நிகழ்வாக இருந்தது. அன்றைக்கு, செயற்கைக் கை, கால் களைப் பெற்றவர்கள் புன்னகையுடன் வீட்டுக்கு “நடந்து சென்றதை” பார்க்கும்போது, நான் ரோட்டரியின் ஆற்றலை உணர்ந்தேன். உலகெங்குமுள்ள ரோட்டரியன்களின் அன்பை உணர்ந்தேன். உடனே, என்னுடைய முதன்மைத் தொடர்புநபரான RC ஈஸ்ட்போர்ன் சவரன், RID 1120ன் Rtn ஜான் வில்டனுக்கு நான் எழுதினேன், அவருடைய குழுவுக்கு நன்றி தெரிவித்தேன், இந்தியாவுக்கு அவரை அழைத்தேன். அப்போதெல்லாம் மின்னஞ்சலோ ஃபேஸ்புக்கோ இல்லை. அந்தக் கடிதம் இங்கிலாந்து

செல்வதற்கு 30 நாட்களானது. இரண்டு மாதங்களுக்குப்பிறகு, எனக்குப் பதில் வந்தது: உங்களையெல்லாம் பார்ப்பதற்கு நான் வருகிறேன்.'' வில்டனுடைய வருகை, எங்கள் மாவட்டத்தில் ஒரு திருவிழாவைப்போல் கொண்டாடப்பட்டது. கேரளத்தின் மிகச்சிறந்த விழாவான ஓணமும் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பணக்கார ரொட்டேரியன்கள் தான் இந்தத் திட்டத் துக்கான பணத்தைத் திரட்டினார்கள் என்று நான் நினைத்துக் கொண்டி ருந்தேன். ஆனால், இந்த முகாமுக்காகப் பணம் திரட்டுவதற்காகப் பள்ளி மாணவர்கள் கோடைக் காலத்தில் எலுமிச்சைச் சாறு விற்றதையும், இன்னொரு பள்ளியில் இதற்காக ஓர் ஆதரவாளர் நடைப்பயண நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்ட தையும் விவரித்து என்னை வியப்புக் குள்ளாக்கினார் வில்டன். அவர் புறப்பட வேண்டிய நேரத்தில், எங்கள் மாவட்டத்துக்கு வில்டனுடைய வருகையைக் கொண்டாடும்வகையில் ஒரு மரத்தை நடுமாறு வில்டன், அவருடைய மனைவி லிஜ் இருவரையும் நான் கேட்டுக்கொண்டேன்.

அவர்கள் வீட்டில் ஒரு பலாக்கன்றை நட்டார்கள். அதற்கு "ஜான்" என்று நான் பெயர் சூட்டினேன். இன்று வலுவான, 25-வயதான அந்தப் பலாமரம் ஏகப்பட்ட பழங்களைத் தருகிறது. அதே நேரம், அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்திய நாங்கள், அதே தொண்டு அமைப்பின்வழியாக 14,000க்கும் மேற்பட்ட



PDG *ஜான் வில்டன் தான் நட்டு வைத்த பலா மரத்தடியில்.*

செயற்கைக் கை, கால்களை வழங்கியுள்ளோம்.

16 நாடுகளைச் சேர்ந்த ரோட்டரியினர் பலவிதமான பழங்களைத் தரும் இருபத்து நான்கு மரக்கன்றுகளை நட்டுள் ளார்கள். பின்னர், வில்டனும் லிஜ்-ஜும் எங்கள் மாவட்டத்துக்கு RIPRகளாக வந்தார்கள். அது கேரளத்தில் பலாப் பழப் பருவம். "ஜான் மரத்தின்" பழத்தை அவர்களால் சுவைக்க இயன்றது.

நாங்கள் RID 5240, கலிஃபோர்னியாவிலுள்ள இலவசச் சக்கர நாற்காலி அமைப்புடன் இணைந்து பணியாற்றினோம், அதன்மூலம் எங்கள் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு 9,000 சக்கர நாற்காலிகளை வழங்கினோம்.

சுனாமிக்குப்பிறகு நான் இலங்கையில் தன்னார்வலராகப் பணி புரிந்தேன், அங்கிருந்து திரும்பி வரும்போது ஒரு பூக்கும் மரத்தின் கன்றைக் கொண்டுவந்தேன். அது இப்போதும் என்னுடைய தோட்டத்தில் இருக்கிறது. UKவில் பின்பற்றப்படும் கல்வி அமைப்பைப்பற்றி ஆராய்வதற்காகச் சென்றிருந்த போது, அங்குள்ள ஹாலி ஹாக்கி லிருந்தும் இதேபோல் ஒரு கன்றைக் கொண்டு வந்தேன்.

DGE என்றமுறையில், RC சான்டா பார்பரா சன்ரைஸ், RID 5240ன் ஈ ரஸ்ஸல் ஸ்மித்துடன் நான் நன்கு உரையாடினேன், நாங்கள் எங்களுடைய முதல் பொருந்தும் நல்கைச் சக்கர நாற்காலித்திட்டத்தில் பணியாற்றினோம். இதன் மூலம், என் மாவட்டத்தில் 550 சக்கர நாற்காலிகள் வழங்கப் பட்டன. என்னுடைய தோட்டத்தில் ஐந்து நட்பு மரங்கள் நடப்பட்டன. அப்போதிலிருந்து, நானும் ஸ்மித்தும் சேர்ந்து இந்தியா, பங்களாதேஷ், இலங்கை, ஈராக் மற்றும் பாகிஸ்தானுக்குப் பல சக்கர நாற்காலிகளை அனுப்பிவைத்தோம்.

இன்று, நான் என்னுடைய தோட்டத்தில் நடக்கிறேன். ஒவ்வொரு நட்பு மரமும் மனிதகுலத்தில் ரோட்டரியினர் கொண்டு வரும் மதிப்புமிக்க மாற்றங்களை சொல்கின்றன.

இந்த ஆண்டு, RID 3211ல் ஐந்து செயற்கைக் கை, கால் முகாம்களையும், கொச்சி னில் (RID 3201) ஒரு முகாமையும் நாங்கள் நடத்துகிறோம். இதன்மூலம் 650 பேர் பலன் பெறுவார் கள். இதன்மூலம், ரோட்டரி ஜெய்ப்பூர் லிம்ப் UKவுடனான எங்களுடைய 25 ஆண்டுகாலக் கூட்டணியை நாங்கள் கொண்டாடுகிறோம்.■

இக்கட்டுரையாசிரியர்
RID 3211ன்
PDG ஆவார்.

Wordsworld

# ¦zuP[ PÒ
# E ° º ö£ÖQßÓÚ

சந்தியா ராவ்

*மக்களும் இடங்களும் ஒன்று சேர்ந்து மறக்கமுடியாத நேரங்களை உருவாக்குகின்றன.*

டைரக்டொரேட் ஆஃப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் வளாகத்தில், மிக உயரமான கூரையுடன் அழகான ரோஸ்மர வேலைப்பாடுகளும் கொண்ட 19வது நூற்றாண்டின் தொடக்க கால மணல்கல் கட்டடத்தில் அமைந்திருக்கும் மெட்ராஸ் லிடரரி சொஸைட்டி (MLS)யில் மாதம்மா பணி புரிகிறார். சில ஆண்டுகளாக, MLSன் தீவிர ரசிகர்களும் நலன் விரும்பிகளும் அதன் பெருமையை மீண்டும் நிலைநாட்டி அதற்கு புத்துயிர் ஊட்ட முயற்சித்து வருகின்றனர். மறு துவக்கம் என்ற நோக்கத்தில் தான் அண்மையில் ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மகாத்மா காந்தி பற்றிய ஒரு சிறுவர்க்கான புத்தகத்தை ஐந்து அருணாச்சலி மொழிகளில் (நொக்தி, அடி, அபடனி, மிஜு மிஷ்மி மற்றும் நயிஷி மற்றும் அஸாமின் ஒரு மொழியான போடோ) மொழிபெயர்த்து நடத்தப்பட்டது.

சிறுவர்களும் பெரியோர்களும் ஒரு குழுவாக தரையில் வட்டமாக அமர்ந்து புத்தகத்திலிருந்தும் பிற ஆதாரங்களிலிருந்தும் கதைகளை பகிர்ந்து கொண்டிருக்கும்போது, ஒரு குரல் இடைமறிக்கிறது: காந்தி பற்றிய ஒரு பாடலை நான் பாடலாமா? MLSல் பணிபுரியும் வயது முதிர்ந்த மாதம்மாவிடமிருந்துதான் இந்த கோரிக்கை வந்தது.

ஆம், அவரால் முடிந்தது மேலும் இரண்டரை வயதுடைய குழந்தை உட்பட நாங்கள் அனைவரும் குதூகலம் அடைந்தோம். அவர் ராகத்துடன் பாடி முடிக்கும் போது சந்தேகமேயில்லை அது ஒரு மறக்கமுடியாத கணமாக மாறியது. இது அனைத்தும் ஒரு சிறுவர் புத்தகத்தினால் துவங்கியது.


நான் பாடியதற்கு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் ஏனெனில் சுதந்திரப் போராட்டத்தின்போது அவர் சிறுமியாக இருந்தது நினைவுக்கு வருகிறது என பிறகு மாதம்மா கூறினார். எங்கு முடியுமோ எப்பொழுது முடியுமோ அப்பொழுதெல்லாம் நாங்கள் தேசபக்தி பாடல்கள் பாடுவோம் என நினைவு கூர்ந்த அவர், இப்பொழுது கூட அவற்றை நான் பாடும்போது என் இதயம் விரிகிறது என்றார்.

செரென்டிபிட்டி. அற்புதமான நிகழ்வுகளை ஏற்படுத்தும் மகிழ்ச்சியான வாய்ப்பை சித்தரிக்கும் பதம்தான் இது. சில தினங்களுக்கு முன்புதான், பெங்களூருக்கு சென்றிருந்த போது ஒரு நெருங்கிய நண்பர் அவருடைய புத்தக கிளப் குறித்தும் அதன் அதிகபட்ச வயதுடைய ஒரு உறுப்பினர்-ஹோலோகாஸ்ட் என்ற அழிவுகளிலிருந்து உயிர் பிழைத்த ஒரு அற்புதப் பெண்மணி-பற்றி என்னிடம் பேசினார். அவர் அவருடைய ஸ்டார் ஆஃப் டேவிட் பேட்ஜை காட்டும்போது, அவர் அன்பிற்கினிய நெருக்கமான குடும்பத்தில் பரவிய அச்சத்தை நினைவு கூர்ந்தார். அது ஒரு வருத்தமான கணம், ஆனால் அதுதான் அனைவரையும் ஆச்சரியப்படவைத்தது.

புத்தக கிளப்புகள் எனது நண்பருடையது போல சிறியதாகவும் தனியாகவும் இருக்கும். ஒரு பெரும் நம்பிக்கையுடன், டோனி மார்ரிஸன் எழுதிய "பிலவட்" பற்றிய விவாதத்தில் என்னையும் அவர்களுடன் இணைத்துக் கொண்டனர். 1987ல் வெளியிடப்பட்ட பிலவட் புத்தகம், 1856ல் அடிமை நாடான கென்டுகியிலிருந்து சுதந்திர நாடான ஓஹியோவுக்கு அடிமைத்தனத்திலிருந்து தப்பிச் சென்ற மார்கரெட் கார்னர் பற்றிய உண்மைக் கதை அடிப்படையில் அமைந்தது. இன்னொரு செரென்டிபிட்டி நிகழ்வாக, நியூயார்க்கின் ரேண்டம் ஹவுஸ்இல் ஆசிரியராக பணி புரியும்போது, கறுப்பர்களின் சரித்திரம் மற்றும் கலாச்சாரம் குறித்த "தி பிளேக் புக் என்ற புத்தகத்தை எடிட் செய்தார். இதில், எ விசிட் டு தெ ஸ்லேவ் மதர் ஹூ கில்ட் ஹெர் சைல்ட்" என்ற கட்டுரை அமெரிக்கன் பேப்டிஸ் செய்தித்தாலிலிருந்து மறுபிரசுரம் செய்திருப்பதை கவனித்தார். இது எழுதப்பட்டது 1856ல். தலைப்பு சுட்டிக்காட்டுவதுபோல், மார்கரெட் கார்னெர் தனது சிறிய வயது மகளை அடிமைத்தனத்துக்கு தள்ளுவதை விட அவளை கொல்வது என முடிவெடுத்தார். இந்த ஒரு வழி மூலம்தான் அவளை சுதந்திரமாக்க முடியும்; இதுவே, பிலவட் கதையின் கருவாக அமைந்து கதையாக சொல்லவேண்டி வந்தது.

இது எதனைப் பற்றி என்று தெரிந்து கொள்ள ஒரே வழி அதனை படிப்பதுதான்.

ஆனால் எச்சரிக்கை கொள்ளுங்கள்: அது சுலபமானது அல்ல. அது டோனி மார்ரிஸனின் தனித்துவமான நடையில், அவருக்கே உரிய நடையில், கவர்ச்சி






கரமாக, மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் வகையில் அருமையாக எழுதப்பட்டுள்ள ஒன்று. ஆனால் நீங்கள் ஒன்று செய்யவேண்டும். நீங்கள் கதைக்கு சரண் அடைந்து ஒவ்வொரு பதத்தையும் படிக்க வேண்டும் ஏனெனில் ஒவ்வொரு பதமும் இருக்கவேண்டிய இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. ere. There is fear and dread and sorrow, yet the prose is tantalising and beautiful. And you hear the cadences of Black voices.
அதில் அச்சம், பயம், சோகம் உள்ளது ஆனாலும் உரைநடை அற்புதமாக அழகாக உள்ளது. மேலும் நீங்கள் கறுப்பர்களின் குரல்களை கேட்கலாம். அதுதான் டோனி மார்ரிஸனின் சிறப்புத் தரம்.

அதுமட்டுமல்ல, பிலவட் புத்தகம் இன்னமும் சில பள்ளிகளில் தடை செய்யப் பட்டுள்ளது-அதன் விலங்குப்புணர்வு, குழந்தைக்கொலை, பாலுறவு மற்றும் கலவரம் ஆகியவற்றை சித்தரிப்பதால். நாவல் களுக்கான புலிட்ஸர் விருதை 1988ம் ஆண்டு அது பெற்றது. அதனை அமெரிக்காவின் தலை சிறந்த நாவல் என்றும் சிலர் மதிப்பிடுகின்றனர். 1993ல் இலக்கிய நோபல் பரிசு பெற்ற முதல் ஆப்பிரிக்க-அமெரிக்க பெண்மணி டோனி மார்ரிஸன். இவ்வாண்டு தொடக்கத்தில்அவர் இறந்தபோது அவரைப் பற்றி நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் எழுதிய மார்கலிட் ஃபாக்ஸ் கூறுகிறார், அவருக்கு நோபல் பரிசு கொடுத்ததன் மூலம், அவருடைய நாவல்கள் தரும் அழுத்தமான பார்வையும் கவிதை நயமும் அவற்றின் மூலம் அவர் அமெரிக்காவின் உண்மை நிலைக்கு உயிர்கொடுப்பதாக ஸ்வீடிஷ் அகாடமி மெச்சியது. இந்த உண்மை நிலையை மிஸ் மார்ரிஸன் உரைநடையாக தந்து அதில் கறுப்பர்களின் கலாச் சாரம் இழையோடுகிறது. அவருடைய கதை திருப்பங்கள் கனவுபோல் நேர்பாங்கின்றி முன்னும் பின்னும் நகர்ந்து அதிலுள்ள குணாதிசயங்களின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் சரித்திரத்தின் சுமையை சுட்டிக் காட்டுவது போல் உள்ளது.

அடக்குமுறை நிகழ்வுகள் பல வினைகளை தோற்றுவிக்கும், தலை முறைக்கு நீடிக்கும் நாம் அடிக்கடி கவனிப்பது போல. அடக்குமுறை ஆட்சியாளர்கள் மற்றும் ஒடுக்குமுறை யாளர்களிலிருந்து சுதந்திரம் பெறும் போராட்டம், அகதிகள் முகாமில் கைதிகளாக இருக்கும் அனுபவங்கள், பிணை மற்றும் அடிமை ஊழியர்கள், சிறுவர்களை கட்டாயமாக இராணுவ வீரர்களாக்குவது மனிதர்களுக்கு துன்புறுத்தல் ஆகியவைகளுக்கு முடிவே இல்லை. அடிமைத்தனம் என்ற கொடுமை மற்றும் மனநீதியில் மக்கள் நினைவுகளில் ஏற்பட்ட காயங்கள், அடையாளம் மற்றும் சுயமதிப்பு உள்ளிட்ட பல அம்சங்கள் இழக்கப்பட்டன. பிலவட் புத்தகத்தில் அடிமைத்தனத்தின் தாக்கத்தினால் எற்படும் பல விளைவுகளை உண்மை நிலை மற்றும் கனவுலகம் இடையே ஒப்பிட்டு பார்க்கிறார் டோனி மார்ரிஸன், ஆனால் அதே நேரத்தில் தாங்க முடியாத வலியையும் அது ஏற்படுத்தும்.




பிலவட் என்ற தலைப்பு, புத்தகத்தின் குணச்சி த்திரமான பிலவட்லிருந்து எடுக்கப்பட்டது. இவர் தாயாரால் கொல்லப்பட்டு பிறகு ஒரு இளம் பெண்ணாக திரும்பி வருகிறார். இந்த நாள் வரைக்கும், அவர் உண்மையா இல்லை அவர் ஒரு பேயா என்று வாசகர்கள் விவாதிக்கிறார்கள்: நாவல் பலரை குழப்பத்தில் ஆழ்த்தி விடுகிறது. அதே நேரத்தில், வார்த்தை ஜாலங்கள் மற்றும் சக்தி கொண்டு அது செய்வது என்னவெனில் நமது நினைவுகளை கலக்குவது. சரியாக சொல்லப் போனால், நாவலில் ஒரு குணச்சித்திரம் இதனை ஒரு ரீமெமரி என்கிறார்.

உலகளவில் ஒத்துப் போகும் பிலவட் புத்தகத்தின் சில வரிகள் உலகளாவியவை என மார்கலிட் ஃபாக்ஸ் கூறுகிறார். மனதில் வரும் எதற்கு பதிலாகவும் உங்களை எடுத்துக் கொள்ள முடியும் ஒரு வெள்ளையனால்.

வெறும் பணி, கொலை அல்லது உறுப்பிழக்கச் செய்வது மட்டுமல்ல அவர்கள் உங்களை அழுக்காக்குகிறார்கள். எவ்வளவு அழுக்காக்குகிறார்கள் என்றால் உங்களுக்கு உங்களையே பிடிக்காமல் போய்விடும் இனிமேல். உங்களை எவ்வளவு அழுக்காக்கி விடுவார்கள் என்றால், நீங்கள் யார் என்று உங்களுக்கு மறந்தே போகும் மற்றும் அது பற்றி நினைக்கவும் முடியாது. உடனடியாக உங்கள் மனம் செல்வது கற்பழிப்புகள், கூட்டக் கொலைகள், கௌரவக் கொலைகள், முறையில்லா கொலைகள் மற்றும் அழிப்பது Dirty you so bad you couldn't like yourself anymore. Dirty you so bad you forgot who you were and couldn't think it up.Immediately your mind goes to the rapes, the lynchings, the honour killings, the random murders to obliterate other ways of seeing...

அவர் எழுதுவது யாரையாவது மிகத் தொலைவில் இருப்பவர் பற்றிய சரித்திரம் அல்லது கதை அல்ல; இது அனைவருக்குமான கதை. What she writes is not the history or the story of someone somewhere far away, it is the story of everyone. It is my story as much as yours and hers. Toni Morrison is a writer whose works will live as long as there are books to read, and readers to read them. இது எனது கதை போல உமது கதையும் மற்றும் அவருடையதும். படிப்பதற்கு புத்தகங்கள் இருக்கும்வரை, வாசகர்கள் படிப்பதற்கு இருக்கும்வரை டோனி மார்ரிஸன் வழங்கிய படைப்புகள் இருக்கும்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

Light up a life this festive season

Rotary
India Literacy Mission

Celebrate by sending a child back to school @Rs. 2,500/-

Donate Now



For program related query mail to **childdevelopment@rotaryteach.org**
For donation related query mail to **admin@rotaryteach.org**
**www.rotaryteach.org | 033-2486 3434/ 70031 48401**

# ஹரியானாவில் ஆஷா கிரன்-RILM அறிமுகம் செய்கிறது

ரோட்டரி செய்திக்குழு

ரோட்டரி இந்தியா கல்வி அறிவுப்பணி, அதன் ஆஷா கிரன் திட்டம் மூலம், இந்தியாவின் 13 மாநிலங்களில் பள்ளிப்படிப்பிலிருந்து விலகிவிட்ட 37,436 சிறுவர் சிறுமிகளை, அரசு சாரா அமைப்புகள் மூலம் வெற்றிகரமாக தொடர்பு கொண்டு, இவர்களில் 93.7 சதவீத சிறுவர்கள், இத்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் முக்கிய கல்வி திட்டத்தில் சேர்க்கப்பட்டு விட்டனர்.

இரண்டாவது கட்ட தொடக்கத்தில், ஹரியானா மாநிலத்தில், பள்ளிப் படிப்பை கைவிட்ட 3,000 சிறுவர்களுடன் தொடர்பு கொள்ள RILM, Humana People to People India - HPPIவுடன் கூட்டு சேர்ந்துள்ளது. HPPI, ஹரியானா அரசின் சிக்ஷா பரியோஜனா பரிஷத் உடன் ஒரு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதன்படி, பள்ளிப்படிப்பிலிருந்து விலகிக் கொண்ட சிறுவர்களின் பட்டியலை வழங்கி இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் பள்ளிகளையும் ஆசிரியர்களையும் அடையாளப்படுத்தி



*RILM செயற்குழு உறுப்பினர் PDG அனிருதா ராய் சௌத்ரி மற்றும் HPPI இயக்குனர் கைலாஷ் கன்டேல்வால் ஆஷா கிரண் திட்டத்திற்கு RILM அலுவலகத்தில் ஒரு ஒப்பந்த கையெழுத்திட்டனர். PDG வினோத் பன்சால், RID கமல் சங்வி, RIPN சேகர் மேத்தா மற்றும் PDG கிஷோர் குமார் ஆகியோரும் உடன் உள்ளனர்.*

கடம் (Kadam) என்ற ஒரு கல்விக் கருவி மூலம் பள்ளிப் பிள்ளைகளுக்கு தரமான பாடத்திட்டக் கல்வி கிடைக்க HPPI உறுதியாக வழிவகை செய்யும். வயதுப் பொருட்டே இல்லாமல் மாணவர்கள் அவர்களுடைய தற்போதைய கல்வி நிலையை பொறுத்து அவர்களாகவே திட்டம் வகுத்துக் கொள்ள அனுமதிக்கிறது இக்கருவி. பின்னர் அவர்கள் வழக்கமான பள்ளிகளில் சேர்ந்து பயில தயார் செய்கிறது.■

# சிறுவர்களுக்கு பல் பரிசோதனை

பலவித ஊனநிலைகள் கொண்ட சிறுவர்களை கவனித்துக் கொள்ளும் அனுபூதி விஷன் சேவா சன்ஸ்தானத்தில், அரசு டென்டல் கல்லூரியுடன் இணைந்து இலவச பல் பரிசோதனை முகாமை இன்டோர் மேக்தூத் ரோட்டரி சங்கம், RID 3040 ஏற்பாடு செய்தது. பல்வேறு பல் தொடர்பான நோய்களுக்காக எட்டு மருத்துவர்கள் அடங்கிய குழு ஒன்று 70 சிறுவர்களை பரிசோதித்து அவர்களில் 30 பேருக்கு பல்வேறு குறைபாடுகளுக்காக சிகிச்சைகள் பரிந்துரைக்கப்பட்டன. பல் பாதிப்புகளுடைய எல்லா சிறுவர்களுக்கும் தனியார் மருத்துவமனையில் இலவச சிகிச்சை தரப்படும் என்றார் சங்கத் தலைவர் கன்ஷ்யாம் சிங்.



*பல் மருத்துவ முகாம்.*

பல் மருத்துவர்களின் தலைமைப் பொறுப்பிலிருந்த Dr விருந்தா சக்சேனா, பெரும்பாலான மாணவர்கள் பற்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதில்லை; மாணவர்களிடையே கவனிக்கப்பட்ட பொதுவான பாதிப்பு, விட்டமின் பற்றாக்குறையால் ஏற்படுவதே என்றார். பல் ஆரோக்கியத்தைப் பற்றி சிறுவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விளக்க, மருத்துவர்களுக்கு சங்க உறுப்பினர்களும் உதவினர். ஆரோக்கியமான பல் குறித்த வழக்கங்களை உறுதியாக கைகொள்ளும் வகையில் பல் தொடர்பான பயன்பாட்டுப் பெட்டிகளை மாணவர்களுக்கு சங்கம் வழங்கியது.■

Rotary PEOPLE OF ACTION

# இருட்டில் ஓர் இரவு உணவு

ரோட்டரி செய்திக்குழு



DG *ஜிதேந்திர டிங்ரா மற்றும் இதர உறுப்பினர்கள் இருட்டில் இரவு உணவு என்னும் நிகழ்ச்சியில்.*

உங்களுடைய அன்றாடச் செயல்பாடுகளில் ஈடுபடும்போது, சில விநாடிகளுக்கு உங்களுடைய கண்களை மூடிப் பார்த்ததுண்டா? முயன்றுபாருங்கள்; விழித்திறன் குறைபாடுள்ளவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள். பார்வையில்லாதவர்களுடைய தேவைகள், அன்றாடச் சிரமங்களைப் பற்றிய நுண்ணுணர்வை ரோட்டரியனர் மத்தியில் உருவாக்கும் நோக்கத்துடன், RC சண்டிகர் ஷிவாலிக், RID 3080 ஒரு புதுமையான நிதி திரட்டலுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதன் பெயர், 'ரோட்டரி இருள் இரவு உணவு' (RDID). இதை DG ஜிதேந்திர டிங்ரா தொடங்கிவைத்தார், இதில் பல்வேறு சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களைப் பார்வையற்ற மக்கள் கும்மிருட்டான அறையில் அவர்களுடைய இருக்கைகளுக்கு வழிநடத்தினார்கள். இரவுணவு இருண்ட சூழலில் பரிமாறப்பட்டது. கும்மிருட்டில் சாப்பிடுவது, பார்வைத்திறன் குறைபாடுள்ளவர்களால் விருந்தளிக்கப்படுவது, பரிமாறப்படுவது ஆகியவை ஒரு புதுவிதமான உணர்வு அனுபவங்கள். நாங்கள் தொடுகை, உணர்தலின் மூலம் எங்களுடைய உணவை தேடிப் பெறவேண்டியிருந்தது என்றார் சங்கத் தலைவர் அனீஷ் பனோட். பார்வையற்ற மக்களுடைய சிறப்புத் தேவைகள், அவர்கள் அனுபவிக்கும் 'அன்றாடப் போராட்டங்களை'ப்பற்றிய விழிப்புணர்வை உருவாக்கியதுடன், பார்வைத்திறன் குறைபாடுள்ள, தகுதிமிக்க மாணவர்களுடைய உயர்கல்விக்கான ஆண்டு உதவித்தொகைகளுக்கான நிதியையும் திரட்டியது RDID.

### பார்வை என்னும் பரிசு

'இருட்டில் விருந்து' என்கிற புதுமையான இந்த முயற்சி, உலகின் வண்ணங்களைக் கண்டு ரசிக்கக்கூடிய கச்சிதமான கண்பார்வையுடன் இருக்கிற தாங்கள் எந்த அளவு அதிர்ஷ்டசாலிகள் என்று ரோட்டரியன்களை உணரச் செய்தது. அத்துடன், பார்வையை இழந்துவிட்ட மக்கள்மீது ஓர் ஆழமான மதிப்பையும் இந்த நிகழ்ச்சி உண்டாக்கியது, என்கிறார் பனோட்.

பார்வைத்திறன் குறைபாடுள்ள ஷிவ் குமார் ஷர்மா என்பவரை RC சண்டிகர் ஷிவாலிக் கௌரவ உறுப்பினராக இணைத்தார் DG டிங்ரா.

மேலும், அவர் இந்த ஆண்டுக்கான உதவித்தொகைக்கு ரூ.21,000 ஆதரவளித்தார். இதுவரை, கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.3.8 லட்சம் மதிப்புள்ள உதவித்தொகைகள் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த, பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றார் அவர்.■

Rotary PEOPLE OF ACTION

# புற்றுநோய் வடிகட்டல் முகாம்களை நடத்தியது RC கந்தேவி

ரோட்டரி செய்திக்குழு

RC கந்தேவியும், RC சிக்லி ஆற்றுப்பகுதியும் இணைந்து ஏழு கிராமங்களில் ஒரு வாரத்துக்கு நடத்திய மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் வடிகட்டல் முகாம்களில் 800க்கும் மேற்பட்ட கிராமப்புற மற்றும் பழங்குடியினப் பெண்கள் பரிசோதிக்கப்பட்டார்கள். நவ்சாரி மாவட்ட நல அலுவலகத்தைச் சேர்ந்த டாக்டர் மெஹ்சுல் டெலிவாலா முன்னிலையில் DGE பிரஷாந்த் ஜானி இந்த முகாம்களைத் தொடங்கிவைத்தார்.

RC அம்ராவதி, RID 3030 வழங்கிய மார்பகப் புற்றுநோய் கண்டறியும் பேருந்தின் உதவியுடன், இக்குழுவினர் கிராமம் கிராமமாகச் சென்று கிராமப்புறப் பெண்களைப் பரிசோதித்தார்கள். உள்ளூர் நலத் துறையின் நல்ல ஆதரவால், சிறப்பாக, ASHA பணியாளர்களுடைய ஆதரவால், ஏழு முகாம்களிலும் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து நிறையப் பெண்கள் வந்திருந்தார்கள். 175க்கும் மேற்பட்ட மார்பகப் புற்று நோய் அறிதல், பரிசோதனைகளும், 385க்கும் மேற்பட்ட கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் அறிதல் பரிசோதனைகளும் செய்யப்பட்டன. அனைத்துச் செலவுகளும் நன்கொடைகளின் வாயிலாக எங்களால் நேர் செய்யப்பட்டன என்றார்




Villagers with Rotarians at a cancer screening camp.

நல்கைகள் ஒருங்கிணைப்பாளர் மற்றும் அதிகாரக்குழு உறுப்பினர் பரிமள் நாயக்.

இதற்கு முன்னால், 2010 மற்றும் 2014ல், குஜராத் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் வழங்கிய மார்பகப் புற்றுநோய் கண்டறிதல் பேருந்தொன்றின்மூலம் இச்சங்கம் இரண்டு புற்றுநோய் வடிகட்டல் முகாம்களை நடத்தியுள்ளது. ஜனவரி 2000ல் தொடங்கப் பட்ட இந்தச் சங்கம், நலிந்த மக்களுக்குச் சேவை புரியும் தன்னுடைய திட்டங்களால் 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் நன்கு புகழ்பெற்றுவிட்டது, என்றார்.

அடுத்த ஆண்டுக்குள், ரூ.1 கோடி மதிப்புள்ள ஒரு புற்றுநோய் வடிகட்டல் வேனை வாங்கி உரிமை கொள்வதற்கான ஒரு பன்னாட்டு நல்கைக்கும் இச்சங்கம் திட்டமிடுகிறது. மார்பகப் புற்றுநோய் கண்டறிதல் சேவைகளுடன், கர்ப்பப்பை வாய், வாய், ப்ரொஸ்டேட், கருப்பை மற்றும் இரத்தப் புற்றுநோயைக் கண்டறியவும் நாங்கள் இந்த மருத்துவ வேனைப் பயன்படுத்துவோம், என்றார்.■

# Changes to Areas of Focus

The Rotary Foundation recently made changes to Rotary's Areas of Focus. Some of the goals of the areas have changed, and activities that relate to the environment have been included for most areas. The names of three of the six areas (marked with asterisks) have been adjusted to better reflect the types of projects that Rotary members are carrying out. The Areas of Focus Policy Statements, available at *my.rotary.org/en/document/areas-focus-policy-statements*, reflect these updates.

**The areas of focus are now:**

- Peacebuilding and conflict prevention*
- Disease prevention and treatment
- Water, sanitation and hygiene*
- Maternal and child health
- Basic education and literacy
- Community economic development*■



# வாழ்வுமுறை மருந்து மருத்துவ கவனிப்பின் அடிப்படை மாற்றம்

ஷீலா நம்பியார்

லைஃப்ஸ்டைல் மெடிசின் (வாழ்வு முறை மருந்து) என்கிற ஒரு புதிய துறை, ஆரோக்கியம் மற்றும் உடல்நலம் குறித்த மருத்துவர்கள் மற்றும் நோயாளிகளின் அணுகுமுறையை மாற்றி வருகிறது. நீண்ட கால நோய்களுக்கு அறிகுறி சார்ந்த சிகிச்சை, சாத்தியம் அல்லது சரியானது என இனிமேலும் நாம் நம்புவதில்லை. பிரச்சனையின் மூலக்காரணத்தை கண்டுபிடித்து அதை நிவர்த்தி செய்வது தான் முறையான வழி. நீண்ட கால நிர்வாகத்துக்கும் குணப்படுத்தலுக்கும் பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்வுமுறை மாற்றங்கள் மீது LM கவனம் செலுத்துகிறது. இவைகள், சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், மன அழுத்தம், உடல் பருமன், சோரியாசிஸ் மற்றும் தீர்க்க முடியாத சேதங்கள் உள்ளிட்டிருக்கும்.

LM என்பது வாழ்வு முறை தொடர்பான நீண்டகால நோய்களை தடுக்கவும் சிகிச்சை செய்யவும் இயல்புநிலை ஏற்படுத்தவும் வேண்டிய ஆதாரம் சார்ந்த அணுகுமுறை சிகிச்சையாகும்.

நவீன அலோபதி மருந்து, LM உடன் வேறுபடுகிறது என இதிலிருந்து பொருள் கொள்ளக்கூடாது. உண்மையாக சொல்ல வேண்டுமானால் இவைகள் இரண்டுமே பரஸ்பரம் சார்ந்திருப்பவை. தீவிர நிலைகள், தொற்றுகள், அறுவை மற்றும் நோயறியும் நடைமுறைகள், தரமான ஆய்வு ஆகியவையின் சிகிச்சையில் பல்மடங்கு முன்னேற்றத்துக்கு முக்கிய காரணமாக அலோபதி மருந்து விளங்கி மனித உயிர்களை பல ஆண்டுகளாக காப்பாற்றியுள்ளது.

அமெரிக்கன் காலேஜ் ஆஃப் லைஃப் ஸ்டைல் மெடிசின் என்று அமெரிக்காவில் தொடங்கப்பட்ட இந்த LM இப்பொழுது உலகம் முழுதும் பரவி நாடுகள் அவைகளின் பிரத்தியேக அமைப்புகளைக் கொண்டுள்ளது. இந்தியாவில் உள்ள நாம் இன்டியன் சொசைட்டி ஆஃப் லைஃப் ஸ்டைல் மெடிசின் அமைத்துள் ளோம். இதன் குறிக்கோள்-ஒரு நோயாளி மற்றும் அவரின் உடல்நலக் குறைபாட்டை முழுமையான நிலையில் பார்வையிடுவது (அவரின் உணவுப் பழக்கம், உடற்பயிற்சி மற்றும் நகர்வுகள், தூக்கம், அழுத்தம், நச்சுக்கள் வெளிப்பாடு போன்றவை) மற்றும் அவர் குணமடையும் காலத்தில் இத்தகைய பிரச்சனைகளை தீர்க்க உதவுவது. நோயாளி அவருடைய ஆரோக்கியத்துக்கான பொறுப்பை அவரே எடுத்துக் கொண்டு அதன் வெளிப்பாட்டை அவரே நிர்ணயிப்பதற்கான திறனை அவருக்கு வழங்கும் ஒரு வழிதான் இது.

பரபரப்பாக இயங்கும் ஒரு மருத்துவ மனையில், மருத்து வர்களாகிய நாம், நீண்ட கால நோய் சரித்திரத்தை குறித்து பேசு வதற்கும் நீண்ட கால அறிவுரை தருவதற்கும் அல்லது அடிக்கடியான நேர்காணலுக்குமான நேரம் குறைவாகவே கிடைக்கிறது.

ஆனால் LM முறையில், மருத்து வர்கள் ஊட்டசத்து ஆலோசகர்கள், உடற்பயிற்சி வல்லுனர்கள், மனநல நிபுணர்கள், உடல்நல பயிற்சியாளர்கள், மற்றும் இதர தொடர்பான ஆரோக்கிய நிபுணர்கள் இடையேயான ஒரு கூட்டு அணுகுமுறை மூலம் நிர்வகிக்க நோயாளிக்கு உதவுவது. இந்த கூட்டு முயற்சி, LM குடையின் கீழ் ஒரு முழுமையான கவனிப்பைத் தருகிறது.

LM, ஒவ்வொரு நோயாளிக்கும் ஒவ்வொரு நோய்க்கும் வெவ்வேறு மட்டங்களிலும் கட்டங்களிலும் பயன்படுகிறது. வெளிப்படையாக, ஒரு தீவிர நிகழ்வின்போது (உதாரணமாக, ஒரு வயது முதிர்ந்த பெண் கீழே விழுந்து விட்டார்), வாழ்வுமுறை மாற்றம், சிகிச்சையின் முதல் அடுக்காக இருக்காது. அவருக்கு தேவை நோயறிதல், ஒருவேளை அறுவை சிகிச்சை மற்றும் மருந்தளிப்பு. இத்தீவிர நிகழ்விலிருந்து மீண்டு விட்டால், LM அறிமுகம், அவரின் அடிப்படை பிரச்சனைகளை கவனிக்கும்.

ஊட்டம் (ஒருவேளை, கால்சியம், புரதம் அல்லது ஊட்டப் பொருள் ஏதேனும் பற்றாக்குறையுடன் இருந்தால்), அவருடைய நலிவுத் தன்மை (வயது மற்றும் செயல்பாடற்றத் தன்மை சார்ந்த தசை இழப்புக்கு தகுந்த உடற்பயிற்சி திட்டம் ஒன்றின் மூலம் அதனை எதிர்கொள்ளலாம்), அவரின் சமநிலை (சமநிலையை மேம்படுத்தும் உடற்பயிற்சி உதவியுடன்), அவரின் மனநிலை (ஒருமுறை ஒருவர் விழுந்து விட்டால், மீண்டும் விழுந்து விடுவோமோ என்ற அச்சத்தால் ஆட்கொள்ளப்பட்டு அவரின் அசைவுகளுக்கு தடை ஏற்பட்டு கூடுதல்







பிரச்சனை தோன்றிவிடுகின்றன). அவருடைய ஆரோக்கியத்துக்கு ஒரு பல்துறை கூட்டு கவனிப்பு மாடல் அவரை முழுமையாக குணப்படுத்தும்.

புதிய துறையான LM, தடுப்பு மருந்து முறை, தனிநபர் அல்லது அவரவருக்கேற்ற மருந்து முறை, ஒருங்கிணைந்த முறை ஆகிய கிட்டத்தட்ட கூட்டு முறைகளிலிருந்து மாறுபட்டுள்ளது. நிச்சயமாக தலையீட்டு இலக்குகளில் ஒரே மாதிரியாக இருந்தாலும் தத்துவத்திலும் முறையின் வரம்பிலும் பெரிய முக்கிய வேறுபாடுகள் உள்ளன.

இந்தியாவில் LM நிலைநிறுத்திக் கொண்ட நிலையில், பல கூடுதல் மருத்துவர்கள் இதனை கைக்கொண்டு அவர்களின் சுய சிகிச்சை முறைகளில் இதனை சேர்த்துக் கொள்வார்கள் என நாம் நம்புகிறோம். ஒருவரின் சுய ஆரோக்கியத்தின் அதிமுக்கிய அம்சமான நடத்தை மாற்றம், ஊட்டம், உடற்பயிற்சி, தூக்கம் ஆகியவற்றை எதிர்கொள்ளும் திறனை அறிந்து கொள்வது. இதனை புறக்கணித்தால், அவைகள் நீண்டகால நோயின்



ஒரு அறிகுறி சார் சிகிச்சை மட்டுமே வழங்கும்.

2000ம் ஆண்டில், என்னுடைய அனைத்து பரிந்துரைகளிலும் உடல்நலம் மற்றும் ஊட்டம் ஆகியவற்றை புகுத்தி, நோயாளிகளுடன் வாழ்வு முறைகளை மாற்றவேண்டியதை குறித்து பேசி நோயாளி கவனிப்பில் நான் வாழ்வுமுறை மாற்றத்தை அறிமுகப்படுத்திய போது இது வழக்கமானதாக இருக்கவில்லை. உடற்பயிற்சி என்பது ஒரு சிகிச்சை முறை என்று கூட கருதப்படவில்லை. தொடர் உடற்பயிற்சி, உடல் பருமன், சர்க்கரை நோய் அல்லது மன அழுத்தம் மட்டுமல்ல, வேறு பல அம்சங்களுக்கும் பல நன்மைகளை தருகிறது என்பதை இன்று நாம் அறிந்து கொண்டு ஒப்புக்கொள்கிறோம். உதாரணத்துக்கு ஒரு வலி நீக்கும் மாத்திரையை பரிந்துரைக்காமல் வாழ்வு முறையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளுமாறு நான் அறிவுறுத் தியதற்கு பல நோயாளிகள் ஆச்சரியப்பட்டனர். இதற்கு முயற்சியும் நேரமும் தேவைப்பட்டன. ஆனால் இன்று எனது பெரும்பாலான நோயாளிகள் அவர்களின் வாழ்வு முறைகள், குடும்பப் பின்னணி மற்றும் அழுத்தம் பற்றி கேள்விகள் எழுப்புவது அவர்களுக்கு பழகிப்போய் விட்டது. நோயாளிகளிடம் பேசும்போது ஒரு படி மேலே சென்று அவர்களுடைய வாழ்க்கையின் பல்வேறு அம்சங் களை பற்றி பேசுவது பிரச்சனையின் பாதியளவை தீர்க்கிறது என நான் நினைக்கிறேன்.



### LMன் நூதன பங்கு

- நீண்டகால நிர்வகிப்புக்கும் குணமடைதலுக்கும் வாழ்வுமுறை நடத்தை மீது கவனம் கொள்கிறது.
- ஒவ்வொரு நடைமுறைக்கும் ஒவ்வொரு நோயாளிக்கும் ஏற்ப உள்ளது.
- அறிவுரைகளை தேவைப்படும் போது தர, இது தொடர்பான மருத்துவ கவனிப்பு நிபுணர்களை சேர்த்துக் கொள்வதன் மூலம், கூட்டு கவனிப்பு மாடலை வலியுறுத்துகிறது.
- உறுதியாக்கப்பட்ட ஒரு தலையீட்டு அணுகல்களை பயன்படுத்துகிறது (உடல்நல அறிவுறுத்தல் மற்றும் பரிந்துரை, உணவளவு அறிவுரை மற்றும் கவுன்சலிங், CBT, ஊக்கம் தரும் அறிவுரை, குழு அடிப்படையிலான சிகிச்சை மற்றும் தலையீடு)
  - நோயாளிகளின் தீவிர பங்கேற்பு பொறுத்து முடிவு அமையும்.
  - குழு சிகிச்சை முறையில் அறிவுரையை பின்பற்ற குடும்பத்தை ஈடுபடச் செய்வது.
  - ஒரு பொறுப்பான ஸ்பெஷலிஸ்டை கூட்டு அறிவுரை சந்திப்புகளில், முடிந்தால் ஈடுபடச் செய்வதன் மூலம், தொடர்பான துறைகள், சிறப்புத் துறைகளுடன் கூட்டு சேர்ந்து தேவைப்படும்போது நோயாளி பற்றிய தகவலை ஸ்பெஷலிஸ்டுக்கு தருவது.
- தீவிர சிகிச்சை சார்ந்த வாழ்வுமுறை மாற்றம் – உள்ளமைப்பு நோயாளி கவனிப்பு, உணவளவு, உடற்பயிற்சி, அழுத்த நிர்வாகம், கவுன்ஸிலிங், ஓய்வு, தியானம் போன்றவை மூலம் தீவிர நோயை இயல்பு நிலைக்கு திருப்புவது.

நீண்டகால நோயை கண்டறிந்து அதன் மூல காரணத்தை ஒழிக்கும் மருத்துவ கவனிப்பு மாடலாக LM திகழவேண்டும். சீராக இம்முறையை கைக்கொண்டால், பொருளாதார ரீதியில் நோயாளிகளை பெரிதும் பாதிக்காமல் நீண்ட கால நோய்களை ஒழிக்கும் திறன் படைத்ததாக விளங்கும்.

இதன் ஆசிரியரை
*sheelanambiar@gmail.com* என்ற
இணையதளத்தில்
தொடர்பு கொள்ளலாம்.
*Website:www.drsheelanambiar.com*



RC **காட்டுமன்னார்கோவில்** — RID 2981
RC உயர்நிலைப் பள்ளியில் நடத்தப்பட்ட ஒரு இருதய பரிசோதனை முகாம் சுமார் 400 பொது மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்தது.

RC **சேலம் குகை** — RID 2982
பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. சிறப்பு விருந்தினர் DG டாக்டர் A K நடேசன், கல்வி உபகரணங்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.






RC **உஜ்ஜயின்** — RID 3040
RILM மற்றும் இதர அதிகாரபூர்வ கூட்டமைப்புகளுடன் நகரத்தில் ஒரு மின்-கற்றல் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. 50 பள்ளிகளுக்கு பாடதிட்ட மென்பொருள் வழங்கியது மட்டுமின்றி நாற்பத்தி ஆறு தொலைக்காட்சிப் பெட்டிகளும் அரசுப் பள்ளிகளில் நிறுவப்பட்டன.

RC **சோப்டா** — RID 3030
பதினோரு ஆசிரியர்களுக்கு, தாசில்தார் அனில் கவிட், “நேஷன் பில்டர்” விருதுகளை வழங்கினார். மஹாராஷ்டிரா அரசின் சிறந்த பொறியாளர் விருது பெற்ற A G விலாஸ் பாடீல் கௌரவிக்கப்பட்டார். சங்கத் தலைவர் நிதின் ஜெயின் மற்றும் பிற ரோட்டரியினர் கலந்து கொண்டனர்.



# சங்க சேவைகள்

**RC பிகானெர் மிட்டவுன்** — RID 3053
பேங்க் ஆஃப் பரோடாவுடன் இணைந்து, சங்கம், ஒரு வாட்டர் கூலர் மற்றும் வடிகட்டும் அமைப்பை மாணவர்களின் நன்மைக்காக சிஸ்டர் நிவேதிதா பெண்கள் கல்லூரிக்கு வழங்கியது.



**RC சிக்லி ரிவர் ஃப்ரன்ட்** — RID 3060
சிக்லியின் டி இ இடாலியா சர்வஜனிக் உயர்நிலைப் பள்ளிக்கும் கெர்காமின் இன்னொரு பள்ளிக்கும், RC கான்டெவியுடன் இணைந்து, இரண்டு R O குடிநீர் வசதி சங்கம் தந்தது. இந்த முயற்சியால் 2,000க்கும் அதிகமான கிராமப்புற சிறுவர்கள் சுத்தமான குடிநீரை பெறுவார்கள்.



**RC அம்ரித்சர் நார்த்** — RID 3070
ஆசிரியர் தின அனுசரிப்பு தொடர்பாக தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் எட்டு ஆசிரியர்களுக்கு PDG அருண் கபூர், நேஷனல் பில்டர் விருதுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட அதிகாரி H சல்வீந்தர் சிங் சம்ரா கலந்து கொண்டார்.




**RC சுனம்** — RID 3090
டாக்டர் ககன்தீப் ரோட்டரி பப்ளிக் பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மருத்துவ மற்றும் பல்நல முகாமில் 300க்கும் அதிகமான மாணவர்களும் ஆசிரியர்களும் பயன் பெற்றுக் கொண்டனர். பக்வான்தாஸ் அரோரா தான அறக்கட்டளை மற்றும் குருநானக் டென்டல் கல்லூரியின் மருத்துவர்கள் நோயாளிகளை பரிசோதித்தனர்.



**RC சன்டவுஸி சிட்டி ஸ்டார்** — RID 3100
ஒரே முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் மற்றும் பாலித்தீன் பைகளுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஒரு பிரச்சாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுமக்களுக்கு ரோட்டரியினர் துணிப் பைகளை வழங்கினர்.



**RC லக்னோ** — RID 3120

Dr சரிதா சக்ஸேனா, CMO, Dr ராம் மனோஹர் லோஹியா மருத்துவமனை, அவர்களை சிறப்பு விருந்தினராக கொண்டு ஒரு ஆரோக்கிய விழிப்புணர்வு துவக்கப்பட்டது. மேலும், பெண்கள் ஆரோக்கியம் குறித்த ஒரு பயிற்சி வகுப்பும் ஏற்பாடு செய்யப்பட்டு இதில் சுமார் 200 பெண்களுக்கு சானிட்டர் நாப்கின்கள் வழங்கப்பட்டன.



**RC பிரதிகாரன்** — RID 3131

ஆதித்யா பிர்லா மருத்துவமனையுடன் கூட்டு சேர்ந்து, நிக்டி பஸ் நிலையத்தின் 400 பஸ் ஊழியர்களுக்கு ஒரு ஆரோக்கிய முகாமை கிளப் ஏற்பாடு செய்தது. ECG, சர்க்கரை, இரத்த அழுத்தம் போன்ற பரிசோதனைகளும், பல் மற்றும் ஆரோக்கிய ஆலோசனைகள் போன்றவையும் பயனாளிகளுக்கு உபயோகமாக அமைந்தன.



**RC பாம்பே செம்பூர் வெஸ்ட்** — RID 3141

மாணவர்களுடன் இணைந்து ஒரு மரம் நடும் முயற்சி, கர்நாடகா உயர்நிலைப் பள்ளியில் மேற்கொள்ளப்பட்டது. ரூ.2,000 மதிப்புள்ள இந்த திட்டத்தின் மூலம் இப்பகுதி மக்களிடையே ரோட்டரி நற்பெயர் பெற்றது.



**RC உல்ஹாஸ்நகர்** — RID 3142

பெட் ஆக்ஸ்ஃபோர்ட் பள்ளியில் நடத்தப்பட்ட விஞ்ஞான திட்டப் போட்டியில் பதினோரு பள்ளிகள் பங்கு கொண்டன. மூன்று பிரிவுகளில் 45 விளக்கக்காட்சிகள்/காட்சிப் பொருள்கள் இதில் அமைக்கப்பட்டிருந்தன. சிறந்த திட்டத்துக்கு ஒரு கோப்பையும் பணப்பரிசும் வழங்கப்பட்டன.



**RC பத்ராச்சலம்** — RID 3150

ஆதர்ஷ் நகரில் உள்ள MPP பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்களும் இதர காகிதப் பொருள்களும் வினியோகிக்கப்பட்டன.



# சங்க சேவைகள்

RC **தாடிபர்த்தி** — RID 3160

40 அங்கவீன மக்களுக்கு தலா ரூ.300 மதிப்புள்ள மளிகைப் பொருள்கள் வழங்கப்பட்டன. யெர்ரகுன்டபள்ளி ஆரம்பப் பள்ளி, ரோட்டரி ஆரம்பப் பள்ளி மற்றும் நரசாபுரம் ZPH பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு நோட்டுபுத்தகங்கள், பள்ளிப் பைகள், ஸ்லேட்டுகள் வழங்கப்பட்டன.



RC **கும்தா** — RID 3170

காலங் கடந்த Rtn மோஹன் K ஷெட்டி நினைவாக நடத்தப்பட்ட ஒரு நீச்சல் போட்டியில் சுமார் 100 போட்டியாளர்கள் பங்கேற்றனர். ரோட்டரேக்டர்கள் இதற்கு ஆதரவு தந்தனர். ஹொன்னாவரிலுள்ள பள்ளி மாணவ மாணவிகளுக்கு சுமார் 400 நடவுக்கன்றுகள் வழங்கப்பட்டன.





RC **பாலேஹொன்னூர்** — RID 3182

ஷிமோகாவின் சஹ்யாத்ரி நாராயணா மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் உதவியுடன் ஒரு பெரிய ஆரோக்கிய முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 300 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு ரூ.40,000 மதிப்புள்ள மருந்துகள் வினியோகம் செய்யப்பட்டன.



RC **கோயம்புத்தூர் மெரிடியன்** — RID 3201

ஒன் கேர் மெடிக்கல் கேர் மையத்தின் கூட்டுடன், ஊனத்தை திருத்தும் அறுவை சிகிச்சைகளுக்கு ஒரு சிறப்பு முகாம் ஊனமுற்ற சிறுவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 20 சிறுவர்கள் அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டனர்; அவர்கள் மேலும் பரிசோதனை செய்யப்படுவார்கள்.



RC **சென்னை க்ரீன் சிட்டி** — RID 3232

சென்னை அருகே ஆலமத்தி கிராமத்தில் நடத்தப்பட்ட ஒரு மார்பக புற்றுநோய் பரிசோதனை முகாமில் 105 பெண்கள் பரிசோதிக்கப்பட்டனர். நவீன உடல்நல கவனிப்பு வசதிகளுக்கு வெகு தொலைவில் உள்ள இடத்தில் வசிக்கும் இந்த கிராம மக்களுக்கு இந்த முகாம் ஒரு வரபிரசாதமாக அமைந்தது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

## Rotary News Subscription Remittances

**You can pay the Rotary News / Rotary Samachar subscription online**

**Our Bank details:**

| | | |
|---|---|---|
| Bank | : | HDFC Bank SB Account |
| Branch | : | Montieth Road Egmore, Chennai |
| A/c Name | : | Rotary News Trust |
| A/c No. | : | 50100213133460 |
| IFSC Code | : | HDFC0003820 |

**E mail us following details:**

Name of Club

President/Secretary's name

Amount/Date of transfer/UTR Number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,217,369 |
| Clubs | : | 36,023 |
| Districts | : | 538 |
| Rotaractors | : | 164,445 |
| Clubs | : | 9,933 |
| RCC | : | 10,704 |

As on October 20, 2019


## Membership Summary

As on October 1, 2019

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 114 | 4,759 | 221 | 33 | 231 | 177 |
| 2982 | 69 | 3,135 | 154 | 62 | 113 | 51 |
| 3000 | 128 | 5,221 | 463 | 219 | 672 | 195 |
| 3011 | 81 | 3,501 | 748 | 46 | 112 | 25 |
| 3012 | 87 | 3,604 | 756 | 41 | 130 | 56 |
| 3020 | 78 | 4,064 | 232 | 39 | 466 | 349 |
| 3030 | 90 | 4,871 | 593 | 65 | 310 | 165 |
| 3040 | 97 | 2,161 | 239 | 30 | 124 | 140 |
| 3053 | 71 | 3,063 | 554 | 9 | 56 | 95 |
| 3054 | 130 | 6,078 | 1,043 | 71 | 321 | 470 |
| 3060 | 101 | 4,290 | 531 | 59 | 125 | 138 |
| 3070 | 103 | 3,096 | 314 | 42 | 161 | 57 |
| 3080 | 79 | 3,318 | 260 | 63 | 218 | 108 |
| 3090 | 76 | 1,982 | 50 | 27 | 37 | 122 |
| 3100 | 75 | 1,804 | 94 | 7 | 75 | 146 |
| 3110 | 116 | 3,926 | 347 | 23 | 49 | 104 |
| 3120 | 75 | 3,299 | 408 | 19 | 62 | 52 |
| 3131 | 130 | 5,448 | 1,205 | 80 | 294 | 90 |
| 3132 | 99 | 3,772 | 367 | 37 | 213 | 150 |
| 3141 | 91 | 5,448 | 1,251 | 104 | 258 | 84 |
| 3142 | 94 | 3,434 | 621 | 67 | 203 | 65 |
| 3150 | 98 | 3,598 | 347 | 51 | 235 | 109 |
| 3160 | 71 | 2,439 | 128 | 19 | 48 | 81 |
| 3170 | 125 | 5,562 | 563 | 48 | 317 | 161 |
| 3181 | 74 | 3,310 | 281 | 28 | 216 | 108 |
| 3182 | 84 | 3,227 | 231 | 19 | 275 | 95 |
| 3190 | 131 | 5,048 | 661 | 111 | 362 | 51 |
| 3201 | 141 | 5,309 | 332 | 89 | 133 | 49 |
| 3202 | 130 | 5,006 | 258 | 68 | 437 | 46 |
| 3211 | 139 | 4,473 | 289 | 6 | 89 | 124 |
| 3212 | 99 | 4,167 | 377 | 86 | 280 | 142 |
| 3231 | 78 | 3,266 | 267 | 35 | 204 | 239 |
| 3232 | 113 | 4,667 | 717 | 107 | 325 | 80 |
| 3240 | 88 | 3,054 | 353 | 34 | 151 | 156 |
| 3250 | 101 | 3,967 | 700 | 47 | 210 | 183 |
| 3261 | 71 | 2,609 | 348 | 3 | 102 | 43 |
| 3262 | 90 | 3,444 | 432 | 37 | 73 | 75 |
| 3291 | 146 | 3,738 | 702 | 82 | 134 | 599 |
| | **3,763** | **147,158** | **17,437** | **2,013** | **7,821** | **5,180** |
| 3220 | 67 | 1,921 | 260 | 74 | 202 | 72 |
| 3271 | 83 | 1,500 | 265 | 46 | 17 | 13 |
| 3272 | 162 | 2,875 | 412 | 41 | 37 | 38 |
| 3281 | 206 | 5,657 | 825 | 193 | 93 | 188 |
| 3282 | 143 | 4,084 | 446 | 98 | 48 | 41 |
| 3292 | 119 | 4,570 | 686 | 119 | 121 | 109 |
| **S Asia Total** | **4,543** | **167,765** | **20,331** | **2,584** | **8,339** | **5,641** |

*Source: RI South Asia Office*


# On the racks




## An Orchestra of Minorities

Author : **Obioma Chigozie**
Publisher : **Hachette India**
Pages : **528; `599**


Shortlisted for the Booker Prize 2019, this book is about a young farmer named Chinonso who prevents a woman from falling to death. Bonded by this incident, he and Ndali fall in love. But it is a mismatch according to her family who rejects him because of his lowly status. You cannot tell if it is love or madness that makes Chinonso think he can change his destiny. Set across Nigeria and Cyprus, the book is written in the mythic style of the Igbo tradition and weaves a heart-wrenching tale about fate versus free will.




## Temple Tales

Author : **Sudha G Tilak**
Publisher : **Hachette India**
Pages : **200; `299**

This delightful book opens the doors to the secrets and surprises hidden in temples across India. These unique temples are not just places of worship, but living museums of architectural wonders, mind-boggling sculptures, graceful dances, colourful crafts and other cultural legacies of the country. More than anything, they are treasure troves of lore and legend, teeming with tales of gods and goddesses, demons and devotees, plants and beasts, the magical and the mysterious — all just waiting to be discovered by you. The author takes you on an unusual journey to the country’s most sacred places, where the lines between fact and faith are blurred, thus creating interesting stories.




## Look Young, Live Longer

Author : **Glenn Harrold**
Publisher : **Hachette India**
Pages : **170; `299**

Re-programme your mind to build the confidence and motivation you need. In this straightforward, no-nonsense seven-step programme, clinical hypnotherapist Glenn Harrold shows you how to reconfigure the mind for a better life. Sprinkled with tips and suggestions on how to lead a happy life, the book has easy-to-follow tools, techniques and guidance on how to set aright problematic issues. Setting personal goals and how to achieve them; working out an exercise plan to improve your health; boosting self-esteem and banishing negativity; adopting good sleep patterns; cultivating positive relationships; and coping with stress are dealt in a crisp and straightforward manner. Read the book to become a fitter and younger you.

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S

LBW

# அயல்நாட்டில் தங்கும் வசதி

TCA ஸ்ரீநிவாச ராகவன்

ஆறு ஆண்டுகளுக்கு முன் நான் பணிஓய்வு பெற்றதிலிருந்து என்னுடைய விருப்பம்போல் எதனை வேண்டுமானாலும் செய்ய எனக்கு நேரம் கிடைத்தது. பயணம் என்பது சாத்தியமில்லை ஏனெனில் என் மனைவி பல்கலைக்கழகத்தில் பணி புரிவதால் கோடையில் மட்டுமே விடுமுறை கிடைக்கும்-இது இந்தியாவில் பயணம் மேற்கொள்ள சரியான நேரம் கிடையாது. அதனால் ஒவ்வொரு கோடையிலும், சில வாரங்களுக்கு நாங்கள் வெளிநாடு செல்ல முயற்சிப்போம்; அங்கு ஒரு பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பணியில் இருக்கும் எனது மகனுடன் இருப்போம் அல்லது மார்க்கெட் பகுதியிலுள்ள ஏர்பிஎன்பி அடுக்கு மாடி குடியிருப்பில் தங்குவோம். இது ஏனெனில் ஐரோப்பாவின் ஓட்டல்கள் மிகவும் மோசமாக இருக்கும் என எனது மகன் சொல்வது உண்மைதான். இந்தியாவுடன் ஒப்பிட்டால், Airbnb தங்கும் வசதியை விட இவைகள் அவ்வளவு நன்றாக இருக்காது, மேலும் இவைகளின் கட்டணமும் அதிகம்.

இந்தியாவில், மூன்று நட்சத்திர ஓட்டல்கள், அரசு தங்கும் வசதிகள் போன்ற சாதாரண இடங்களும் ஐரோப்பிய ஓட்டல்கள் வழங்கும் வசதிகளை விட நூறு மடங்கு அதிக அளவு, உணவு மற்றும் சேவை வசதிகளை தருகின்றன. ஆனால் ஒப்பிட்டால் சுமாராக இருக்கும் மிக அதிக கட்டணத்துடன் உள்ளன. இது அவர்களின் ரயில் பயணங்கள் முரண்பாடாக இருக்கும். நமது முதல் வகுப்பு ஏஸியை விட அவர்களுடைய இரண்டாம் வகுப்பு வசதிகள் சிறப்பாக இருக்கும். அங்குள்ள பயணதூரம் குறைவு, நமது பயணதூரம் அதிகம் என்ற நிலையில், இது மாறிய நிலையில் இருக்கவேண்டும். ஆச்சரியம்தான்.

இந்தியாவும் ஆசியாவின் பிற நாடுகளும் தங்கும் பயணிகளை நிறையவே சந்தோஷப்படுத்து கின்றன. மலிவாக இங்கு கிடைக்கும் ஓட்டல்கள் கூட ஐரோப்பாவில் கிடைப்பதை விட அதிக வசதியுடன் சொர்க்கலோகமாக தெரிகின்றன. மசூரியில் அற்புதமான, பழமையான புதுப்பிக்கப்பட்ட ஆங்கிலேயர் பங்களாவில் ஒருமுறை தங்கியது என் நினைவில் இருக்கிறது. 1883ம் ஆண்டு கோர்ட்னி பெரெக்ரின் இல்பெர்ட் என்ற ஒரு அரசு வக்கீலுக்கு ஒரு நல்ல யோசனை உதித்தது; வெள்ளை இன மக்களை இந்திய நீதிபதிகள் விசாரிக்கலாம் என்ற ஒரு சட்டத்தை அவர் கொண்டு வந்தார்.

வெள்ளை இன மக்கள், குறிப்பாக கல்கத்தாவில் இருப்பவர்கள் இதற்கு மனம் குலைந்துபோய், இந்திய நீதிபதிகள் வெள்ளை பெண்மணிகளுடன் உல்லாசமாக உள்ளனர் என்ற வதந்தியை பரப்பி இந்த சட்டத்தை பாதி வலுவிழக்கச் செய்துவிட்டனர்.

ஐரோப்பாவில் கோடை காலத்திய ஒரு பெரிய பிரச்சினை என்னவெனில், ஏர்கண்டிஷனிங் இருக்காது. அங்கு மிக அதிக அளவு வெப்பமாகவும் ஈரப்பதம் மிக்கதாகவும் இருக்கும். ஒரு முழுநாள் சுற்றுலா முடித்து ஏர்பிஎன்பி குடியிருப்புக்கு அல்லது அறைக்கு திரும்பும்போது, நடு இரவில் காற்று சிறிது குளுமையாகும் வரை வெப்பத்தை நீங்கள் அனுபவித்துத்தான் ஆக வேண்டும். அங்கு மின்விசிறிகளும் இருப்பதில்லை; நீங்கள் கேட்டாலும், அவர்களிடம் இருந்தால் இருக்கும். பெரும்பாலும் அவர்களிடம் இருப்பதில்லை.

பல அரசு விருந்தினர் மாளிகைகளும் ஒருவிதத்தில் புதுப்பிக்கப்பட்ட அங்கிலேயர் காலத்து பங்களாக்கள்.2001 முதல் 2010 வரை மசூரியில் உள்ள IAS அகாடெமிக்கு விரிவுரைகள் ஆற்ற ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இருமுறை செல்வதுண்டு. அப்பொழுது அவர்களின் விஐபி விருந்தினர் விடுதிகளில் என்னை தங்க வைப்பார்கள்; அது ஒரு அருமையான இடம், ஆனால் அதில் ஒரு முறையை நான் கவனித்தேன். குளிர் காலத்தில், சாஹிப்கள் வருகை தராதபோது, அவர்கள் எனக்கு பெரிய அறைகள் ஒதுக்குவார்கள்; கோடை காலத்தில், சாஹிப்கள் குடும்பத்துடன் வந்து இறங்கிவிட்டால், எனக்கு நாய்வீடுகளை தருவார்கள். சிறிய அறைகள் இவை. ஒருமுறை டெல்லி ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் லிருந்து வந்த ஒரு மூத்த புரொபஸருக்கு அடித்தளத்திலுள்ள ஒரு அறை ஒதுக்கினார்கள். குளிர் காலத்தில் அவருக்கு ஒரு விஐபி சூட் கிடைத்திருக்கும்.

இந்த முறை பற்றி எனது சக ஆசிரியரிடம் பேசியபோது, அவர் என்னை இல்பெர்ட் மேனர் இல் தங்கும்படி ஆலோசனை கூறினார். அது இன்னும் இருக்கிறதா எனக்கு தெரியவில்லை.

அதிர்ஷ்டவசமாக, எனது மனைவி ஒரு வருட ஓய்வு விடுமுறையில் இருப்பதால், இப்பொழுது நாங்கள் மகிழ்ச்சியாக இந்தியாவுக்கும் தெற்காசியாவுக்கும் பயணம் மேற்கொள்ளலாம். இதனை மிகவும் ஆவலுடன் நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். விஸா பிரச்சினைகளும் இருக்காது. பயங்கர கட்டணங்களும் இருக்காது. இன நிற பேதங்கள் இருக்காது.■

# சுவராஸ்யமான செய்திகள்




## பெட்டி அணிந்துக் கொண்டு பரீட்சை

*ஹாவேரி மாவட்டத்தின் பகத் P U கல்லூரி மாணவர்கள் மத்திய கால தேர்வு எழுத வந்த போது, அவர்கள் தலையில் அணிந்து கொள்ள மாற்றியமைக்கப்பட்ட அட்டைப் பெட்டி அனைவருக்கும் தரப்பட்டது. மாணவர்கள் தேர்வில் காப்பியடிப்பதை தடுக்கும் பொருட்டு கல்லூரி முதல்வர் இந்த நூதன வழிமுறையை கையாண்டார். அட்டைப்பெட்டியின் முன்பக்கம் மட்டுமே திறந்த நிலையில் அவர்களின் பதில் தாள்களை பார்க்கும் படி இருக்க பக்கவாட் டுகள் அனைத்தும் மூடப்பட்டு இருந்தன. இந்த நிர்வாகி வாட்ஸ் அப்பில் மாணவர்கள் தலையில் இப்பெட்டிகளுடன் தேர்வு எழுதும் புகைப்படத்தை வெளியிட, இதனைப் பார்க்க நேரிட்ட பியுசி வாரியத்தின் துணை இயக்குனர் உடனடியாக கல்லூரிக்கு செ ன்று இந்த பரிசோதனைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.*



## ஊன்றுகோலுடன் கிளிமஞ்சரோவை கைப்பற்றல்

*கேரள மாநிலத்தின் ஆலுவா பகுதியை சேர்ந்த உடல் ஊனமுற்ற நீரஜ் ஜார்ஜ் பேபி (32) ஊன்றுகோல்களுடன், ஆப்பிரிக்காவின் மிக உயர்ந்த மலைச் சிகரமான கிளிமஞ்சரோவின் முனையை எட்டினார். அவருக்கு ஒன்பது வயது இருக்கும்போது, புற்றுநோய் கட்டிக் காரணமாக கால்கள் துண்டிக்கப்பட்டன. இப்பயணத்தில் பங்கு பெற்ற பொருள்கள், பல ஊன்றுகோல் ஜோடிகள் மற்றும் மலையேறும் காலத்தில் தேய்ந்து போகும் புஷ்களை மாற்ற ஒரு டஜன் புஷ்கள் மட்டுமே. கொச்சி அட்வகேட் ஜெனரல் அலுவலகத்தில் பணி புரியும் நீரஜ், வயநாட்டின் பக்ஷிபதலம் வரையிலும் மூணாறு மற்றும் கோடைக்கானல் இடையே உள்ள இன்னொரு சிகரத்தையும் எட்டியுள்ளார். 2008ஆம் ஆண்டின் உடல் ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் பந்தயப் போட்டியில், இரட்டையர் பிரிவு பாட்மின்டன் போட்டியில் தங்கப் பதக்கமும் ஒற்றையர் பிரிவில் வெள்ளிப் பதக்கமும் வென்றவர் இவர்.*



## மராத்தான், இந்திய முறையில்

*இந்திய பாரம்பரிய உடையில் மராத்தான் ஒட்டம் மேற்கொள்வது இப்போது பிரபலமாகி வருகிறது. பல பெண்களும் (ஆண்களும் ) புடவைகளிலும் சல்வார் கமீஸுகளிலும் பர்க்காவிலும் வசதியாக உணருகின்றனர். கிராந்தி சால்வி (50), ஜெயந்தி சம்பத்குமார் (46) ஆகியோர் 2018, 2017ம் ஆண்டுகளில் ஒன்பது கெஜ புடவைகளில் உலக சாதனை படைத்தனர்; இந்த ஜனவரி மாதத்தில், மும்பையை சேர்ந்த ஷாஹிதா கரோலியா (31) பர்தா அணிந்து மராத்தான் ஓட்டத்தை மேற்கொண்டார். புனே போன்ற சில நகரங்கள் புடவை ஓட்டங்களை நடத்துகின்றனர். உடையைப் பற்றி கவலைப்படாமல், ஆரோக்கியத்தை முன்னிறுத்தி மராத்தான் ஓட்டத்தில் கலந்து கொள்ள பெண்களுக்கு ஊக்கம் தருவதே இதன் நோக்கமாகும். பல புடவை வகைகளை ஆய்வு செய்து, தமிழ் மடிஸார் புடவை வகையே ஓட்டத்துக்கு பொருத்தமானது என்று ஜெயந்தி தெரிவித்துள்ளார்.*

## செயற்கை கால்களுடன் பேஷன் நடை



*பர்மிங்காமை சேர்ந்த குழந்தை டெய்சி-மே டிமீட்டர் (9) கால் அடிப் பகுதியில் இருக்கவேண்டிய எலும்பு முழுவதும் அல்லது ஒரு பகுதி இல்லாத நிலையான ஃபைபுலர் ஹெமிமெலியா பாதிப்புடன் பிறந்தவர். அவளுக்கு 18 மாதமாக இருக்கும் போது அவளுடைய கால்கள் நீக்கப்பட்டு செயற்கை கால்கள் பொருத்தப்பட்டன. ஒரு பிரெஞ்சு குழந்தைகள் பிராண்டுக்காக பாரீஸின் ஐஃபல் டவரில் மேடையில் பேஷன் நடை மேற்கொண்டபோது பேஷன் உலகத்தையே திரும்பி பார்க்க வைத்தார். நியூயார்க், லண்டனுக்கு அடுத்து, இது அவருடைய மூன்றாவது பேஷன் நடையாகும்.*



## ஒரு நாய் கடத்தல்

*புனேவின் வந்தனா ஷாவுக்கு ஒரு ஆன்லைன் உணவு, டெலிவரி செய்யப்பட்ட பிறகு தான் தெரிந்தது அவளின் வளர்ப்பு பீகள் நாய் காணவில்லையென்று. பல மணி நேரமாக தேடியும் நாய் கிடைக்காததால், வந்தனா அதனை தேடிச் சென்றார். அக்கம்பக்கம் விசாரித்தபோது தெரிந்தது டெலிவரி பையன் அந்த நாயை தூக்கிச் சென்று விட்டான் என்று. வந்தனா அவனை மொபைலில் கூப்பிட்டு பல நிமிடங்களாக கேள்விகளில் துளைத்ததும் நாயை அவன் எடுத்துச் சென்று அவன் கிராமத்துக்கு அனுப்பி விட்டதை ஒத்துக் கொண்டான். வந்தனா குடும்பம் ஊழியரை பற்றி ஆன்லைன் ஏஜென்ஸிக்கும் காவல்துறைக்கும் புகார் அளித்தது. டுவிட்டரில் இந்த ஏஜென்ஸி பற்றி கடுமையாக குறை கூறியதற்கு பலரும் ஆதரவு தந்தனர். இறுதியாக நாய் குட்டி அதன் உரிமையாளரிடம் போய் சேர்ந்தது.*

ஒருங்கிணைப்பு: ஜெயஶ்ரீ; வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Regn. No. – TN/CCN/677/2019–2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: `35
Rotary News Tamil published on 1st of every month

